ரிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா.

தினமணி

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1-12
வேளி நாட்டிற்கு ,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

ஏஜெண்ட், ஸ. வெ. இயற்கை.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு கு. 1,
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு கு. 2,
நீடித்த விளம்பரத்துக்கு தனி விசிதம்

மாலை 7 | சோடு, பிரஜோத்பத்தி ஆடிமீ 25a (9—8—1931) | மலர் 15

கவனியுங்கள்!

கவனியுங்கள்!!

ஆயிரக்கணக்கான நற்சாட்சி பத்திரங்களும், தங்க மெடல்களும் பரிசுபெற்றது,

டாக்டர் சிங்காரம் அவர்களின்

உலகப்பிரசித்திபெற்ற உண்மையான மருந்துகள்.

சாமகேசரி குளிகை.

(தங்கபஸ்பம் சேர்ந்தது)

தாதுபுஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இம்மாத்திரைகள் தாதுபுஷ்டியையும் தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தலிலும் பிரசித்தி பெற்ற பலவித யூனானி சரகுகளும் அசல் தங்க பஸ்பமும் சேர்த்து சாஸ்திர முறைப்படி தயார் செய்யப் பட்டது.

வயது சென்றதாலும், மிதமிஞ்சிய சம்போகத்தாலும், பலவித தொர் அப்பியாசங்களாலும் இழந்து போன ஆண் தன்மையானது இம்மாத்திரைகளை சாப்பிட ஆரம்பித்தவுடன், மீண்டும் அதிகரிக்கச் செய்கிறது. பலக்குறைவு, கைகால் அசதி, சோம்பல், இடுப்புவலி, சம்போக காலத்தில் ஏற்படும் நரம்புத்தளர்ச்சி, தூரி தவ்கவிதம், சொற்பனல் கலிதம் முதலிய கொடிய வியாதிகளைப்போக்கும். சரீர புஷ்டியும், தீரோக்காந்தியும், வீரிய விருத்தியும், மிகுந்த ஆண் தன்மையும் உண்டாகும். தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி இல்லர இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச் செய்யும். யாதொரு பத்தியமில்லை.

80 மாத்திரைகள் விலை ரூ. 10—0—0
40 மாத்திரைகள் விலை ரூ. 5—8—0

மஹரா சந்தனாதித் தைலம்.

(ஓர் யோகீஸ்வரரின் அனுபவ முறை)

இத் தைலத்தில் அநேகவித பச்சிலை மூலிகைகள் சேர்ந்திருப்பதால் சரீரத்திலுள்ள உஷ்ணத்தையும் நீக்கிக் குளிர்ச்சியைக் கொடுப்பதுடன் கண்களில் உண்டாகும் பலவித வியாதிகளையும் ஆச்சரியமாய் குணம் செய்கிறது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இத்தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கண் எரிச்சல், கண்ணில் நீர்வடிதல், கண் கூச்சம், கண்குத்தல் சதைவளர்தல், மேகநீர் வெள்ளெழுத்து, மண்டையிடி, ஒருத்தலை நோய், பீனிசம், காதுநோய், காதுமந்தம், சரீரத்தில் அதிக உஷ்ணத்தினால் உண்டாகும் திரேக காந்தல், கிருகிருப்பு, மயக்கம், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல், மூளைகொதிப்பு, நித்திரை யின்மை, தலைமயிர் உதிர்தல் முதலிய சகலவித நோய்களையும் குணம் செய்வதுடன் சரீரத்திலுள்ள எவ்விதி உஷ்ணத்தையும் நீக்கி கண்களுக்கும், மூளைக்கும் குளிர்ச்சியைக் கொடுக்கும்.

இத்தைலத்தை ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம் இத்தைலத்தை உபயோகித்தவர்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள்தோறும் வந்து குவிகிறது. ஒரு முறை இத்தைலத்தை உபயோகித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும்.

24 அவுன்ஸ் டின் விலை ரூ. 4—0—0
12 அவுன்ஸ் டின் விலை ரூ. 2—2—0

வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம். முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்குக் கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் 5 ரூபாய் அனுப்பவும்.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

வேளிவந்து விட்டது ! வாங்கத்தவராதீர்கள் !!

மூந்துங்கள் !!!

நாளது ஆகஸ்டுமீ த்திற்குள் நடக்கும் பொது எலெக்ஷனுக்கு முன் வாங்குங்கள் !

புதிய பஞ்சாயத்துகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும், டிஸ்டிரிக்ட்டு போர்டுகளுக்கும், இவைகளின் மெம்பர்களுக்கும், ஆங்கிலமறியாத பொது ஜனங்களுக்கும் வெகு முக்கியமான

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம்ஹ்ரு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

மிகவும் துல்லியமானதும் எளிதில் புரியும் படியான அழகிய தமிழில்

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

(வக்கீல், அகில இந்தியா லா ஜர்னல் பத்திராசிரியர் திருவல்லூர்) அவாகளால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சொற்பகாப்பிகளே எம்மிடம் உள்ளன.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—6—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

நீமோனியாக்காலில் தணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறாய்?

சுவாச காச நிவாரணி.

ஆயிரகணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சிதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல் வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆல்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடியபடி 1க்கு 1-4-0. தபால் கூலி அணா. 4.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெருவு, செல்வாய்ப்பேட்டை, சேலம். S. I.

சோல் ஏஜண்டுகள்:—

தாதா & Co., 52 ஸைனியப்ப நாயகன் தெரு மதராஸ்.
K. S. மேதா & Co., 234, சைனுபஜார் ரோட் மதராஸ்.
வள்ளச்சாமி, No. 300, சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்

சித்த ரசம்.

சகலவியாதிகளுக்கும் ஏற்றது
ஒரு முறை பரீட்சியுங்கள்.
புட்டி 1க்கு ரூ. 1—0—0
டஜன் 1க்கு ரூ. 10—0—0
ஏஜண்டுகள் தேவை
அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்புக

சி.பி. சாமி, சித்தமருந்து செய்சாலை பழனி S.I.

"சன்மார்க்கன்"

உயரிய தமிழ்
மாதப்பத்திரிகை.
ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.
ஆசிரியர் (நாவலூற்று)
சி. சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி

அரசாங்க இஞ்சினியர்களில் 14 பேர்களாலும், மற்ற பிறபலர்களாலும் மதிக்கப்பெற்ற

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்".

50 படங்களுடன் 200 பக்கங்களடங்கிய புஸ்தகம் விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாட்டு ஆடர்களுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். ஏஜண்டுகள் தேவை.

மோட்டார் ஸ்கூல் 1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸும், பாட்சாலை சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தேன் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், சென்னை.

அகத்தியர் ஆராய்ச்சி.

இது சென்னை இராஜதானி கலாசாலை தமிழ் ஆசிரியரும் கலாவல்லருமான பண்டிதர் உயர்திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் அனேக நூல்களை ஆராய்ச்சி செய்து பல ஆதாரங்களைக்கொண்டு எழுதப்பட்டதாகும்.

விலை அணு 0—2—0 தான். வேண்டுவோர் 3 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

பகுத்தறிவு விடுதலை.

அல்லது ஜீவாத்மா இல்லை, என்னும், இப்புத்தகம் சிறந்த ஆராய்ச்சி நூலாகும். முன், பின், ஜென்மம், மூடப்பழக்கவழக்கங்கள் முதலியன ஆராயப்பட்டிருக்கின்றன. சடங்குகள், அதன் சிலவு, கடவுள் ஆராதனை விக்ரக வணக்கம் முதலியன கண்டிக்கப்பட்டிருப்பதோடு பல ஆதாரங்களினாலும், மேற்கோள்களாலும் விளக்கப்பட்டிருக்கின்றது. சித்திரப்படங்களுடன் 100 பக்கங்கள் கொண்டது.

விலை அணு 6, 7 அணு ஸ்டாம்பு அனுப்புவோருக்கு அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புஸ்தகசாலை, ஈரோடு.

இனிது இனிது, இன்ஜெக்ஷனிலும் இனிது
R. K. பழனிஸ்வாமிகள்

இன்டியன் சக்தி முக்தி ஆயில்.

இவ்வற்புத சஞ்சீவினியை, எந்த ஜீவராசிகளுக்கேனும் உடல் வாதனையேற்பட்ட காலத்தில், டைரகஷனில் கூறியவண்ணம் மேல்பிரயோகமாக, சகல வியாதிகளுக்கும் உபயோகிக்க, உடனுக்குடனே நற்குணமளித்து, ஆபத்ரக்ஷகனைப்போல் நன்கு குணப்படுத்துவதால் ஒவ்வொரு குடும்பங்களிலும் பல ஆபீஸ், மில்கள், பற்பல இஞ்சின் சகலடிரைவர்களிடமும், மிஷின்கள் ஓடுமிடவகளிலும், நானுவித ஆயுதங்கள் புழங்கும் கிடங்கு, பட்டறை, ஒர்க்ஷாப், முதலானவிடங்களிலும், பல மிருக ஜாதிகளிடம் பழகுபவர்களிடமும், காடுகரை, தோட்டம், மலை, மரம், மண், நவரத்தினதிவுபரசக்கனிகளில் தொழில் புரிபவர்கள் முதலான மகாஜனங்கள் ஒவ்வொருவர்களிடமும், முக்கியமாய் இத்தைலமிருக்குமானால், உலகத்தில் பம்பரம்போல் சுழன்றோடி ஓடிக்கொண்டிருக்கும் பற்பல அபாய விபத்துகளின் இம்சைகளினின்றும் பல அபமிர்த்துக்களினின்றும், சில கண்ம நோய்களினின்றும் விஷக்கடி, வெட்டுக்காயம், ரண வியாதிகளினின்றும் மீட்கப்படலாமென்பது மிகவும் உறுதி. இதின் முழு விபரங்களைப்பற்றி நமது கேட்லாக் மூலமாய் சகல உண்மைகளும் அறியலாம். கேட்லாக் இனம்.

1 அவுன்ஸ் சக்தி முக்தி ஆயில் விலை ரூ. 2—0—0
1/4 அவுன்ஸ் ... ... விலை ரூ. 0—8—0

கோ. கோவிந்தராஜுலு செட்டியார்,
மனிகை அண்டு ஷாப் வியாபாரம்,
(துரையூர்) முசிரி தாலூகா, திருச்சி ஜில்லா.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

என் குற்றம் சொல்லுகிறீர்கள்?

(கைவல்யம்)

பிறவியிலேயே உயர்வு தாழ்வுகளும் பிறவியிலேயே தனிப்பட்ட உரிமைகளும் இருப்பதை ஆதரித்து அதைப் போக்கவேண்டுமென்னும் கொள்கையைச் சுயமரியாதை இயக்கமூடையதினால், பிறவியிலேயே உயர்வுதாழ்வுகளும், பிறவியிலேயே தனி உரிமைகளும் கற்பிக்கும் எதையும் சுயமரியாதை இயக்கம் கண்டிக்கவே செய்திருக்கிறது.

மகாத்மா சொல்லும் இராம ராஜ்ய சுயராஜ்யத்திலும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானத்திலும் வருணாச்சிரமத்தின் அடிப்படை அடங்கியிருப்பதால் சுயமரியாதைத் தலைவர் அதைக்கண்டிக்கிறார். அப்பொழுது "மகாத்மாவைக் குற்றம் சொல்லுகிறார்கள், காங்கிரசைக்கண்டிக்கிறார்கள்" என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்கள் சுயமரியாதைக்கு ஆதரவிருக்காதென்றும் அது அழிந்து போகுமென்றும் சிலர் சிலவற்றை எழுதியிருக்கிறார்கள். சிலர் சொல்லுகிறார்கள். அதை அழித்துவிட வெளிப பிரயத்தனம் செய்யவேண்டுமென்று பிரயத்தனமும் செய்திருக்கிறார்கள். எப்படி இருந்தாலும், சொல்லுவதும் அழிக்கப்பிரயத்தனப்பட்டாலும் உண்மையையும் நியாயத்தையும் சுயமரியாதை இயக்கம் சொல்லியே தீரவேண்டும்.

தென்னாட்டு யோக்கியரும் பெருந்தன்மையுடைய உள்ளமும்கொண்டவருமுடைய மனிதர்கள் எல்லாரிடத்திலுமிருக்கிறார்கள். ஆலோசித்து உண்மையைத்தெரிந்து கொள்ளுகிறவர்கள் கண் எதை காட்டிலுமுண்டு. நமது வைதிக இராஜதந்திரிகளின் பஞ்சாங்கத்தில் வேண்டியவைகள் பதிலாகாவிடினும் புதிய புலம் பிறந்து விட்டதென்பதைச் சுயமரியாதை இயக்கம் உணர்கின்றது. பிறியனிடம் தனுமதி கேட்காமல் மனுஷத்தன்மை சோர்வையும் வைதத்தில் சினேகமையும் மரம் இயற்கையிலே விளைவது போல சுயமரியாதைத்தத்துவங்கள் யாரையும் எதிர்பாராமல் சனசமூகங்களிடையே பரவிக்கொண்டிருக்கின்றன.

மனிதன் தனது சுயார்த்தமான குணங்களையும் கூட்ட கோபதாபங்களையும் விரும்பினால் புதிய அனுஷ்டானம் புதியதொரு தன்பக்கருவியாகத்தோன்றும். நாம் உண்மையான சத்தியத்தையும் காரிய சித்திக்குரிய அனுஷ்டானத்தையும் ஒன்முகத்தருகிக்குழப்பியே பழகியிருப்பதால் தருமவிதியிடத்தில் ஆசேபனையும் தவறம்பிக்கையுமுண்டாகின்றன. இப்பொழுது பல ஜனங்கள் தரும விதியைத்தெய்வீகமாயெண்ணி ஆதரிக்கும் நமது வருணாச்சிரம தருமங்கள் அந்த விதியைக்காட்டிலே தாழ்ந்து விடுகின்றன: ஜனத்தைக்காட்டிலும் ஜாதியே பெரிதென்ற கொள்கை பலவிதமான தந்திரங்களால் பண்டைக்கால முதற்கொண்டு இன்று வரையிலும் கற்பித்துக்கொண்டே வருகிறார்கள். எவ்வளவில் நமது நாட்டில் உயர்ந்த ஜாதிக்காரர்களின் ஜாதியத் தன்னலக்கொள்கையின் உச்சியில் சமயத்தை காப்பாற்றி வைத்துக்கொண்டிருந்தால் தான் தாங்கள் எல்லா விதமேன்மையிலும் வாழ்ந்து கொண்டிருக்கலாம். அதற்காகவே பல தெய்வங்களையும் பல சாஸ்திரங்களென்பவைகளையும் ஏற்படுத்தி வைத்தார்கள். சாஸ்திரம், தெய்வம், மகான் இவைகளால் சொல்லப்பட்டவைகளை ஏளனஞ்செய்யும் தன்மையில் பாமர மனிதர்கள் மூன்று நாற்கிறதையாகத் தங்கள் ஸ்தானத்தைத் தெட்டிப்படுத்திக்கொண்டார்கள்.

உலகமெல்லாம் புகழும் பெரியவரும் எவ்வாராலும் மதிக்கும் மகாத்மாவும் சுதந்தரச் சுயராஜ்யம் வேண்டுமென்பதும் மகாத்மா காந்தியுமான வரைக் குற்றம் சொல்லலாமா? யென்கிற கேள்வியைத்தான் "குடி அரசு" பதில் சொல்லவேண்டியது அவசியமாகும். ஒன்றுக்கு மற்றொன்றைச் சொல்லி மழுப்பிவிடும்படியான சமாதானத்தைத்தேடாமல் ஆலோசித்துப் பார்க்கும் அறிவுடையவர்கள் நமதுப் பார்சன் என்பது எல்லோருக்குந்தெரியுமானதால் விசாரித்ததிலும் புத்தி என்றபடி அந்தப்புத்தியிலே நமதுப் பிற்கு வெட்கப்படுவது மனிதன் உயர்ந்த குணத்தினிலொன்றென்பதை காட்டாமலிருப்போம்.

மகாத்மாகாந்தியார்தான் 'எல்லோரும் கீதையைப்படியுங்கள். விதவைகளை மணந்து கொள்ளுங்கள்!' என்று சென்னையில் சொன்னார். உடனே மும்பாயிலுள்ள பார்ப்பனர்கள் கூட்டம் கூடி மகாத்மாவைக்கண்டித்தார்கள், எதிர்த்தார்கள். மகாத்மா காந்திக்கு சமஸ்கிருத ஞானமில்லையென்றார்கள், சமய சாஸ்திரப் படிப்பில்லை என்றார்கள். காஞ்சிபுரத்தில் சமய அந்தஸ்து எல்லா இந்துக்களுக்கும் ஒன்றே யென்கின்ற சத்தேகத்தீர்மானத்திற்கே சனாதன மகாநாட்டுக்கூட்டத்தில் அந்தத்தீர்மானத்தை ஆசேபித்தார்கள். சுயராஜ்யம் வந்தவுடனே கோவில் பிரவேசத்தைத்தடுத்தால் அந்தக்கோவில்கள் பறிவர்த்தனை செயயப்படுமென்று ஜாஹிர்வால் சேரு சொல்ல மகாத்மா காந்தி ஆமோதிக்க அதைப்பத்திரிகையில் கண்டு பார்ப்பனர்கள் சபை கூடிக்கண்டித்தார்கள். அது என்? வருணாச்சிரமம்போய் விடும். தப்பொழுது தங்கள் ஜாதி உயர்வும் தங்கள் மேன்மையும் போய்விடும். ஆனதால் மகாத்மா காந்தி சொன்னவை களை மாத்த வேண்டுமென்பது தானே? அதுபோல வருணாச்சிரம சுயராஜ்யமும் இராம ராஜ்யமும் வந்து விட்டால் மற்றவர்கள் வாழ்வின் அடிமைத்தன்மையும் தன்பங்களும் தீராதே என்று நாங்கள் சொல்லுவது குற்றமாகுமா? மகாத்மா காந்தி புத்திமான்தான், பெரியவர்கள் தான். ஆனால்சொல்லும் ராமராஜ்யம் பற்றத்தைத்தொடிக்கக்கூடியதாகவிருக்கிறதே. பிரம்மஸ்ரீ சங்கராச்சாரியார் பெரிய மகான் சங்கர் அவதாரம் என்று சொல்லுகிறார்கள். அவர் இந்த மதத்தினுடைய எல்லாமோ மேன்மையாக வியாக்யானப்படுத்தினார். அதுபோலவே சிர்திருத்தம் பார்ப்பனர்களுக்கு மட்டும் அனுகூலித்தவேண்டும் மற்றவர்கள் என்றும் காணாதபடி விலக்காக வல்லவோ வந்து விழுந்தது. அதுபோலவே காந்தியின் இராமராஜ்ய சுயராஜ்யம் உயர்ந்த ஜாதிகளுக்கு அனுகூலித்து மற்ற இந்துஜாதிகளுக்கு நிர்கிலீஷ் ராஜியத்தில் மகிழ்ச்சியடைந்ததைப்போல் பின்னும் கொஞ்சம் விடுதலை என்கிற பயத்திற்கு தான் இரண்டு அதில இந்தியக்கமிட்டி தீர்மானமே சாக்ஷியாகவிருக்கிறதே.

மகாத்மாகாந்தியாரின் தங்கள் வருணாச்சிரம தருமத்திற்கு அனுகூலமல்லாதது சொல்லப்பட்டால் கூச்சல்போட்டுக் கண்டிக்கிறார்கள். அது மகாத்மாவையும், காங்கிரஸையும் குற்றம் சொல்லுவதாகின்றதில்லை. சாஸ்திரத்திலே வர்கள் அதைப்பற்றி ஒன்றுமே பேசவதில்லை. பிரசங்கிப்பதில்லை, எழுதுவதில்லை. வைதிகத்திற்கு காங்கிரசும், மகாத்மா காந்தியும் அனுகூலித்துப்பேசினதைத்தவிர்த்தால் சொல்லுவதற்கு காங்கிரஸ் தலைவர்களும் பிரசங்கிகளும் சம்மாவிருக்கும் பார்ப்பனர்களும் சொல்லவர்களாக்கண்டிக்கிறார்கள். இல்லாத குற்றங்களா கற்பித்தெழுதுகிறார்கள். இந்தவிதமான நியாயங்கள் இருக்கிறதா? இல்லையா? சற்பாரைப்பொது ஜனங்கள் ஆலோசித்துப்பார்க்கட்டும்.

மனுஷ்ய ஜீவனுக்குத்தனிமைக் குணம் ஒன்றிருக்கிறது. தனிமையாகியகளத்திலேதான் அவனுடைய ஆத்மாதன்னைப்பிரகாசப் படுத்திக்கொள்ளவும் வளரவும்சுயாதீனமடைகிறது. மனிதன் அதைவிட்டு ஒரு தொழிலின் விஷயாதீனத்திற்கு வரும்போது அவனைச்சுற்றியுமுள்ள பலத்தை ஒரு முகமாக்கித்தான் முற்பட வேண்டுமென்று நினைக்கையில் தன்னை சுற்றியும் இருகலான ஒதிதோன்றி கூட்டமனங்கள் தருமப்புலன்களை நசுக்கிவிடுகிறது என்னும் உண்மையைப்போல் மகாத்மாகாந்தியவர்கள் தனிக்குணத்தில் பிரகாசமடைந்திருக்கலாம். குறைவை ஆதரிப்படுப்பயிற்சி செய்வதல்லவோ வர்ணாச்சிரமக்கொள்கை. அது தர்மக்குறைவையும் குருட்டநிலையும் விளைவிக்குமே. தற்காலம்வள்ளார்த்தமும் செருக்கும்தலைப்பட்டகாலம் என்பவை களையெல்லாம் மகாத்மா தெரிந்திருப்பார் என்றாலும் நமக்கள் ஜாதியின் மிகை உணர்ச்சியை எப்பொழுதும் சாகாதபடி காப்பாற்றும் உள்குணமுடைய பார்ப்பனர்களின் மத்தியில் அவைகள் உபயோகப்படாமல் போகின்றன. மகாத்மாகாந்தியிடம் டில்லி ராயல்டேவ்னில் டாக்டர் கிச்சலு 'காங்கிரஸ் கானியகமிட்டி தீர்மானம் பண்ணினது சரியானதல்ல' என்று சொன்னதாகவும் 'நிலைமை கிச்சலாகப்போய்விட்ட'தென்று மகாத்மா வருத்தப்பட்டதாகவும் டாக்டர் கிச்சலு பத்திரிகைக்குத்தெரியப்படுத்தியிருக்கிறார். இதனால் என்ன தெரிகிறது? எந்த மகாத்மாக்களானாலும் பார்ப்பனர்களின் உள் எண்ணத்திலிருந்து தப்புவது கஷ்டமாகவிருக்கிறது.

பரமாணுபலத்திற்கும் மோக்ஷலாபத்திற்கும் யாதொரு கர்மமானது சமயக்கோட்பாடானது ஜாதியானது வர்ணமானது ஒருவிதக்கொள்கையானது அவசியமில்லை. சாதனதவிடமுள்ள எதனுமே அதையடைவதற்கு என்று சொன்ன சங்கராசாரியாரையே வியாக்கியானங்கள் எங்கே? குருவின் உபதேச மொழிகளோ புத்தியிலிருந்து எல்லாருமெடுத்துப்படித்து பரமபதம் அடையுங்களென்று எதிர்த்த இராமானுஜாச்சாரியின் சாத்திரமெங்கே? இவைகளுக்கு ஒருசிறிதாவது இடம் கொடுத்தார்களா பார்ப்பனர்கள்? அண்ணாமலைக் காலாசாலையில் கூட பார்ப்பனரல்லாதவன் ஞான சாஸ்திரம் படிக்க அருகலாமுள்ளவனல்லன் என்று ஒப்பாப்பட்டிருக்கிறதே.

சுதந்திரா வர்தனம் செய்வதற்கு கங்கா ஜலத்தை மேலுதி கொண்டு போதும் மாளவியாவும் இராமராஜ்ய தந்திர நிலை நிறுத்தும் மகாத்மாவும் சொல்லுவதும் சுயராஜ்யம் வைதீக சுயராஜ்யமாகத்தானே இருக்கவேண்டும். அந்த சுயராஜ்யத்தை நாம் வைத்துப்பரிபாலிக்கையில் வைதீகக் கொடுமையாலும் வருணாச்சிரமதர்மத்தாலும் இந்து சமூகங்களுக்குள்ளும் பழையபடியே வேறுபட்டு ஒற்றுமை நீங்கி ஒரு வழிதில்லாது உயர்ந்த ஜாதியான் தாழ்ந்த ஜாதியானை ஒதுக்கியும் தாழ்ந்த ஜாதியான் உயர்ந்த ஜாதியானை விட்டும் நித்தும் நமது நிலைமையைக்கண்டு சத்துருக்களாக வருகிறவர்களின் ஒரு அடிக்கு ஆறுவிரலும், ஒரு முத்திற்குச்சீர் குலைத்தும் ஒரு உதைக்கு ஓடியும் அதன் பிறகுண்டாகும் அதட்டல் மிரட்டல்களுக்கு அடிமை புகுத்தும், அதற்குப்பின்வரும் அதிகாரங்களுக்கு ஆளாகி உத்தரவுகளை தலையிலேற்றுவாழும் தகப்பனே பின்னும் வந்துவிடுமே

தொடர்ச்சி 22ம் பக்கம் பார்க்க:

காந்தியின் 'ராம' ராஜ்யம்.

(பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப்)

கட்டுரை 4.

முன் தொடர்ச்சி.

நான் மேலே சொல்லிவந்ததிலிருந்தநமக்குசுதந்திரமும்ஆதிக்கமும் வேண்டுமென்றுல், ஐரோப்பிய விஞ்ஞான சாஸ்திரத்தையும் இயந்திர சாதனங்களையும் நாம் உணர்ந்து கொள்ளவேண்டியது அவசியம் என்பது ஏற்படுகிறது. ஆனல் மகாத்மாவின் இராமராஜியம் என்பது இந்தத்தத்துவத்திற்கு பெரும் ஆபத்தாகவேமுடியும் என்பதை அவர் சொல்லுவதிலிருந்தே யாவரும் உணரலாம். வறுமைஎன்பதே ஒரு பெரும் ஆபத்து. அதைப் போலவே அதிகக்கீழ்மையான பொருளாதார வாழ்க்கை நிலையும் ஒரு ஆபத்தாகும். ஆகவே இந்திய தேசியவாதிகள் அயல் நாட்டு வியாபாரத்தை அது உடையாயினும் சரி வேறு எது வாயினும் சரி அழிப்பதோ, அல்லது குறைப்பதோ நம் நாட்டிற்குப்பெரும் ஆபத்தையே விளைவிப்பதாகும். உலகவாழ்க்கையை வெறுத்த முற்றும் துறந்த துறவிக்கன்மை கூட சாதாரணமாய் ஏற்படும் பசியை அடக்குவது என்பது எப்படி ஆபத்தானதோ அது போலவே மேலான கருத்துகளைக் கொண்டோ, அல்லது சுயநலமற்ற கருத்துகளைக்கொண்டோபலாத்காரத்தைத்தடுப்பதும் ஆபத்தேயாகும். அதுபோலவே தன்பப்படுதலும், சிறைக்குச்செல்வதும், அடிபடுவதும், அவமானப்படுவதும், இவைகளையெல்லாம் எதிர்க்காமல் அனுபவிப்பதும் சிறந்த குணங்கள் என்று பிரசாரம் செய்வதும் ஆபத்தேயாகும். விரோதியினிடத்தில் சண்டித்தனம் செய்வதும் தன்னைத்தானே அடிமையாக்கிக்கொள்வதும் குற்றமும் ஆபத்துமான காரியமேயாகும்.


உதாரணமாக இப்போது நமது நாட்டில் கடைபெற்றுவரும் அன்னியத்துணிமறியலே எடுத்துக்கொள்ளுங்கள். மறியல் இல்லாத காலத்தில் வருஷம் ஒன்றுக்கு 60 கோடி ரூபாய் மதிப்புள்ள ஜவுளிதினுசுகள் வெளிநாட்டிலிருந்து நமது நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டு வந்தன. இந்த 60 கோடி ரூபாயுக்கும் நாம் ரூபாயாகவே கொடுக்காமல் அதேமதிப்புள்ள பொருள்கள் நமது நாட்டிலிருந்தும் ஏற்றுமதிசெய்யப்படுவதின்மூலம்தான் சரிப்பட்டுவந்திருக்கின்றது. இப்படி இருக்க "60 கோடி வெள்ளி ரூபாய்கள் இந்நாட்டிலிருந்து அன்னியதுணிகளுக்காக கொடுக்கப்பட்டு வருகின்றது" எனமூலைகளிலும்,மூடுக்குளிலுமிருந்து கொண்டுசிலரால்உபதேசிக்கப்பட்டு வருவதை நாம் உண்மையென நம்புவது ஒரு சந்தேகமற்ற தப்பிதமேயாகும். காந்திஜீ அவர்கள் இந்த இறக்குமதியை மாத்திரம் எப்படியாவதுநிறுத்தவேண்டும்என்கின்றார். அவர் நினைக்கின்றபடி வெளிநாட்டுத்துணி இறக்குமதியாவதை நிறுத்திவிட்டாரேயானல் பிறகு என்ன நடக்கும் என்பதை யோசித்துப்பாருங்கள். முதலாவதாக 120 கோடி ரூபாய் வரை கடைபெற்று வரும் வெளிநாட்டு வியாபாரம் நின்று விடும் (அதாவது 60கோடிரூ ஏற்றுமதிவியாபாரமும்60 கோடி ரூ. துணி இறக்குமதி வியாபாரமும் நின்று விடும்.) முதலாவது அன்னியத்துணிகளில் வியாபாரம் செய்யும் இந்திய வியாபாரிகள் யாவரும் பாதிக்கப்படுவார்கள். இதுவுமன்றி அன்னிய துணிகளுடன் போட்டிபோடும் சுதேசித்துணிகளை உற்பத்திசெய்கின்றவர்களும் பாதிக்கப்பட்டு, அன்னியத்துணிகளைவிற்கும் கடைகளில் வேலைசெய்கின்றவர்களும், அவைகளை அங்கு மிக்கும் கொண்டு போய் சில்லரையில் விற்பனை செய்து ஜீவிக்கின்றவர்களும், மற்றும் இதில் ஈடுபட்ட கூலி ஆட்களும் இவர்கள் எல்லாரையும் விட அன்னிய துணிகளையே வாங்கி உபயோகித்துக் கொண்டு வரக்கூடிய மக்களும் அதிகமாகவே பாதிக்கப்படுவார்கள். சுயராஜியத்திலாவது, அல்லது இராமராஜியத்திலாவது அன்னியத்துணிகள் இறக்குமதி செய்ய சாத்தியமேயாகாதென காந்திஜீ அவர்களுரைப்பதிலிருந்து அதுபொறிதும் லக்ஷியத்தைத்தான் பாதிப்பதாயிருப்பதால் அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனல் அன்னியத்துணி வியாபாரிகளுக்கோ அவர்களுடைய வியாபாரம் பாதிக்கப்படுவதால், அவர்களும் தங்களுடைய தொழிலை உடனே இழந்து விடும்படியாக நேரிடும். அவ்வாறு அவர்கள் தங்களுடைய தொழிலை இழந்து விடும்படியாக நேரிட்டால், இதுவரை நியாயமாகவும், பிரபலமாகவும் வீர்த்தியடைந்து கொண்டிவந்த ஒரு தொழிலானது அடியோடு நாசமடைந்துவிடும். இதனல் அவர்கள் நஷ்டமடைந்து, கடன்காரர்களாகித்தீரவேண்டியதுதான். தவிர, இத்தகைய அவர்களுடைய செய்கையால் அராஜகமானது எவ்வளவு தூரம் பாதிக்கப்படுமென்பதையும்நீங்கள் தயவு செய்து சற்று யோசனை செய்து பாருங்கள். சாதாரணமாக யுத்தங்கள் நடைபெறுகின்ற காலங்களில் எல்லா அரசாங்கங்களும்தங்களுக்குப் பணம் அவசியமாயிருக்கும்பொழுதெல்லாம், தங்களுக்குப்போதிய பணத்தைக் கொடுத்து உதவக்கூடியவர்கள் பெரும், பெரும்பணக்காரர்களும், செல்வவந்தர்களுமான வியாபாரிகள் தான் என்றே நினைத்து அவர்களையே எதிர்பார்த்து, அவர்களைத்தான் நம்பிக்கொண்டும் இருக்கின்றன. தற்காலம் அன்னியத்துணிகளால் நடைபெற்றுக் கொண்டுவரும் பெருத்த வியாபாரத்தை நாம் சற்று கவனித்தோமேயானல், அப்பொழுது நமது இந்திய அரசாங்கமும்சமாதானகாலங்களிலும், சண்டைகள் நடைபெறும் காலங்களிலும் தங்களுக்கு எவ்வளவோ அதிருஷ்டசாலிகளாக விருக்கவேண்டுமெனயெண்ணி அதாவது பழைய கூலிக்கே அதுவும் எக்கு போய்விடுமோ என பயந்து மிக்கநன்றியறிதலுடன் நடந்து கொள்ளுகின்றார்கள்.

கதர் விஷயத்திலும் கதர்உற்பத்தி செய்வதைச்குறித்து நான் என்னுடைய அபிப்பிராயத்தை அடிக்கடி கூறிக்கொண்டேவந்திருக்கின்றேன். அதாவது, ஏழை நூல்நூற்போர்களை, அவர்களுடைய நெற்றி தண்ணீர் நிலத்தில்வடிய நான்தோறும் பத்துமணி நேரம் கஷ்டப்பட்டு நூற்கும்படியாக செய்து, அவர்களுடைய ஜீவனத்துக்கும் போஷாத்துகையாகிய 0-3-0 அணையை (இது சரியல்ல 0-1-0 அணை கூலிதான் ப-ர்) அவர்களுக்குக்கூலியாக தினந்தோறும் கொடுக்கப்பட்டுவருவதுதான்.

சுயராஜியத்தில் யாவரும் திருப்தியுடன் தங்களுடைய வாழ்க்கையைக் கழிக்கத்தக்க ஏற்பாடு செய்யப்படுமென, சமீபத்தில் கூடிய காங்கிரசானது ஒருதீர்மானம் நிறைவேற்றியிருப்பதைக்குறித்து நாம் முக்கியமாய் கவனிக்கவேண்டும். அத்தீர்மானமானது யாதெனில், 'தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளிகளுக்கு, அவர்களுடைய ஜீவனத்திற்குப்போதுமான தூகை ஒவ்வொரு தொழிலாளிக்கும் கூலியாகக் கொடுக்கப்பட வேண்டு'மென்பதேயாகும். ஆலைகளிலும், தொழிற்சாலைகளிலும் வேலைசெய்யும் தொழிலாளிகளுக்கு அவர்களுடைய ஜீவனத்துக்குபபோதுமான தூகை கூலியாகக் கொடுக்கப்படவேண்டுமென, தீர்மானம்செய்து விட்டு, காங்கிரஸ் இயக்கத்தோடு சம்பந்தப்பட்டும், ஒரு விதத்தில் காந்திஜி அவர்களால் தனியாகத் தோற்றுவிக்கப்பட்டதுமான அகில இந்தியா நூல்நூற்போர் சங்கமானது காரசி காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒரு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு விரோதமாக நடந்து கொள்ளுவதென்றுல், அது மிகவும் பரிகசிக்கத்தகுந்த விஷயமேயாகும். எப்படியிருந்தபோதிலும், அத்துணிகளை வாங்கி உபயோகிக்கின்றவர்களுக்குத்தான் சகிக்கக்கூடாத அனியாயம் செய்யப்பட்டு வருகின்றது. ஆலைகளிலும், அகில இந்தியா நூல்நூற்போர் சங்கத்தாராலும் உற்பத்திசெய்யப்படும் துணிகளோக்காட்டிலும்அன்னியத்துணிகளானது விலை மலிவாகயிருப்பதாலும்,அதிகநாள் நீடித்துழைக்கக்கூடியதாயிருப்பதாலும், பார்வைக்கும் அழகாயிருப்பதாலுந்தான் இந்தியாவில் அன்னியத்துணிகள் அதிகமாக வாங்கப்படுகின்றதென ஒருசமயம் நினைக்கவேண்டியிருக்கின்றது. கொஞ்சகாலத்திற்கு முன்பாக அத்துணிகளாவும் லங்காஷயரிலிருந்து வரவழைக்கப்பட்டு வந்தது. ஆனல், சென்ற வருஷத்திலிருந்தோ இந்திய மார்க்கட்டுகளில் லங்காஷயர் துணிகளுக்குப்பதிலாக, ஜப்பானிலிருந்து

தொடர்ச்சி 22ம் பக்கம் பார்க்க.

சுயமரியாதைச்சங்கக்கட்டடம், சேலம்.



சேலம் சுயமரியாதைச்சங்கத்தாரால் புதிதாய்க்கட்டப்பட்டு, சென்னை அரசாங்க மந்திரி கனம் P. T. இராஜன் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட சுயமரியாதைச்சங்கக்கட்டடம். தென்னிந்தியாவில் தமிழ் நாட்டில் அநேக பட்டணங்களிலும், கிராமங்களிலும் சுயமரியாதைச்சங்கங்களிருந்த போதிலும் கூட, சேலமாநகர் ஒன்றில்தான் சுயமரியாதைச்சங்கத்திற்கென்று தனியான ஒரு அழகிய கட்டடமும், சுமார் 2000 மக்கள் போய் கூடி மகாநாடுகள் நடத்தத்தகுந்த தாராளமான மைதானமுமிருந்து வருகின்றது. இதை முயற்சியுடனிருந்து கட்டி முடித்தவர்களான சேலம் சுயமரியாதை வீரர்கள் மிகவும் போற்றக்கூடியவர்களே யாவார்கள்.

சேலம் சுயமரியாதைச் சங்கத்தாரை பின்பற்றி, அவர்கள் நடந்து காட்டிய வீரத்தையுணர்ந்து மற்றும் ஒவ்வொரு ஊரிலுமிருக்கும் சுயமரியாதைச்சங்கத்தார்கள் சங்கத்திற்கென ஒரு தனிகட்டடமும், போதுமான காலியிடமும் ஏற்படுத்த முன்வரவேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

கத்தோலிக் வேதமும், திருச்சபை கட்டளையும். பெங்களூர் பிளாக் பள்ளி S.L.சிங்கராயன் வரைவது

கிறிஸ்து மார்க்கத்தைச் சார்ந்த கத்தோலிக் வேதத்தின் தலைவர்களாகிய அப்போஸ்தலர்களும், வேதபோதகர்களும், குருக்களும் கத்தோலிக்கருக்கு இன்றைய வரையும் போதித்து வருவது "வேதவாக்கியம்" அல்லது "வேத சத்தியம்"என்பதை எந்தக்கத்தோலிக் கிறிஸ்தவரும் மறுக்க முடியாத உண்மையாம். அதோடு கத்தோலிக் வேத தலைவர்களால் நியமிக்கப்பட்ட சட்டம், கற்பனை அல்லது கட்டளை என்பதையும் வேத வாக்கியமாக நம்பவேண்டியதும் கத்தோலிக்கருக்கோர் முக்கிய கடமையாம். வேத தலைவர்களால் நியமிக்கப்பட்ட சட்டங்களுக்குத் திருச்சபை கட்டளை என்று பெயர். அதில் 5-வது கற்பனை கூறுவதாவது "உறவின் முறைமையோடு கலியாணஞ் செய்யக் கூடாது". இக்கற்பனையையே எல்லா கத்தோலிக்கரும் சத்தியமாக நம்பி நடக்கிறார்கள். இனி நடக்கவும் போகிறார்கள். அப்படியே நடக்கும்படி வேத தலைவர்கள், குருக்கள் சொல்லி வருகிறார்கள்.

அப்படி மீறி நடப்பவர்களை மஸ்வாதி Excommunicated வுற்று அவர்களுக்குத் தண்டுதலையாக அபராதம் விதிக்கிறார்கள். குருக்களால் விதிக்கப்பட்ட அபராதம் செலுத்தும் வரையிலும் கற்பனை மீறி நடந்த ஆண் அல்லது பெண்களை Catholic Mission தள்ளி வைப்பதை எந்த கத்தோலிக்கரும்மில்லை யென்று சொல்ல முன் வரமாட்டார்கள். இத் தனி கண்டிப்பான சட்டமிருக்க, 22-4-31ல் கோலார் தங்கவயல் அர்ச் ஜெயமாதா கோவிலில் சொந்தச் சகோதரரின் மகளுக்கும் சகோதரி மகனுக்கும் மெய்தேவாலயத்தில் மெய்குருவாகிய சங். ஏ. ஜாட்பிரிலே குரு பிரசாதியால் நடத்திய மெய் விவாஹத்திற்கு எந்தத் திருசபை கட்டளை உத்தாவு கொடுத்தது? இங்கு வேதவாக்கியம் (திருச்சபையின் சொற்படி கேளாதவன் அஞ்ஞானியைப்போல் உனக்கு ஆகக்கடவான் என்று கர்த்தர் திருவுளம்பற்றினார்). சத்திய தேவாலயத்தில் சற்குருவால் சன்மார்க்கத்தில் சதிபதிகளான இந்த "புதிய தம்பதிகளை" அஞ்ஞானத்தில் சேர்க்கின்றீர்களா? அல்லது மெய்ஞ்ஞானத்தில் சேர்க்கின்றீர்களா? என்பதை எனது அன்பு மிக்ககத்தோலிக்கிறிஸ்துச்சகோதரிச்சகோதரர்களை வெகுவணக்கமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பெண் தேவை.

22வயதுபிராய முள்ளவரும், ஆங்கிலத்தில ஸ்கூல் பைனல் வரை வாசித்தவரும் கொஞ்சம் பூஸ்திதியுடையவரும்50ரூ. க்குக் குறையாத வருமான முள்ளவரும் திடகாத்திர முடையவருமான ஒரு வாலிபருக்கு 20 வயதுக்குமேற்படாதஒருபெண் தேவை. எக்குலமாயினும், விதவையோ ஆயினும்சரி. தமிழாவது நன்கு கற்றவராயிருக்க வேண்டும். விரும்புவோர் புகைப்படத்துடன் தகவல் அறிவிக்க வேண்டுகிறேன்.

விலாசம்.

A C/o

காரியதரிசி,

சுயமரியாதை வாசிப்பு சாலை,

கோட்டார், நாகர் கோவில்.

சித்தோடு சீர்திருத்த சங்கம்.

V. S. செங்கோட்டையா தலைவர்.

ஈ. வெ. இராமசாமி உபன்யாசர்.

சித்தோடு சீர்திருத்தச் சங்கத்தார் ஆடி 18ந்தேதியை உத்தேசித்து ஒரு பெரிய கூட்டம் கூட்டி திரு. ஈ. வெ. இராமசாமியை அங்கு வந்து உபன்யாசம் செய்யும்படி கேட்டுக் கொண்டதோடு அக்கூட்டத்திற்கு கோயமுத்தூர் பிரபல வியாபாரியான திரு. வி. எஸ். செங்கோட்டையா அவர்களைத் தலைமைவகிக்கக்கேட்டுக்கொண்டிருந்தார்கள். அந்தப்படியே வந்த இரு கனவான்களையும் 2-8-31ஆ மாலை 5மணிக்கு மேளவாத்தியக்களுடன் ஊர்வலமாகத்திரு. மாரியப்பன் அவர்கள்வீட்டிலிருந்து சித்தோடுசெக்குந்தர்சாவடிக்கு அழைத்துச்செல்லப்பட்டு அங்கு ஒரு பெரிய கூட்டம் கூடியது. அக்கூட்டத்திற்கு சுமார் 1000 பேர்வரை ஆண்கள் பெண்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

கூட்டம் ஆரம்பிக்கப்பட்டதும் திரு. செங்கோட்டையா அவர்களைத்தலைமை வகிக்க பிரேரேபித்து பிறகு சீர்திருத்தப்பாடல்கள் பாடப்பட்டன. சுமார், 3வயதுள்ள சிறுவன் ஒருவன் கள்ளுக்குடிக்கக் கூடாதென்றும், மூடப்பழக்கம் கூடாதென்றும் கருத்துள்ள பாட்டுப்பாடினது மிக ஆச்சரியமாய் இருந்தது.

பிறகு பெரிய வாலிபர் ஒருவர் பாடினார். பிறகு திருவாளர்கள் செங்கோட்டையா அவர்களுக்கும் ஈ. வெ. இராமசாமி அவர்களுக்கும் உபசாரப்பத்திரங்கள் பல சபைகளின் சார்பாக வாசித்துக்கொடுக்கப்பட்டன. பிறகு தலைவர் முகவுரையாகச்சில வார்த்தைகள் பேசினார்.

முகவுரை.

அதில்முதலில்தன்னை இக்கூட்டத்திற்கு அக்கிராசனஞ்செய்யத்தெரிந்தெடுத்ததைப் பற்றிப்பேசுகையில் குருவின் உபன்யாசத்திற்கு சிஷ்யாகளை அக்கிராசனஞ்செய்யத்தெரிந்தெடுப்பது போலவும் பெரியார் உபன்யாசத்திற்கு சிறிய வனைத்தெரிந்தெடுப்பது போலவும் தெரிந்தெடுக்கப் பட்டிருப்பதாகவும் திரு. இராமசாமியைப்பற்றித்தாக்கள் மிக்க பெருமையாய்க் கருதி மரியாதை காட்டி வருவதாகவும் அப்படியிருக்க இந்தக் கூட்டத்தில் அக்கிராசனம் வகிப்பது தகுதி என்று தான் எண்ணவில்லையென்றும், இந்த ஊர் மகாஜனங்கள் தனக்கு மரியாதை செய்யவேண்டுமென்று கருதியே இந்தக் காரியம் செய்ததாகவும் சொல்லி விட்டு மக்கள் திருத்தப்பாடையவேண்டுமானால் இப்படிப்பட்ட சங்கம் வேண்டுமென்றும் மூடப்பழக்க வழக்கங்கள் ஒழிக்கப்படவேண்டுமென்றும் மற்றும் நமது சமூகத்தில் உள்ள பல குறைப்பாடுகளும், வித்தியாசங்களும் நீங்கி மக்கள் ஒற்றுமையடைய வேண்டுமென்றும் அதற்கு இம்மாதிரி சங்கங்களும், இம்மாதிரி பெரியார்களின் புத்திமதியும் அவசியம் என்றும் சொன்னார்.

நல்லதங்கை.

பிறகு திருமதி நல்லதங்கை என்னும் ஒரு சிறுபெண் "பெண்கள்முன்னேற்றம்" என்பது பற்றி ஒரு அருமையான உபன்யாசம் செய்தது. அதில் சுயமரியாதை இயக்கமும், இராமசாமியும் பெண் உலகத்திற்குச் செய்த வேலைகளைப் புகழ்ந்தும் பெண்களைப்பெற்றோர்கள் படிக்கவைக்க வேண்டிய அவசியத்தையும், படித்த பெண்களால் ஆண்களுக்கும் தேசத்திற்கும் ஏற்படும் நன்மையைப் பற்றியும் மிகவும் உருக்கமாகவும் யார்மனதிலும் பதியும்படியாகவும் பேசினார்.

இ. வி. சிங்காரவேலு.

பிறகு திரு இ வி. சிங்காரவேலு பி. ஏ. அவர்கள் உலகமாறுதல் என்பதை தலையாய்க் கொண்டு உலகவிஞ்ஞான முற்போக்கை எடுத்துக்காட்டி அதனால் மேல்நாட்டு மக்களின் மனம் எவ்வளவு மாறுபட்டுவிட்டது என்றும் மேல்நாட்டார்கள் எவ்வளவு முற்போக்கடைந்து விளங்குகின்றார்கள் என்றும் பலஉதாரணக்களால் விளக்கி மனிதன் மாறுதலுக்கு தயாராய் இருக்கவேண்டும் என்றும், சுயமரியாதை இயக்கம் ஒரு தலைசிறந்த மாறுதல் இயக்கம் என்றும் அதன் மாறுதல்கள் உலகத்திற்கு அவசியமானதென்றும் அது எற்பட்டபின் அனேக துறைகளில் புகுந்து கலக்கிவிட்டதென்றும் எடுத்துக்காட்டினார்.

டாக்டர் கிருஷ்ணசாமி.

பிறகுடாக்டர்கிருஷ்ணசாமி அவர்கள்சமூகத்துறை தேசீயத்துறை, வியாபாரத்துறை, கைத்தொழில்துறை, முதலிய எல்லாவற்றிலும் முன்னேற்றமும், விடுதலையும், அடையவேண்டியது அவசியமென்று பேசினார். பிறகு திரு ஈ. வெ. இராமசாமிதுண்டு விளம்பரத்தில் குறிப்பிட்டபடி "சீர்திருத்தம்" என்பதுபற்றி 1-30 மணி நேரம் பேசினார். அதின் சாராம்சமாவது:-

ஈ. வெ. இராமசாமி.

தலைவர் அவர்களே! சகோதரிகளே!! சகோதரர்களே!!!

இன்று இந்து சமூகம் என்பதற்கென்று ஏற்படுத்திக்கொண்டிருக்கின்ற ஒரு பண்டிகை காளைக்கொண்டு ஒரு கூட்டம் ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். ஆனால் வேறு இந்துக்கள் இம்மாதிரி கூட்டம் கூடினால் பண்டிகையின் புராணத்தைப்பற்றியும் அதைக்கொண்டாடினால் மோக்ஷம் அடையலாம் என்றும் பிரசங்கம்செய்யக்கூட்டுவார்கள். ஆனால் நீங்கள் இம்மாதிரி பண்டிகையை இனி வெறுக்கும்படி எடுத்துச்சொல்லும் உணர்ச்சி உள்ளவனை கூப்பிட்டிருப்பது மிகவும் போற்றத்தக்கதேயாகும்.

இக்கூட்டத்திற்கு நீங்கள் ஒரு அருமையான தலைவரைக்கண்டுபிடித்தது மிகவும் போற்றத்தக்கதேயாகும். தலைவர் திரு வி. எஸ். செங்கோட்டையா அவர்கள் பெரும்செல்வவான், பொது ஜனங்களுக்குப்பெரிதும் உபகாரியாய் இருந்து வருபவர் அதேபோல் நல்ல பொதுக்காரியங்களில் ஈடுபட்டிருப்பார்கள் அதுபோலவே மத விஷயங்களிலும் பெரிதும் ஈடுபட்டு மதசம்பந்தமான விஷயங்களில் அதேகமாகக் காரியங்கள் செய்து வருபவர் ஆதலால் அவரை இக்கூட்டத்திற்கு தலைமைவகிக்க எற்பாடு செய்த உங்களை பாராட்டவேண்டியதே. எனது உபன்யாசம் பயன்படுமானால் தலைவரால் சீர்திருத்தத்துறைக்கு அதேகலாபம் ஏற்படும். அவர்கள் என்னை குருவென்றும் மற்றும் பிரமாதமாய் புகழ்ந்து பேசினார். நான் அதை ஒப்புக்கொள்ளவேயில்லை. நானும் அவரும் மற்றும் இந்த ஊர்காரர்களும் ஒன்றேயாவோம். 30 40 வருஷங்களாகவே தாய்பிள்ளைகள்போல் கெருங்கி பழகினவர்கள். ஒரே துறையில் வியாபாரம் செய்துவந்தவர்கள். அதேகர் எனக்கு வரவுசெலவுகாரர்களாய் இருந்தவர்கள். அக்கிராசனர் வியாபாரத்துறையில் மேலாங்கிவிட்டார். நான் வேறு துறையில் இறங்கிவிட்டேன். இவ்வளவுதான் வித்தியாசம். தலைவரும் இந்தத்துறையில் இறங்கி இருந்தால் அபாரமான காரியங்களை சாதித்து இருப்பார். ஆதலால் அவரை விடநான் ஒன்றும் சிறந்தவனல்ல. அவர்போன்றவர்கள் இவ்வித உபன்யாசங்களுக்குத் தலைவராகக்கிடைத்துமனமாறுதல் அடைந்தால் நாட்டில் எவ்வளவோ திருத்துப்பாடு ஏற்படும்தவிரவும்வயதில்மூத்தவன்என்கின்ற காரணத்திற்காக மரியாதை செய்வது என்கின்ற மூடப்பழக்க வழக்கத்தை ஒழிப்பது சீர்திருத்தத்தில் பட்டது என்று தலைவர் திரு செங்கோட்டையா அவர்கள் கருதாததால் தன்னை வயதில் சிறியவன் என்று பல தடவை சொல்லிவிட்டார். அது சரியல்ல. அறிவுள்ளவர்களும், அரும் பெரும் காரியங்களை தன்னலமற்று நியாகபுத்தியுடன் செய்கின்றவர்களும்தான் பெரியவர்களே யொழிய, வெரும்வயதைப்பார்த்தது, ரையைப்பார்த்தும்நடுக்கத்தைப்பார்த்து பெரியவர்கள் என்று மயங்குவது தவறுதலாகும். ஆகையால் இன்று நமக்குக்கிடைத்த தலைவர் சரியானதலைவரேயாவர். பெரியவரேயாவர். மற்றும் எனக்கு பலவரவேற்புப்பத்திரங்கள் கொடுத்தீர்கள். அதில் நீங்கள் எனது கொள்கைகளை நன்றாய் ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள் என்றும் அந்தக்கொள்கைகளுக்கு என்னை ஊக்கமாய் உழைக்கும்படி எதிர்பார்க்கின்றீர்கள்- தூண்டுகின்றீர்கள் என்றுமேதான் கருதி அவற்றை நான்றியறிதலுடன் எற்றுக்கொள்ளுகின்றேன்.

சீர்திருத்தம்.

தவிர 'சீர்திருத்தம்' என்பதைப்பற்றிப் பேசுவதில் யாருக்கு சீர்திருத்தம்? எப்படிப்பட்ட சீர்திருத்தம்? எதற்காக சீர்திருத்தம்? எது சீர்திருத்தம்? அவற்றை எப்படி நிர்ணயிப்பது? அதற்கு மூட்டுக்கட்டை எது? பிறகு அவற்றை எப்படி அமுலுக்கு கொண்டு வருவது? என்பவைபோன்ற விஷயங்கள் சீர்திருத்தத்தலைப்பில் பேசவேண்டிய முக்கிய விஷயங்களாகும். அப்படிப்பார்த்தால் சீர்திருத்தம் இப்போது பேசுவது இந்தியமக்களுக்குத்தான் என்றும் அறிவுக்குட்பட்ட சீர்திருத்தம் என்றும் மனிதத்தன்மையும் சுதந்திரமும் அடைவதற்கு என்றும் உலக அக்கம்பக்கங்களை நோக்கி பகுத்தறிவுக்கு மதிப்புக்கொடுத்து உறுதியான மனதுடன் பழமைமையுடன் போராடி சீர்திருத்தமடைய வேண்டுமென்றும் தான் சொல்லக்கூடும். எவ்விதசீர்திருத்தத்திற்கும் பலவிரோதிகள் உண்டு. அவைபழமை, மூன்னோர் வாக்கு, மகான்வாக்கு, வேதத்தின் கட்டளை, சாஸ்திரசம்மதம், வெகு நாளாய் நடந்துவரும் பழக்கவழக்கம், நம்பியே ஒப்புக்கொண்டாக வேண்டியது என்பவைபோன்ற நிர்பந்தம் முதலியவைகள் எல்லாம் சீர்திருத்தத்திற்கு மூட்டுக்கட்டையும் விரோதமானவைகளுமாகும்.

தன்னை சீர்திருத்தக்காரன் என்று சொல்லிக்கொள்ளுகின்றவர்கள்மேற்கண்ட அவ்வளவையும் தங்கள் அறிவால் பிரதியக்ஷக்கண்களால் அலசிப்பார்க்க உரிமையும் தைரியமும் உடையவர்களாக இருக்கவேண்டும். அதைவிட்டு விட்டு 'மற்றதெல்லாம் சரி' ஆனால் 'மதத்தைப்பற்றி பேசலாமா? கடவுளைப்பற்றி பேசலாமா? தேசியத்தைப்பற்றி பேசலாமா? புராணங்களைப்பற்றி பேசலாமா? மகான்களைப்பற்றி பேசலாமா? மகான்கள் அபிப்பிராயத்தைப்பற்றி பேசலாமா? நமக்கு அவ்வளவு யோக்கியதை உண்டா' என்பது போன்ற பிடிவாதகுணங்களும், தன்னம்பிக்கையற்ற குணங்களும், 'ஆனால்' களும் உடையவர்

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க

ரோஜா முத்தையா நூலக ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ஈரோட்டில் திரு: முகமதுநபி பிறந்தநாள் கொண்டாட்டம்.

ஈ. வெ. இராமசாமி தலைவர்.

வேலூர் மௌல்வி ஷர்புதீன் சாயபு உபன்யாசம்.

ஈரோடு ஒப்பணக்கார வீதியும், குயின் வீதியும்சம்பந்தமாகும் முடக்கில் உள்ள ஈரோடு முஸ்லீம் லீக் சங்கக்கட்டிடத்திற்கு முன்னால் ஒரு பெரிய பந்தல் இட்டு அலங்காரம் செய்து அதில்-2—8—31தேதி இரவு வேலூர் மௌல்வி ஷர்புதீன் சாயபு அவர்கள் தலைமையில் திருநபி அவர்கள் பிறந்த நாள் கொண்டாட்டம் நடத்தப்பட்டது. மறுநாள் காலை சுமார் 2000 பேர்களுக்கு விசேஷ சாப்பாடு நடத்தப்பட்டது. அன்று மாலை 5.30 மணிக்கு முஸ்லீம் வாலிப சங்கத்தில் இருந்து வேலூர் மௌல்வி ஷர்புதீன் சாயபு அவர்களையும் பொதுக்கூட்டத்திற்கு தலைமை வகிக்கத்தேட்டுக்கொள்ளப்பட்டிருந்த திரு ஈ. வெ. இராமசாமியையும் ஊர்வலமாக அழைத்துச்செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபடி பெரிய ஊர்வலம் துவக்கப்பட்டது. ஆனால். திரு. ஈ. வெ. இராமசாமி மோட்டாரில் ஏற சம்மதிக்காததால் மௌல்விசாயபு அவர்கள் மாத்திரம் மோட்டாரில் கடைவீதிவழியாக அழைத்துச்செல்லப்பட்டார்கள். ஊர்வலத்தில் முகேக இந்து முஸ்லீம் கனவான்கள்கலந்து கொண்டார்கள். ஊர்வலம் கடிசில் மஸ்ஜித்தில் தொழுகைக்குறித்தப்பட்டுபின் மறபடியும் ஆரம்பிக்கப்பட்டு 7-30 மணிக்கு சந்தைப்பேட்டை மைதானத்திற்கு வந்து சேர்ந்தது.

அங்கு ஈரோடு சந்தைப்பேட்டையில் 7-30 மணிக்கு பொதுக்கூட்டம் ஆரம்பமாயிற்று. சுமார் 1000 பேர்கள் இந்து முஸ்லீம்கள் வந்திருந்தார்கள். கூட்டத்திற்கு திரு. ஈ. வெ. இராமசாமியை தலைமை வகிக்கும்படி ஜனப் எம். கே. முகம்மது பாக்ஷா அவர்கள் பிரேரேபிக்க கவுன்சிலர் ஜனப் கே.குதரத்துல்லா சாயபு அவர்கள் ஆமோதிக்க திரு ஈ. வெ. இராமசாமி தலைமை வகித்தார்கள். அக்ஹிராரம்ஜனப் ச. இ. முகம்மது அபீபுல்லா சாயபு அவர்களால் கிராஅத் ஓதப்பட்டதும் தலைவர் முகவுரையாக சிலவார்த்தைகள்சொல்லி, ஜனப் வேலூர் மௌல்வி ஷர்புதீன் சாயபு அவர்களை பேசும்படி கேட்டுக்கொண்டார். மௌல்வி சாயபு அவர்கள் நல்ல அழகான தமிழில்சுமார் 1மணி நேரம் திரு மகம்மது நபி நடக்கையின் பெருமையையும், அவர்கள் உபதேசங்களின் அருமையையும் எடுத்துச் சொன்னார். அதில் முக்கியமாய் திருநபி அவர்கள் அரேபியா தேசம் காட்டுமிராண்டிகளாய், பெண்குழந்தைகள் பெற்றால் அதைக் கொன்று புதைத்துவிடும் கொடுமைத்தன்மையிலும் அநேக கடவுள்களை சிருஷ்டித்துக்கொண்டு, உருவ வழிபாடுகள் செய்துகொண்டு மூடத்தனமாயும் இருந்த காலத்திலும் நியாயம், அநியாயம் இல்லாமல் மக்களை கீழ்மேலாக்கக் கருதி இம்சித்துவந்தகாலத்திலும் மக்கள் ஒருவருக்கொருவர் மோசம் செய்து கலகம்கொலை, கொள்ளை முதலிய வைகள் செய்து வந்தகாலத்திலும் தோன்றி மக்களுக்கு நியாயத்தையும், சத்தியத்தையும், ஒற்றுமையையும், அன்பையும் போதித்து உலகத்திற்கு ஒளியைத்தந்தவர் என்றும், அதற்காக பலகஷ்டங்களையடைந்தாரே தவிர எவ்வளவோ செல்வத்தையும், மேன்மைகளையும், சுகத்தையும் அலக்ஷியம் செய்தவர் என்றும், எதிரிகளிடமும், குற்றவாளிகளிடமும் அன்பையும், மன்னிப்பையும் காட்டி எப்படிப்பட்ட எதிர்ப்புக்காரரும் தன் உபதேசத்தை எற்றுக்கொள்ளும்படி செய்தவரென்றும் பேசினார். பிறகு

மௌல்வி ஷர்புதீன் சாயபு அவர்கள்

இஸ்லாம் மார்க்கம்பரிசுத்த மார்க்கமென்றும் அது அன்பையும் சகோதரத்தன்மையையுமேபோதிக்கின்றதென்றும் முஸ்லீம்கள் சிலர் ஒருசமயம் முரட்டுத்தனமாகவும் பலாத்காரமாகவும் நடந்துகொண்டிருக்கலாம் என்றும் அதனாலேயே ஒருசமயம் இந்துக்கள் முஸ்லீம்களை துஷ்கர் என்று சொல்லலாம் என்றும் ஆனபோதிலும் இந்து முஸ்லீம் ஒற்றுமையை யுத்தேசித்து இதுகாலதன் முஸ்லீம்களிடம் அன்பாயும் நம்பிக்கை உள்ளவர்களாகும் படியும் நடந்துகொள்ள வேண்டுமென்றும் முஸ்லீம்களும் இந்துக்களிடம் சகோதரத்தன்மையாய் நடந்துகொள்ளவேண்டுமென்றும் மத விஷயத்தில்எந்தமதக்காரர்களுடனும் சண்டைசெய்யும்படி எந்த ஆதாரத்திலும் இல்லை என்றும் திருநபி பிறந்த இந்த பெருமையான நாளை இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு பயன் படுத்தும் ஞாபகமாக வைத்துக்கொள்ளவேண்டும் என்றும், அரைமணிநேரம் பேசினார்.

திரு. ஈ. வெ. இராமசாமி.

பிறகு திரு. ஈ. வெ. இராமசாமி முடிவுரையாக ஒரு மணிநேரம் பேசினார். அதாவது:-சகோதரர்களே! உங்கள் மத சம்பந்தமான ஒரு சிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு என்னைத் தலைமை வகிக்க அழைத்ததற்கு நான் நன்றிசெலுத்துகிறேன்.

என்னை அநேகர் மததுரோகியென்றும் கடவுள் மறுப்புக்காரன் என்றும் சொல்லுவார்கள். இந்த ஊரிலும் பலர் சொல்லுவார்கள். அப்படியிருக்க நீங்கள் என்னை அழைத்தது மிகவும் தைரியமென்றே சொல்லவேண்டும். எப்படி இருந்தாலும் நான் இத்தமாதிரி சந்தர்ப்பங்களில் எனது அபிப்பிராயத்தை வெளியிட பின் வாங்குவதே இல்லை. சென்ற வருஷத்திலும் இதேமாதிரி கொண்டாட்டத்தில் நான் பேசி இருக்கின்றேன். அதிலும் பல இந்துமுஸ்லீம்களுக்கு அதிருப்தி இருந்திருக்கலாமானாலும் அரசருக்கு நிருபதி எற்பட்டு முஸ்லீம்களால் அல்லாசாமிப் பண்டிதை சிறைத்தப்பட்டதற்கு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். ஆனால் என்பேரில் கோபித்துக்கொண்ட இந்துக்கள் இவ்வூரில் தங்கள் மாரியம்மன் பண்டிகையைக்கூட சிறுத்திவிட சம்மதிக்காமல் மிகுதியும் காட்டுமிராண்டித்தனமான முறையிலேயே நடத்தின்றார்கள். இப்படியேதான் எங்கும் நடைபெறுகிறது. இந்தக்களைவிட இல்லாமானவர்கள் அறிவுக்கு மதிப்புச் கொடுப்பவர்கள் என்பதும் நியாயத்தை ஒத்துக்கொண்டபடிஉடனே நடப்பவர்கள்என்பதும்இதிலிருந்து ஒருவாறு உதாரணமாய்விளங்குகிறது. ஆனால் இன்னும் அநேக விஷயங்களில் திருத்துப்பாடு ஆவேண்டி இருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள். முஸ்லீம் சீர்திருத்தத் தலைவர்கள் இதை வலியுறுத்திக்கொண்டே வருகின்றார்கள். கூண்டு திருவிழா முதலியவற்றையும் சிறுத்தி விடுங்கள். இதனால் எல்லாம் இல்லாம் கொள்கைகள் கெட்டுப்போகாது. இவை இருந்தால்தான்பரிசுத்தத்திற்கிடமானதாகும். இத்தமுக்கியமான நான் என்பதில் வேலூர் மௌல்வி சாயபு அவர்கள் குர்ஆனின் மேன்மையையும் திரு முகமது நபி அவர்களின் உபதேசத்தின பெருமையையுப்பற்றி சொன்னார்கள். எனனால் அந்தப்படி சொல்லமுடியாது. எனெனில் நான் அவற்றை படித்துப்பார்த்தவனல்ல. அந்த மேலைக்கு நான் போவதுமில்லை, நான் அதற்கு அருகனுமல்ல. அப்படி ஏதாவதுநான்படித்து அதைப்பற்றி இங்கு பேசுவது என்பதும் அதிகப்பிரசங்கித்தனமேயாகும். எனெனில் பெரிய பெரிய மௌல்விகள் இருக்கும் போது அவர்கள் முன் நான் என்னதான் படித்தாலும் என்ன பேசமுடியும்? அன்றியும் புல்தகத்தில் இருப்பதைவிட பிரத்தியகூத்தில் உள்ளதைப்பற்றிப் பேசுவதே பலனளிக்கக்கூடும்.நான் இந்த சந்தர்ப்பத்தை எதற்கு உபயோகித்துக்கொள்ளக்கூடுமென்றால் மக்களிடம் பிரத்தியகூத்தில் காணும் விஷயங்களைப் பற்றியும் இன்னமும் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்கின்ற விஷயத்தைப்பற்றியும் பேசுவதும் பயன் படுவதாகும் என்று கருதுகின்றேன். திருநபி அவர்களின் இவ்வளவு அருமையான உபதேசம் என்பவற்றில் உலக மக்கள் எல்லாம் பயன் அடையும்படி செய்ய என்ன என்ன செய்யவேண்டும் என்பதற்கு ஆகவே நீங்களும் இந்த காலை பயன்படுத்திக்கொள்ளப்பார்க்கவேண்டும் என்றேகருதுகிறேன்.

சேட்டி முடுக்கா? சரக்கு முடுக்கா?

இஸ்லாம் மார்க்கம் "மக்களுக்கு உபதேசிப்பதிலும் வேதவாக்கியங்களிலும் மேன்மையானதாய் இருக்கின்றது" என்கின்றதிருப்தியானது மனிதசமூகத்திற்கு எல்லாப்பயனையும் அளித்துவிடாது. ஆனால் அதன் தத்துவத்தின் கொப்ப காரியத்தில் அதன் பயனை உலகத்தில் மேன்மையுறச்செய்து மக்களுக்கு நல்ல வழிகாட்டியாகி உலகமக்களை ஒன்றுபடுத்தவும் அனைவரையும் சகோதரத்தன்மையுடனும் இருக்கவும் பகுத்தறிவுடனும், சுயமரியாதையுடனும், சுதந்திரத்துடன் வாழவும் செய்யவேண்டும். எந்தக் கொள்கைக்காரனும் புஸ்தகத்தில் இருப்பதைக்கொண்டு தங்கள் முன்னோர்கள், பெரியார்கள் சொன்னார்கள் என்பதைக்கொண்டு இனி உலகத்தை எய்க்கமுடியாது. உலகம் பகுத்தறிவுக்கு அடிமையாகி எதையும் பிரத்தியகூ அனுபவத்தைக் கொண்டு பரீகூசித்து சரி பார்க்க வந்துவிட்டது, அதற்கு தணிக்கும் விட்டது. சேட்டி முடுக்கு செல்லாது. சரக்கு முடுக்காய் இருந்தால்தான் இனி செலாவணியாகும். "என்சரக்கை பரீகூசிக்கலாமா?" என்கின்ற அடக்குமுறை இனிப்பலிக்காது. "அவர் ஒல்தியென்று சொன்னார்" "இவர் ஒல்தியென்று சொன்னார்" "ஆண்டவன் சொன்னான்" என்பதெல்லாம் அனுபவதத்திற்கு நிற்காவிட்டால் காரியத்தில்நடந்துகாட்டாவிட்டால் இனிமதிப்புப்பெறமுடியாது. ஆதலால் எந்தச் சரக்கின் யோக்கியதையும் கையில் வாங்கிப்பார்த்துதான் மதிக்கவேண்டியதாகும். அந்தமுறையில் இல்லாம் கொள்கைஎன்பதும் முஸ்லீம்மக்களின் நடத்தையைக்கொண்டும் அவர்களது பிரத்தியட்சப் பயனைக்கொண்டும் தான்மதிக்கப்படமுடியும்.

உலகம் சிரிக்காதா?

இந்துக்கள்தேரிழுப்பதைப்பார்த்தும் முல்லீம்கள் பரிகாசம்செய்துவிட்டும்முல்லீம்கள் கூண்டுகட்டி சுமந்துகொண்டு கொம்புதப்பட்டை, மேளம், பாண்டு, பாணம் வேடிக்கைசெய்துகொண்டு தெருவில் போய்கொண்டிருந்தால உலகம் திருப்பிச் சிரிக்கமாட்டாதா?

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

என்று யோசித்துப்பார்க்கவேண்டும். இந்துக்கள் காசிக்கும், ராமேஸ்வரத்திற்கும் போய் பணம் செலவழித்து விட்டு "பாவம் தொலைந்துவிட்டது" என்று திரும்பிவருவதைப்பார்த்து முஸ்லீம்கள் சிரித்துவிட்டு முஸ்லீம்கள் காசுக்கும், முத்துப்பேட்டைக்கும், மக்காவுக்கும் பணத்தை செலவு செய்துகொண்டு போய்விட்டு வந்து தங்கள் "பாவம் எல்லாம் தொலைந்து விட்டது" என்று கருதிக்கொண்டு புதுக்கணக்குப் போட வந்தார்களானால் மற்றவர்கள் சிரிக்க மாட்டார்களா? என்று நினைக்கவேண்டும். மக்கள் மார்க்கத்தைக் காப்பாற்றுவதென்றால் கொள்கைகளை பகுத்தறிவுக்கு இணங்கி இருக்கும்படி ஷராக்கிரதையாய்ப்பார்த்து பயன்படுத்தவேண்டும். "தீர்க்கதரிசிகள்பகுத்தறிவுக்கு விரோதமாய் சொல்லி இருக்கமாட்டார்கள்" என்ற கருதி அவற்றை தன் இஷ்டப்படி அருத்தம்செய்து கொண்டு பிடிவாதமாய் இருப்பது மூடநம்பிக்கையைவிட மோசமானதாகும். அம்மாதிரி மூடநம்பிக்கையின் பயனாய் தீர்க்கதரிசிகள் என்பவர்கள் சொன்னதின் கருத்தையும் உண்மையையும் அறிந்துகொள்ள முடியாமலும் போகும்.

பகுத்தறிவு.

நமக்குப் பகுத்தறிவையும் நடுநிலைமையையும் எதிலும் பயன்படுத்த உறுதியும் துணிவும் இருந்தால்தான் உண்மையைக் கண்டுபிடிக்கவே முடியும். நாம் அறிவை உபயோகப்படுத்தாமல் நபிகள் வாக்கியத்திற்கு புரோகிதர்கள் சொல்லுகின்றபடி தப்பர்த்தம் செய்துகொண்டு "இதுதான் நபிகள் சொன்னது" என்று சொன்னால் நபிகளுக்கு மரியாதை செய்ததாகுமா? நமது சொந்தக்கண்ணை பரிசுத்தப்படுத்திப் பரீட்சித்துப்பார்க்கவேண்டும். சாளேசரம் இருந்தால் சரியாய்த்தெரியாது. பக்கப்பார்வையாய் இருந்தாலும் சரியாய்த் தெரியாது. இரண்டுக்கும் தகுந்தபடி தூரத்தை சரிபடுத்தி கல்லை கண்ணுடிகொண்டு பார்க்கவேண்டும். மஞ்சள் கண்ணுடி போட்டுக்கொண்டு பார்த்தால் மஞ்சளாகத்தான்தெரியும். சிகப்பு சிகப்பாகவும், பச்சை பச்சையாகவுந்தான் தெரியும். நல்ல சுத்தமான எந்தவித நிறமும் இல்லாத கண்ணுடிகொண்டு பார்க்கவேண்டும். அதுபோலவே தைரியமான பகுத்தறிவுடன் சுத்தமான நடுநிலைமை மனதுடன் எதையும் பார்க்கவேண்டும். கண்ட உண்மையை தைரியமாய் வெளியில் எடுத்துச்சொல்லவேண்டும். அப்படிச்செய்யாமல் தங்களுக்குத்தெரிந்த தப்பிதங்களை மூடி வைத்திருந்தால் கடைசியாக நிரபேர் செய்யமுடியாத அளவு மோசமானதாகிவிடும். நீங்கள் பார்க்கின்ற கண்ணும், நீங்கள் செய்கின்ற அருத்தமும், நீங்கள் அறிந்த மாதிரியும் புத்திக்கும், அனுபவத்திற்கும் பொறுத்திப்பாராமல் எல்லாம் சரியானதாகத்தான் இருக்கும் என்று நினைத்துவிடாதீர்கள். உங்களைப்போன்ற மற்றவர்கள்எப்படி நினைத்தார்கள்? நினைக்கின்றார்கள்என்ற பாருங்கள்.

மற்றவர்கள் மதிப்பது.

நபி அவர்கள் உபதேசத்தை குருட்டியர் எப்படி மதிக்கின்றார்கள்? எப்படி அர்த்தம்செய்கின்றார்கள்? அவர்கள் என்ன பலன் அடைகின்றார்கள்? என்பதையைபோல உலகத்தின் முஸ்லீம்களின் கடப்பு முழுவதையும், அழுவலையும், பலனையும் நன்றாய் கவனித்துப் பார்க்கவேண்டும். உங்கள் "எதிரி" மதத்தை (கொள்கைகளை) பரிசோதிப்பதுபோல் எதிரி ஆதாரத்தை எந்தெந்த வழியில் பரிசோதித்து நியாயம் அநியாயம் சொல்லுகிறோமோ அந்த மோக்கத்துடன், அந்த வேகத்துடன் உங்கள் கொள்கைகள் என்று உங்களுக்குப்புரோகிதர்களால்போதிக்கப்பட்டு நீங்கள் கடைக்கும் ஒவ்வொரு கடவுடிக்கையையும் பரிசோதித்துப் பார்க்கவேண்டும். கண்ட உண்மையை வீரத்துடன் வெளியிட்டு குற்றமிருப்பின் திருத்தவேண்டும். மனிதன் முடிவுபெற்ற முற்போக்கானவன் என்று யாரும் கருதிவிடக்கூடாது. உலகமும் முழு முற்போக்கை அடைந்துவிட்டதாகக் கருதிவிடாதீர்கள். திருத்தம் அவசியமானால் திருத்தியாக வேண்டும். திருத்தம் சரியென்றுபட்டவழியில்மணம்திருப்பயமோவெட்கமோ அடையக்கூடாது.

இந்தியாவும் அப்படித்தான்.

நபி அவர்கள்தோன்றிய காலத்தில் அரேபியாதேசம் எப்படி இருந்ததென்று மௌல்வீசாயபு அவர்கள் சொன்னார்களோ அப்படியேதான் இன்னமும் இந்தியா-இந்து கொள்கைகள் இருந்து வருகின்றது. தாரே பியர்சனிடத்தில் பெண் குழந்தை பிறந்தால் தூக்கப்பட்டுகொல்லுகின்ற வழக்கம் இருந்ததாக மௌல்வி சாயபு சொன்னார்கள். இந்தக்கனிடத்திலும் பெண்குழந்தை பிறந்தால் தூக்கப்படும் வழக்கம் இன்னும் இருக்கின்றது. சமீபகாலம்வரை பெண்களை -பெரிய பெரிய பெண்களை புருஷன் இறந்து போனால் பர்த்தாவின் உடலை வைத்து தெருப்புக்கொளுத்தும் வழக்கம் இருந்துவந்தது. இன்றும் பெண்களை அடிமையிடத் தேவையில்லை என்ற சொல்லி சகுனத்தடையாகப்பாவித்து கொடுமைப்படுத்தும்முறை இருந்துதான் வருகின்றது. அரேபியர் பல கடவுள்களை வணங்கினதாகச்சொன்னார்கள். அதுபோலவே இன்றும் இந்துக்கள் ஒவ்வொருவரும் பல கோடிக்கணக்கான கடவுள்களை உருவத்துடன் மாத்திரமல்லாமல் பெண்டு பிள்ளை பாட்டி ஆடுமாடு குதிரை யானை எலி பெருச்சாளி மயில் கருடன் பாம்பு வாகியஉருவங்களுடன் வணங்குகின்றார்கள். இவையெல்லாம் கீழ்மக்கள் என்று சொல்லுகின்றவர்களிடம்தான் இருக்கின்றது என்று நினைத்து விடாதீர்கள். மேல்மக்கள்என்று மதத்தினர்போல் முடிவு கட்டப்பட்ட மக்களிடமே இருக்கின்றது. ஆதலால் நிருமகமதுநபி அவர்கள் தோன்றுவதற்கு முன் அரேபியா தேசம் எப்படிப்பட்ட காட்டு மிராண்டித்தனத்தில் இருந்ததோ அதுபோலவேதான் இன்றைய வரையில் இந்தியாவின் இந்துசமூகம் இருந்து வருகின்றது. இந்த லட்சணத்தில் இதை எடுத்துச்சொன்னால் இந்துக்களுக்குவரும் கோபத்திற்கு அளவே இல்லை. இந்தமாதிரியான ஒரு மதசம்பந்தமான முக்கிய நான் என்பதற்கு உங்களைப்போல் இந்துக்கள் என்னைக்கூப்பிடவும் மாட்டார்கள் நான் எதாவது சொன்னாலும்பொறுக்கவும்மாட்டார்கள். என்னைவிட்டதையே துவர்கள் மதப்பிரசாரமாய் கருதுவார்கள். ஆனால் இஸ்லாம் கொள்கை என்பது எவ்வளவு பெருமையாய் எவ்வளவு சகோதரத்தன்மையாயிருக்கின்றது என்பதை யாரும் எந்தவித அபிப்பிராயக்காரனையும் கூப்பிடவும் அவர்கள் சொல்லும் எதையும் பொருமையாய் கேட்கவும் இருக்கின்ற சுதந்திரத்தைப்பார்த்து இவ்விஷயத்தில் இந்துக்கள்கொட்டப்படவேண்டுமென்றே சொல்லுகிறேன்.

துலுக்கர் துடுக்கரா?

மௌல்வி அப்துல் கரீம்சாயபு அவர்கள் துலுக்கன் துடுக்கன்என்ற இந்துக்களால் சொல்லப்படுவதாய்ச் சொன்னார். இது இந்துக்களுக்குள் பலவிடங்களில் காணத்தாலும் தமக்குள்ளும் வீரமும் ஒற்றுமையும் இல்லாத காரணத்தாலும் சொல்லப்படுவதேயாகும். முஸ்லீம்களுக்குள் இருக்கும் ஒற்றுமையும் வீரமும் இந்துக்களுக்கு துடுக்கர்களாய் காணப்படுவது ஆச்சரியமில்லை. என்னை ஒரு சாயபு அடித்தால் ஒரு அய்யரோ ஒரு செட்டியாரோ ஒரு முதலியாரோ சிபார்சுக்கு வரமாட்டார். ஏனெனில் ஜாதிப்பிரிவு காரணமாக இந்துக்களுக்குள் சகோதரத்தன்மை இல்லாமல் போய்விட்டது. ஒருவனுக்கு மற்றவனிடம் அன்பு இல்லாமல் போய்விட்டது. ஜாதிப்பிரிவு இல்லாத காரணத்தாலேயே முஸ்லீம் மக்களுக்கு சகோதரத்தன்மை இருந்து வருகின்றது. சகோதரர்களை தாராளமாய் உயிரையேகொடுத்தாலும் யாரும் அஞ்சுவது ஆச்சரியமல்ல. ஆகையால் இந்துக்கள் உங்களை குற்றம் சொல்லுகிறார்களே என்று கருதி உங்கள் சகோதரத்தன்மையையும் வீரத்தையும் ஒழுங்குவிட்டு விடாதீர்கள் எண்ணிக்கையில் கொஞ்சமாயிருந்தாலும் உலகத்தில் நீங்களும் தலைநிறந்து விளங்கக் காரணமே உங்கள் சகோதரத்தன்மையேயாகும். ஆகையால் அதைவிட்டு விடாதீர்கள். ஆனால் மற்ற கொள்கைக்காரரையும் உங்கள் சகோதரர்களாக ஆக்கிக்கொள்ள முயலுங்கள். அதற்குத் தடையாயிருக்கும் சாதாரண காரியங்களையும் இனிமேலாவது தேவதாத்திரத்தால் இருக்கும் வித்தியாசங்களையும்லக்ஷியம்செய்யாமல் ராஜிக்குத்தயாராயிருங்கள். இந்த கைகளிந்தான் ஒவ்வொருவரும் கொள்கையும் செல்வாக்குப் பெற்று தலை நிறக்கமுடியும். இஸ்லாம் கொள்கையைப்பற்றி யாராவது தப்பிமாய் நினைத்திருந்தால் தைரியமாய் திருத்த முற்படுங்கள்.

சந்தேகத்தை திருத்துங்கள்

உதாரணமாக மக்காயாத்திரையைப் பற்றி மலேயா நாட்டில் உள்ள இந்துக்களிடம் சொல்லப்பட்டதைனியில் என்னிடம் ஒரு இந்து என்பவர் ஒரு கேள்வி கேட்டார். அதாவது 'இந்துக்களது காசி ராமேஸ்வரம் மதுரையாத்திரையை மூடநம்பிக்கை என்கிறீரே. இஸ்லாம்மானவர்கள் மக்காயாத்திரை செய்ய மலேயாவில் அநேக முஸ்லீம்கள் செல்வதால் கஷ்ட நஷ்டப்படுகின்றார்களே' என்றார். நான் பதில் சொல்லமுடியாமல் அப்படியானால் முஸ்லீம்கள் அநுசரிக்கும் கொள்கைகள் முழுவதும் பகுத்தறிவுக்கொள்கை என்றும் நான்சொல்லவரவில்லை என்றும் அதில் அநேக கஷ்டகொள்கை பிரத்தியட்சத்தில் பார்க்கிறேன் என்றும் சொன்னேன். பிறகு சென்ற வருஷம் இதே கொண்டாட்டகாலில் ஈரோட்டிற்கு வந்த மௌல்வி அப்துல் அமீது சாயபு பாகவியவர்களைக் கேட்டேன். அவர்விளக்கமாக்கினார். முஸ்லீம்கள் மக்காவுக்குப் போவதில் செல்வத்திலும் சரீர நிடத்திலும் நஷ்டமுள்ளவர்கள் தான் போகவேண்டுமென்று இருக்கின்றதே தவிர எல்லோரும் போய்தீரவேண்டுமென்று இல்லை யென்றும், அந்த இடம் முகம்மதுநபி அவர்கள் உண்மையில் பிரத்தியட்சத்தில் பிறந்த இடம் என்பதற்காக அங்கு போவது என்பதுதவிர வேறு அற்புதமில்லை என்றும் அறிவு வளர்ச்சிக்கும் மற்ற மக்கள் நடை, உடை நாகரீகம் பார்த்துவரவும் பயன்படும் படியான ஒரு யாத்திரை என்றும் "கொலகளவு கொள்ளை கடத்தினை பாபம் தீர்த்துவிடும் என்று சொல்லுவது தப்பு" என்றும் அந்த மாதிரி எண்ணத்துடன் யாரும் போவதில்லை என்றும் சொன்னார். யாராவது அந்தப்படி போனாலும் அது தெரியாத்தனமென்றே சொன்னார்கள்.

ஆகவே மக்களிலேயே பிறவியில் வித்தியாசமில்லை என்ற சொல்லும் கொள்கையில் இதற்கு இடம் வித்தியாசம் கற்பிக்கப்பட்டு இருக்காது எப்பது பகுத்தறிவில் பட்டதேயாகும். ஆனால் இந்து கொள்கைகள் என்பவற்றில் 'ஒரு மனிதன் எவ்வளவு அயோக்கியனாயிருந்தாலும், கொலை செய்தாலும், திருடினாலும், நம்பிக்கை துரோகம் வஞ்சகம் முதலிய காரியம் செய்தாலும், ஒரு ஊரை நினைத்தால்-ஒரு ஊருக்குப் போனால்-ஒரு ஊரில் ஒரு குளத்திலுள்ள தண்ணீரைத் தலையில் தெளித்துக்கொண்டால்-பாபம் பரிகாரமாகிவிடும், மோட்சமடைந்து விடுவான்' என்று எவ்வளவோ அடியோடு பொய் பெருமைகளை கற்பித்து மூடநம்பிக்கை உண்டாக்கி அங்குள்ள சோமபேதிகள் பிழைக்கவ்தல யாத்திரை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதென்றும், அப்படிப்பட்ட ஸ்தல யாத்திரைப்புரட்டுகள் எல்லாம் பகுத்தறிவுக்கு விரோதமானது—மூடநம்பிக்கையில் பட்டது

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.)

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்

இந்தியத் தாய்.

இரண்டாவது புத்தகம்.

இந்துக்களின் பாலிய மணமென்றால் என்ன?

(T. D. கோபால்)

முன் தொடர்ச்சி

ஆனால், பம்பாய் நகர் இராஜீய வாதியான ஜிந்து ஜெயகர் அவர்கள், கவர்ன்மெண்டாரின் இந்த சையக் கேவல நிலைமையை மிகவும் தூஷித்து மும்முறையும் கண்டிக்கின்றார். மேலும் "இத்தகைய நிலைமைக்கு ஏறியாமையும், பயங்காளித்தனமுமே காரணமாகு" மெனவுரைக்கின்றார். விவாதத்திலிருக்கும் விஷயத்தின் முடிவானது, செய்கையைக் கோருகின்றதேயன்றி, சாவதானத்தை விரும்பவில்லை யெனவு முரைக்கின்றார்.

ஆங்கிலேயர்கள் சட்ட நிரூபணம் செய்வதில் புதிய முறைகளைக்கையாளுவதைக் குறித்தும், அவர்களுக்கனுசரணையாக விருக்கும சட்டங்களைக்குறித்தும மிக்க வன்மையாகக் கண்டிக்கின்றார். சௌராவழமும், கீர்த்தியும் வாய்ந்த திவர்களுடைய, அதாவது ஆங்லேயர்களின ஆக்ஷியானது, இந்தியாவுக்குப் பேருபகாரமாயிருந்து வந்ததெனவும், ஆனால் அவ்வித ஆக்ஷியானது இருபத்தைந்து அல்லது முப்பது வருடங்கள் வரையிலும் நடைபெற்று வந்து, துரதிஷ்ட வசமாக மார்லி—மின்டோ சீர்திருத்தத்துடன் தடுக்கமுடியாதபடி முடிவடைந்து விட்டதெனவும், அவ்வாறு முடிவடைவதற்கு முன், அதாவது இந்தியர்களுக்குப் புத்தியெளித்துக்கொண்டுவந்த ஆக்ஷி முறையானது, கடை முறையிலிருக்கும் பொழுது இந்திய கவர்ன்மெண்டார் தங்களுடைய மனசாக்ஷிக்கு நியாயமெனத் தோன்றிய வைகளைச் செய்து கொண்டும், நியாயமற்ற வைகளெனத் தோன்றிய வைகளை அறவே ஒழித்துகொண்டும் வருவதற்கு மவர்களுக்குப் போதிய தைரியமிருந்துகொண்டு வந்தது மல்லாமல், மக்களுக்கு இன்றியமையாதவைகளெனத் தோன்றிய வைகள யாவையும் அச்செய்கைகளாலேற்படும் மக்களின் கூக்குரலே கொஞ்சமேனும் பொருட்படுத்தாமல புரிந்து கொண்டுவந்தார்களெனவும், மேலும் இந்துமதத்தின் பேரால் நடைபெற்றுவந்த உடன் கட்டையேறல், சிசுஹத்தி, கழுத்தை நெறித்து கொல்லுதல், குஷ்டரோகிகளை உயிருடன் புதைத்தல், தூண்டிலில் மாட்டி தூக்கிவிடுதல், ஆகிய வைகளையும், இன்னும் இதைப்போன்ற செய்கைகளையும்] அறவே மிக்க தைரியமாக ஒழித்துவிட்டார்களெனவு மெடுத்துரைத்து "தற்காலமிருக்கக்கூடிய கவர்ன்மெண்டைவிட, அப்பொழுதிருந்த கவர்ன்மெண்டார் எவ்வாறு மிக்க தைரியசாலிகளாயிருந்திருக்க முடியுமென்பதைக் குறித்து நான் அதிக ஆச்சரியப்படுகின்றேன்" என ஜிந்து ஜெயகர் அவர்கள் உரைக்கின்றார். பிறகு, அதற்கிணங்கவே "ஒரு சமயம் தற்கால மிருக்கக்கூடிய இத்தனை பெயர்களை அப்பொழுது மக்களின் பிரதிநிதிகளெனக்கூறிக்கொண்டு, அவர்களுக்கு யோசனைகள் சொல்லும் படியான வசதிகளப் பொழுதில்லா திருந்திருக்கலா' மென அவர் தமது சொந்த அபிப்பிராயத்தையுமுரைக்கின்றார்.

கவர்ன்மெண்டாரின் எச்சரிக்கையைக் குறித்தும் சாவதாசத்தைக் குறித்தும் சென்னை ஜஸ்டிஸ் கட்சியார் அவர்களும் கவர்ன்மெண்டாரை அதிவன்மையாகவே கண்டிக்கின்றார். அவர், "நூல் வொரு கடவையும், அடுத்தடுத்து தமிந்த கவர்ன்மெண்டார் இந்து சமூக முன்றேற்றத்திற்கு ஓர் முடுக்கட்டையாகவே யிருந்து கொண்டு வருகின்றார்க"ளென உரைக்கின்றார். "இத்தேசமானது அறிவு விர்த்திக்காலத்திலும், சமூகதுறையிலும் முன்னேற்ற மடைவதை ஒரு அன்னிய அரசாங்கத்தார் தங்களுடைய அவசியமான முறைகளாலும், மெதுவாகவும், மிக்க சாவதானமாகவும் எச்சரிக்கையுடனும் செய்யப்படும் காரியங்களாலும் ஓர் பெரிய முட்டுக்கட்டையாகவே யிருந்துகொண்டு வருகின்றார்கள்....." என கோபமுள்ள திரு. லஜபதிராய் அவர்களுரைக்குபொழுது, அவர் தம்முடைய கூட்டத்தாரின அபிப்பிராயத்தையே உரைக்கின்றார்.

ஆனால், மீண்டும் வைதிகக் கோஷ்டிகளின் தலைவரான பண்டிட் மதனமோகன மாளவியா அவர்கள் தமதாசனத்தினின்று மெழுந்திருந்து தமது சிநேகிதர்களின் முழுக்கத்தை மிக்க அழுத்தமாகவும், வன்மையாகவும் கண்டித்துப் பேசுகின்றார்.

"சமூக சீர்திருத்த சட்ட நிரூபண விஷயத்தில், ஐயா, கவர்மெண்டார் அடிக்கடி முட்டுக்கட்டையாயிருந்து வந்ததாகக் கூறப்படுகின்றது. நான் அவர்களினித்தகைய அபிப்பிராயங்களை ஆகரிக்க முடியாதவனாகையிருப்பதைப்பற்றி மிக்க வருந்துகின்றேன். நமது செய்கைகளுக்கு நாமே பொருப்பாளிகளாயிருக்கும்பொழுது, என்ன சமூக சீர்திருத்தம் வேண்டியிருக்கின்றது?" என அவர் மிக்க கோபத்துடன், யாவரையு மிகழ்ந்துரைக்கின்றார். மேலும், அவர், "சமூக சீர்திருத்தத்தினால் நாமே என்னென்ன சீர்திருத்தத்தைச் செய்து விட்டோம்? தினந்தோறும் நாம் நமது உண்மையான ஊழியத்தால் செய்து கொண்டு வந்த சீர்திருத்தங்களை ஒரு பக்கத்திலும், சமூகத்தை சீர்திருத்திக்கொண்டும், சமூக சீர்திருத்தத்திற்கு உதவியளித்துக்கொண்டும் வந்த, கவர்ன்மெண்டாரால் நிறைவேற்றப்பட்ட சமூக சீர்திருத்த சட்ட நிரூபணங்களை மொருபக்கத்திலுமாக வைத்துக் கவனித்துப்பாருங்க|"ளெனவுமுரைக்கின்றார்.

அவர் உடனே தம்மைச் சுற்றிலுமுட்காரந்து கொண்டிருக்கப்பட்ட இந்திய சகாக்களை நோக்கி, அவர்கள் யாவரும் முதலாவதாக வெறும்வாய்வார்த்தைகளாலும், அபிநயங்களாலும் திருப்தியடைந்து விடக்கூடியவர்களெனவும், பொறுப்பும், கவலையுமற்றவர்களெனவுமுரைத்து, தங்களுடைய பிராந்தியங்களிலிருந்து கொண்டுவரும் இக்கொடிய வழக்கத்தை ஒழிப்பதற்காக அவர்கள் மக்களிடமுண்மையாகவே யாதொரு விதவேலையும் செய்யவேயில்லை யென்பதாகவும், இரண்டாவதாக இப்பொழுது கவர்மெண்டாரை அவர்கள் இச்செய்கைக்கிணங்கும்படியாக வற்புறுத்தினால் நாட்டில் சூழப்பரும், நிலைப்புமேற்படுமெனவும், ஓர் வழக்கத்தை அழிப்பதற்காக திடீரெனச் செய்யப இச்சட்டத்தை மக்கள் வரவேற்கவும், அறிந்து கொள்ளவும் செய்யவேண்டியதவர்களுடைய கடமையாக விருந்தமையாகள், ஜனங்களை அதற்காக ஆயத்தப்படுத்தாமலிருப்பதாகவுமவர்கள் மீது குற்றஞ்சாட்டுகின்றார்.

பிணக்குகளும், பேதங்களும், பிடிவாதங்களும், தர்க்கங்களும், குற்றம் சாட்டுகிறவர்களின் மீதே குற்றஞ்சாட்டுதலுமான செய்கைகளே அன்றைய தினம் விவாதத்திலேற்பட்ட பயனாகும்.

இந்துக்களின் பாலிய விவாகமென்பது மதத்தைக்குறித்த ஓர் சடங்கை மட்டும் குறிக்கின்றதெனவும், ஆனால் அகால திரேக சம்பந்தத்தை அது குறிக்கவில்லை யென சிலரால் கூறப்பட்டது. ஆனால் அதற்கு மாறாக, மற்றுஞ் சிலரால் அது பாலிய தாய் மார்களின் நிலைமையை பலவந்தம் செய்கின்றதெனவும், அதனால் மக்கள் கஷ்டீனித்துக்கொண்டே வருகின்றார் களெனவும் கூறப்பட்டது.

மக்களின் ஜனத்தொகையில் ஒரு சிறிய யெண்ணிக்கை மட்டுமே அவ்வழக்கத்தை யனுஷ்டித்துக்கொண்டு வருவதாக ஒரு சாராரால் கூறப்பட்டது. ஆனால் அதற்கு மாறுகப்பிரி தொரு கூட்டத்தாரால் அவ்வழக்க மானது இந்துக்களில் பெரும்பான்மையான மக்களால் அனுஷ்டித்து வரப்படுகின்ற தெனவும், அதையொழிப்ப தென்பதானது இந்த சமூகத்திலேயே ஒரு புரட்சியையுண்டு பண்ணி விடுமெனவும் கூறப்பட்டது.

இந்துக்களின் பாலிய விவாகமானது அதிவேகமாக மறைந்து கொண்டே வருகின்றதென ஒரு சிலரால் கூறப்பட்டது. ஆனால் அதற்கு மாறுக, அதுவிருத்தியாகிக்கொண்டே வரப்படுவதாக இன்னுஞ்சிலரால்கூறப்படுகிறது.

இந்துக்களின் பாலிய விவாகமானது உயர்ந்த ஜாதி மக்களாலேயே தான் அனுஷ்டிக்கப்பட்டுவரப்படுகின்றதென ஒரு கூட்டத்தாரால் கூறப்பட்டது.

ஆனால் அதற்கு மாறுக அது எல்லா ஜாதி மக்களாலும் மிதிக்கப்பட்டும், இழிக்கப்பட்டும், வரும்படியான பெரும்பான்மையான மக்களால்தான், அதாவது தீண்டாதாராலும், தாழ்த்தப்பட்டமக்களாலுந்தான் அனுஷ்டிக்கப்பட்டு வருவதாகவு மற்றவர்களால் கூறப்பட்டது.

இந்துக்களின் பாலிய விவாகமானது இந்துமத தர்மத்திற்கு விரோதமின்றி நிறுத்தப்பட்டுவிடலாமென அநேக சட்டசபை அங்கத்தினர்களால் ஒப்பாகக் கூறபபட்டது. அவ்வா

றே அது நிறுத்தப்படத்தான் வேண்டுமெனவும், அவ்வாறு செய்வதால் யாதொருவித கலகமுமேற்படாதெனவுங்கூட கூறப்பட்டது. ஆனால் இதற்கு மாறுக மற்றுஞ்சிலரால், அவ்வாறு ஒரு சட்டமியற்றப்படுமானால் அது மக்களை மதவெறியினால் பைத்தியம் பிடித்த வர்களைப் போல் ஆட்டிவிடுமெனவும், அவ்விதச் செய்கையினாலேற்படும் பலாபலன்களை அனுபவிப்பதற்காக ஒரு கவர்ன்மெண்டும் தன்னுடைய மக்களைத் தைரியமாய் விரும்பி அழைக்காதெனவும் கூறப்பட்டது.

இந்துக்களின் பாலிய விவாகமானது நாட்டிலுள்ள சட்டத்தை மீறி, அதற்கெதிரிடையாகவே இந்துமத சடங்குகளின்படி நிறைவேற்றப்பட்ட போதிலும்கூட அது சட்டப்படி செல்லக் கூடியதல்ல வென தீர்மானித்து விடலாமென சிலரால் கூறப்பட்டது. ஆனால் இதற்கு மாறுக ஏராளமான அங்கத்தினர்களால் அத்தகைய விவாகத்தை சட்டப்படி செல்லக்கூடியதல்லவெனக்கூறுவதானது ஆதிகாலமதத்தின் பரிசுத்தமான அஸ்திவாரத்திலேயே அபிப்பிராயபேதங்களிருப்பதாகக் காணப்படுகின்றது. ஆகையினால், இந்த இந்து பாலிகைகளின் விவாகத்தடுப்பு மசோதாவை, பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள எல்லா மாகாணங்களுக்கு மனுப்பிவைத்து உங்களுக்குள்ளாகக் காணப்படும் பெருத்த அபிப்பிராய பேதங்களின் மீது பொதுவாக பெயரும் தீர்த்தியும் வாய்ந்த அநேக இந்தியர்களின் அபிப்பிராயங்களால் உங்களுக்கு உதவியளிக்கும்படியாக விரும்புகிறோம்' என கவர்ன்மெண்டார் உரைத்து விட்டார்கள்.

ஆனால், இந்திய சட்டசபை அங்கத்தினராகிய திரு. ஐயகர் அவர்கள் கவர்ன்மெண்டாரின் இத்தகைய எண்ணத்தை மிக்க ஆத்திரத்துடனும், கோபாவேசத்துடனும் கண்டித்திருக்கின்றார். அபிப்பிராயம்? ஆம்! எதற்காக வென்று நான் கேட்கலாமா? பரிசுத்தவேதமானதுக்குட்பட்ட ஒரு சூழ்ச்சை நியாயமாகவும், தர்மமாகவுமிருக்கவேண்டியவிடம் சிதக்கஞ்செய்ய கூடிக்கவற்பட்ட. விடுதிதாறுவென்பதை அறிந்து கொள்ளுவதற்காகவா? அல்லது அக்சூழ்ச்சை விவாகப் படுக்கையரையிலிருக்க கூடாதென்பதை அறிந்துகொள்ளுவதற்காகவா?.....

சமூகக் கட்டிடமானதுகெருப்புப்பற்றி யெறிந்து கொண்டிருக்கும்பொழுது அந்நெருப்பு அணைக்கப்படவேண்டியதுஇன்றியமையாததா? அல்லது அணைக்கப்படவேண்டாமா? என்பதை அறிந்து கொள்ளுவதற்குப் பொது ஜன அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ளுவதற்காக, நாம் 'சாவதான' மாகச் செல்லவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளவபதிகிறது என அவர் கண்டிக்கின்றார்.

ஆகையினாலே, சட்டசபையில் அபிப்பிராய பேதங்களேற்பட்டதினால், கவர்ன்மெண்டாருடையயெண்ணமானது கைகூடி வருவதற்கு சாத்தியமில்லாது போய்விட்டது. இந்து பாலிகைகளின் விவாகத் தடுப்பு மசோதாவானது இதர மாகாண கவர்ன்மெண்டுகளின் அபிப்பிராயங்களையறிந்து கொள்ளுவதற்காக ஒத்து ப்பப்படமாட்டாது. அதை உடனே ஒரு செலக்ட் கமிட்டியாரின்யோசனைக்குஒப்புவித்து விடவேண்டும். "இம்மசோதாவானது எவ்வாறு இருந்தால் இந்த சட்ட சபையாரால் ஒத்துக்கொள்ள முடியுமோ, அவ்விதசீர்திருத்தங்கள் அவர்கள் இம்மசோதாவில் செய்யப்படும்" என ஒரு இந்திய சட்டசபை அங்கத்தினர் (திரு. குமார் கங்கா நந்திப்ஹா) உரைக்கின்றார்.

தொடரும்.

விருதுநகர் மகாநாடு.

மகாநாட்டுப்பந்தலில், மகாநாடுநடைபெறும் சமயத்தில் பிரபலக்குடும்பத்தைச் சேர்ந்த ஓர் விதவையின் திருமணமும் நடைபெறும்படியான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றதென மகாநாட்டின் விளம்பர அதிகாரி அறிவிக்கின்றார்.

சுயமரியாதைச் சங்கம், சேலம்.

சுயமரியாதைச் சங்கத்தின் ஆதரவில் 2-8-31 தேதி மாலை 5 மணிக்கு கெஞ சங்க பார்க்கில் ஓர் பாலசாமி செட்டியார் பி.ஏ. பி.எல். அக்ராசனத்தின்கீழ் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் பல கட்சி பெரியார்களும், கல்லூரி மாணவர்களும், சங்க அங்கத்தினர்களுமாக சுமார் 1000 ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள். அப்பொழுது சேலத்திற்கு விஜயம் செய்திருந்த சுயமரியாதை அன்பர்களாகிய திருவாளர்கள் மாயவரம் எஸ். வி. லிங்கம், பட்டுக்கோட்டை கே. வி. அழகிரிசாமி "சுயமரியாதையும் திராவிடர் மகாநாடும்" என்ற விஷயத்தைக் குறித்து வெகு ஊக்கமாக பேசினார்கள். இரவு சுமார் 8-30 மணிக்குமேல் அங்கத்தினர்கள் மீட்டிங்கு ஒன்று கூடையெற்றது.

கீழ்கண்ட கனவான்கள் கார்யகர்த்தி அங்கத்தினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்

கௌரவ உபாத்தியாரு கே. ஆர். வி. ஆர்த்தனரிசெட்டியார், தெ.ஆ. சங்க பிரசிடெண்டு, பஞ்சாயத்து கோர்டு பிரசிடெண்டு.

உபாத்தியாவர்கள் திரு ஏ. கே. செந்திரையய்ய செட்டியார், முனிசிபல் கவுன்சிலர். திரு. கே. எஸ். அருணாசலம் செட்டியார், திரு. ஆர். நரசிம்ம செட்டியார், (ஹானரரி மேஜிஸ்ரேட்.) திரு எஸ். ஜகந்நாத செட்டியார் மண்டி.

கூட்டுக் காரியதரிசிகள திரு. ஆர். பாலசாமி செட்டியார் பி.ஏ. பி.எல். திரு சிவபெருமாள் அவர்கள் பிரபல வியாபாரி. திரு. கே. கே. கிருஷ்ணசாமி அவர்கள்.

பொருட்பாளர் திரு. எல். கே. பெருமாள் அவர்கள்.

நிர்வாகக்கமிட்டி மெம்பர்கள் திரு.கே. ஆர். வி. அர்த்தனரிசெட்டியார், திரு. ஆர். பாலசாமி செட்டியார், திரு. ஏ. கே. செந்திரைய்ய செட்டியார், திரு. அய்யாசாமி எம். ஏ. பி. எல். அவர்கள், திரு. கே. ஏ. சித்தையய்யா அவர்கள்.

சங்க பார்க்கு மேற்பார்வையாளர் திருவாளர்கள் கே. பி. கந்தசாமி செட்டியார், பி. எஸ். கந்தசாமி செட்டியார்.

மேற்கண்ட கனவான்களை நியமிக்கப்பட்டதும், விருதுநகர் சுயமரியாதை மகாநாட்டிற்கு 30 பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்தும் கூட்டம் சுமார் 9-30 மணிக்கு இனிது கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

உண்மை ஆராய்ச்சிசங்கம்.

சென்றல் உண்மை ஆராய்ச்சி சங்கத்தால் திருவள்ளர் மா. சே. பண்டாரம் அவர்கள் தலைமையில் திருவாளர்கள் எஸ். குருசாமி அவர்கள் ஆ. பெ. பரமசிவம், மா. சி. சுப்பையா, கோ. ராஜகோபால், இந்திசிங், திருச்சி கி. அ. பெ. விஸ்வநாதம் ஆகியவர்கள் சுயமரியாதை இயக்கம் முதலியவைகளைப்பற்றி பேசினார்கள். திரு கூ. மா. சி. மாரிமுத்து, சுயமரியாதை கீதம் பாடினார்.

நாகை தேசபக்த சபாஜம்.

பகத் சிங் படத்திறப்புவிழா.

19-1-31 தேதி மாலை 3மணிக்கு இச்சமாஜ பொதுக்கூட்டம் ஒன்று கூடியது. அவ்வமயம், பெரும்பாலான அங்கத்தினர்கள் விஜயம் செய்திருந்ததோடு பெருஜனங்களில் அநேகரும் வந்திருந்தது குறிப்பிடத் தக்கது. தலைவர் முடிவுரையாக கூட்டத்தின் அவசியத்தைப்பற்றிக் கூறுகையில் அருமபெரும் சமதர்ம வீரராகிய சர்தார் பகத்சிங்கின் ஞாபகார்த்தமாக இக்கூட்டம் கூட்டப்பட்டதென்றும், இப்படத்தை கே.முருகேசன் சமாஜத்திற்கென பரிசளித்ததைப்பற்றி போற்றியதோடு சமதர்ம நோகத்தை நண்குணர்ந்தவரும் உண்மை சமதர்ம வீரருமாகிய சமாஜ உபதலைவர் திரு. சிவஞானம் அவர்கள் இப்படத்தைத் திறந்து வைக்கத் தகுதியுடையவரென்றும் அவரையே திறந்துவைக்கும்படியாகக் கேட்டுக் கொண்டும் அமர்ந்தார்.

திரு. சிவஞானம் அவர்கள் பலத்த காகோஷத்தினிடையே பகத்சிங்கினுடைய படத்தைத்திறந்து திரு. பகதசிங்கின் தேசபக்தியையும், தியாகபுத்தியையும் தன்னபிக்கையையும்பற்றி நீண்டதோர்சொற்பொழிவாற்றினர்.

பிறகு சுயமரியாதை இளைஞர்கள் வி. சாமிநாதன், லட்சுமணன், டி. என். ராமச்சந்திரன், பி. இராமநாதன் இன்னும் மற்றவர்களும் பகத்சிங்கினுடைய வாழ்க்கையின் லட்சியத்தையும் தியாகபுத்தியையும் எடுத்து பலவிதமாகப்புகழ்ந்து பேசினர். அதன்பிறகு பகத்சிங்கின் தங்கள் மிக உறுக்கமாய்ப் பாடப்பட்டது. வந்தேமாதரத்துடன் கூட்டம் இனிது முடிவு பெற்றதும் அங்கு விஜயம் செய்திருந்த யாவர்களுக்கும் அதிவிமரிசையாக சம பந்திபோஜனமொன்று அளிக்கப்பட்டதென வே சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

1931-ஆ ஆகஸ்டு-மீ 8, 9ம் தேதிகளில் விருதுநகரில் நடந்த இரண்டாவது சுயமரியாதை பெண்கள் மகாநாட்டில் திருமதி இந்திராணிபால சுப்பிரமணியமவர்கள் செய்த தலைமை உபந்யாசம்.

அன்பார்ந்த சகோதரிகளே!

சகோதரர்களே!!

ஈண்டு இன்று குழுமியுள்ள பெண்கள் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் பேற்றைச் சிறியேற்கு வழங்கிய வரவேற்புக் கூட்டத்தார்க்கும், எனைய அன்பர்கட்கும் எனது நன்றியறிதலான வணக்கம்.

எக்கிளர்ச்சிகளிலும், கலவாது ஒதுங்கி நிற்கும் அடியேன் இம்மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க ஒப்பினதிற்கு இரண்டு காரணங்களுண்டு. ஒன்று பெண்கள் மகாநாடென்பதும், மற்றொன்று சுயமரியாதை மகாநாடென்பதுமாம்.

எனது குரு.

எனது குரு இராமசாமிப்பெரியார்; சுயமரியாதை இயக்கம் தொடங்கிய காலத்திலிருந்து எனக்கு அவர் இயக்கத்தில் பற்றதலுண்டானது. எனென்றால், அவ்வியக்கத்தின் கொள்கைகள் நியாயமானதாகவும், உன்னதமாகவும் இருந்ததே. மற்றப்பாலும் பிறப்பாலும் மதிப்பிழந்த மக்களுக்குச் சுயமரியாதை உணர்ச்சியை எழுப்பிய நமது பெரியார், இயக்கம் ஆரம்பிக்கவே அவர் புகட்டும்நீதிகளையும், உண்மைகளையும், நன்கு சிதானபுத்தியிலிருந்து ஆராய்ந்து பாராமல், மதியீனத்தாலோ, பிடிவாதத்தாலோ, அறியாமையாலோ, அல்லது அர்த்தமில்லாத குருட்டுப் பழக்க வழக்கங்களில் ஆழ்ந்திருக்கும் காரணத்தாலோ, சிலர் அப்பெரியாரையும், அவ்வியக்கத்தையும் குறைகூற ஆரம்பித்தார்கள், அவர்களைப்பற்றி நான் பெரிதும் இரங்குகிறேன். வடநாட்டிற்கு காந்தியடிகள், ஹரிஜனங்களுக்கு, ஜெயக்கர் எப்படியோ, அப்படியே நமது தென்னாட்டிற்கு இராமசாமிப் பெரியாரென்று சொல்லுவேன்.

முன்காலத்தைச்சிறிது ஆராய்ந்து பார்த்தால் கபிலரென்ன, புத்தரென்ன, இராஜாராம் மோஹனரென்ன, அவர்களைப் போன்றவர் நமது இராமசாமிப்பெரியாரென்று சொல்லுவது மிகையாகாது.

ஆகவே நான் இங்கு குழுமியிருக்கும் பெண்களின் சார்பாக இராமசாமிப்பெரியார் நீடூழி வாழ்கவென்று முழுமனதோடும், முழு இருதயத்தோடும், முழு பலத்தோடும் சொல்லுகிறேன்.

நமது நிலைமை.

தமிழர்கள் பண்டைக்காலங்களில் பெண்மணிகள் தனக்கு இஷ்டமான்நாயகனைத்தாங்களேதெரிந்தெடுத்துவந்தவழக்கமொன்றே, அந்நாளைய பெண்ணுரிமைக்குப் பேர்திய அத்தாட்சியாகவிருக்கிறது. சகோதரிகளே! அந்தக்காலத்தில் வீரத்தாய்மார்களாகவும், கல்வி, கேள்விகளிற் சிறந்தவர்களாகவும், உரிமையுடையவர்களாகவும், இருந்த பெண் மக்களின் நிலைமை, தற்காலம் அடிமைகளாகவும், கல்வியில்லாதவர்களாகவும், காமக்ருஷிகளாகவும், வேலையாளர்களாகவும், ஆண் மக்களின் சூழ்ச்சியால் இப்பொழுதிருக்கும் தாழ்மையான நிலைமையை நினைக்க நினைக்க உங்களுக்கு நெஞ்சம் பதறவில்லையா? இரத்தம் குழுறவில்லையா? உயிர் துடிக்கவில்லையா? அந்தோ ஆண்மக்களின் நெஞ்சங்கல்லோ! இரும்போ!! அறிகிலேன்; இதற்குக் காரணம் ஆணுலகின் சுயநலமேயாகும். எப்பொழுது நமது நாட்டுப் பெண்மணிகளுக்குக் கல்வியில்லாமலும், உரிமையில்லாமலும் செய்தார்களோ, அந்நாள் தொட்டு நமது நாடு உரிமையிழந்து அடிமைக்குழியில் ஆழ்ந்து வருகின்றதென்று சொல்லலாம்.

அடிமை நாடு.

நமது நாடு இப்பொழுதிருக்கும் கூனிணைக்குக்காரணங்கள் பலவற்றுள் சான்கு காரணங்களை முக்கியமாக இங்கு குறிப்பிடுகிறேன். ஒன்று பெண்ணுரிமை இல்லாமல் செய்தது. இரண்டு:— பிறப்பால் வகுப்பு வகுத்தது. மூன்று மக்களால் தீண்டாமை கொண்டது. நான்கு: மூட பழக்க வழக்கங்களும் சடங்குகளும். இன்நான்கு காரணங்களுள், முதற் காரணமாகிய பெண்ணுரிமை தட்டிற்று யென்பது நமக்குப் பொருந்திய தாயிருந்தாலும், ஏனைய மூன்று காரணங்களும் பெண்களுக்கு எந்த வகுப்பிலாவது சம்பந்தம் உண்டு என்பது நான் சொல்லாமலே விளங்கும்.

பெண்ணுரிமை தடிந்தது.

பெண்மக்கள் படிக்கலாகாது என்றும், பெண் சரியான வயதடைந்து பகுத்தறிவு பெறுமுன் ஒருவனைக் கலியாணம் செய்தல்; விதவையாலுல் மொட்டை யடித்து அழகைக்குறையச் செய்து, அவளைப்பகியால் ஒடுக்குவித்தல் ஆகிய கட்டுப்பாடுகள் பெண்மணிகளின் உயிர்நாடியை நசுக்கிவிட்டன. இம்மாதிரியான கட்டுப்பாடுகள் ஆண்மக்களுக்குண்டோ? இல்லை! இல்லை!!

(a) கல்வி:— ஆண்மக்களைப்போலவே பெண்மக்களும் கற்றிருத்தல் வேண்டும், அப்பொழுதுதான், குடும்ப வாழ்க்கையும் சமூக வாழ்க்கையும் தேச க்ஷேமமும் உண்டாகும். கல்விப்பயிற்சிக்குரிய மூளை பெண்மக்களுக்கில்லையோ? தற்காலம் பெண்கள் படித்து பரீக்ஷைகளில் தேர்ந்து, டாக்டர்களாகவும், உபாத்தியாயர்களாகயிருந்து அறிவேலைகள் செய்வதையும், நூல்கள் எழுதுவதையும் உபந்யாசங்கள் செய்வதையும், நகரசபைகளிலும், சட்டசபைகளிலும் ஸ்தானங்கள் வகித்து பொருப்புள்ள வேலைகளைச்செய்வதையும் நாம் பார்க்கின்றோம்.

ஆனலும் நமது பெண் மக்கள் இப்பொழுது சிறு பாண்மையோர் தான் படித்திருப்பதற்கு முக்கியமான காரணங்கள் இரண்டு. ஒன்று பால்ய விவாகம், மற்றொன்று பன்னிரண்டு வயதானதும் பெண்களை வெளியில் அனுப்புவதில்லை என்கிற கட்டுப்பாடுதான். கீழ்வரும் கணக்கிலுல் கல்வி கற்கும் நமது நாட்டுப் பெண்மணிகளைக் காண்க.

கீழ்வகுப்பில் அதிகப் பெண்கள் படித்து மேல் வகுப்புகளில் குறைந்து போகிறார்கள்.

1922-23ம் வருஷத்தில் 1வது வகுப்பில் 100 பெண்களும், 1923-24 வருஷத்தில் 2வது வகுப்பில் 30 பெண்களும், 1924-25 வருஷத்தில் 3வது வகுப்பில் 16 பெண்களும், 1925-26 வருஷத்தில் 4வது வகுப்பில் 10 பெண்களும், 1926-27 வருஷத்தில் 5வது வகுப்பில் 6 பெண்களுமாகும். ஆகையால்கடைசி வரை படிப்பிக்க வேண்டியதவசியமாகும்.

விவாகம்:-இந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லப் புகின் ஆண் மக்களின் கொடுங்கோன்மை ஓர் நாளெல்லாம் சொல்லி வருந்தலாம். பக்குவமடையாத, அதிலும் பகுத்தறிவு தேர்ச்சி பெறுமுன், தனக்கறியாத ஓர் ஆண் குழந்தைக்கு மணம் செய்து வைக்கப்படுகிறது. விவாகமென்பது வெறும் விளையாட்டல்ல. புருஷனும், மனைவியும் ஈருடல் ஓருயிர்போல் அன்பு என்னுக கயிற்றால் பிணிப்பது தான் திருமணம். விவகாரம் தெரியாத சிறுவயதிலேயே கலியாணஞ்செய்வதினால் அது திருமணமாகாது. பெண்களுக்கு 14 வயதுக்கு முன் கலியாணஞ் செய்தால் அவர்களை ஆயுள் பரியந்தம் கதிக்காவல் சிறையில் வைப்பதற்கு ஒப்பாகும்.

இது நாகரீகத்திற்கும், நியாயத்திற்கும், ஒவ்வாத நிலைமையென்று நான் மரியாதையாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவிலுள்ள சுதேச சமஸ்தானங்களைப் பாருங்கள். முக்கியமாக பரோடா, கொட்டா முதலிய தேசங்களிலெல்லா பெண்களை சிறுவயதில் கல்யாணம்செய்து கொடுத்தலை நிறுத்தி விட்டார்கள். அங்கே இருக்கும்படியான எல்லா சமூகத்தாரும் அதன்படி நடக்கிறார்கள். மைசூரிலும் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்போகிறார்கள். நமது பிரிட்டிஷ் இந்தியாவில், அதிலும் சென்னை இராஜதானியில் சாரதா சட்டம் அமுலுக்கு வரப்போகிறதென்று கேள்விப்பட்ட திலிருந்து இளமணத்தில் ஐக்கியப்பட்டிருக்கும் சமூகத்தார்கள். தங்கள் தங்கள் பெண் குழந்தைகளை இரண்டு வயதிலும் விவாகம் செய்து கொடுத்து விட்டார்கள். இவர்களில் பலர் பி. ஏ., எம். ஏ. பட்டம் பெற்றவர்களாம். இவர்கள் படிப்பு என்னத்திற்கு ஆயிற்று? என்று நான் கேட்கிறேன். "எட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது, என்பதுபோல் இவர்கள் படிப்பிஞல் நாட்டிற்குக் கேடேயொழிய வேன் ஒன்றுங்கிடையாது.

பால் குடிக்கும் குழந்தைகளை மணஞ்செய்யும் பாதகர்கள் இன்னும் மனிதராக உலவுகிறார்களே, அந்தோ! நமது தேசம் இந்தக் கொடுமைக்கு ஆளாகிவிட்டதே என்று நினைக்க நினைக்க மனம் புண்படுகின்றது. சகோதரிகளே! உங்களுடைய பெண்களை, எனது சகோதரிகளை இந்நிலைக்கு ஆளாக்காதீர்கள்.

(c) கிழமணம்:-இளமை மணத்தால் நாடு ஒருபக்கம் சீர்கேடடைகிறதென்றால், கிழ மணத்தால் நாடு பன்மடங்கு அழிந்து வருகிறது.

வெள்ளிக் கம்பி என்ற சொல்லும்படியாக மயிர் நரைத்து, கரம்புக் கட்டுக்குலைந்து, எலும்பு உலுத்து, முதுகு வளைந்த ஓர் கிழவன், இளமையும், அழகும் பொருந்திய ஓரிளங்கட்டழகியை மணக்குங் கொடுமை நமது நாட்டில் மலிந்திருக்கிறது. இதைப் பெண்கொலை யென்றுதான் சொல்லவேண்டும். ஆனது பற்றி இதைக் கைக்கொள்ளும் இந்துமதமும் பெண் கொலை மதம் என்றே சொல்லுவேன்.

(d) பலதாரங்கொள்ளல்:- இந்த விஷயத்தைப்பற்றி பேசப்புகின் ஒரு நாளல்ல, பல நாளல்ல, வருஷா வருஷங்களாகப் பெண் மக்கள் துக்கிக்கலாம். மறுதாரங் கொண்டவர் சொல்லுங்கூற்று:-ஒருவன் விவாகம் செய்த நாளிலிருந்து என் மனைவி சரீர அசௌக்கியத்துடன் இருப்பதால் மறு விவாகம் செய்து கொண்டேனென்கிறான். ஒருவன் எனது வீட்டாருக்கும்,என் தாய்தந்தையருக்கும் பிடிக்கவில்லை. ஆதலால், மறுதாரம் செய்துகொண்டேன்என்கிறான். மற்றஞ்சிலர், முதல் தாரம் இறந்து விட்டான், ஆதலால் மறு தாரங்கொளாதென்செய்வது? என்கிறார்கள். இன்னுஞ்சிலர், தாய் வீட்டிலிருந்து சீர் சரியாகக் கொண்டு வரவில்லை அப்பேர்பட்டவளிருந்தென்ன? இறந்தென்ன? ஆனது பற்றி இரண்டாம் மனைவியைக் கொண்டேனென்கிறார். இன்னும் சிலர், முதல் தாரத்திற்கு ப்பிள்ளையில்லை என்று இரண்டாந்தாரங் கொண்டேன், அதன்பிறகு சொத்துடன் ஓர் அழகிய இளங்கன்னிகை கிடைத்தனள், அவளையும் மணஞ் செய்து கொண்டேன் என்கிறார்கள். மேற்கூறியவர்களைச் சுயமதிப்புள்ளவர்கள், நீங்கள் செய்வதெல்லாம் நியாயமாக விருக்கிறதா?' என்று கேட்டால், உடனே புராணங்களும், இதிகாசங்களும் புறப்படுகின்றன. அதாவது:-

சுப்பிரமணியருக்கு இரண்டு பெண்சாதி யில்லையா? பரமசிவன் க

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குடி அரசு

ஈரோடு 1931ஹு ஆகஸ்டுமீ 9உ

இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?

உயர்திரு. காந்தி அவர்கள் தமது 30-7-31-உ "யங் இந்தியா" பத்திரிகையில் "நாம் இன்று செய்யவேண்டியது எது?" என்னும் தலைப்பின் கீழ் "பொதுஜனங்களால் அதிகமாகக் கண்டிக்கப்படும் காரசாரமான காங்கிரஸ் ஜீவாதார உரிமைகளைப் பற்றிய தீர்மானங்கள்" என்று ஆரம்பித்து, அவைகளையெல்லாம் எடுத்தெழுதி, அவைகளைப்பற்றி தமதபிப்பிராயமென்பதாக எழுதியிருப்பது என்னவென்றால்,

"ஜீவாதார உரிமைத்தீர்மானத்தில் குறிப்பிட்ட பல விஷயங்களில், அனேகவிஷயங்களை இன்றே நடத்திவைக்கக்கூடியவைகளாகும். ஆதலால், அவற்றுள் சர்க்காரார் மூலம் சட்டம் செய்து நிறைவேற்றப்பட வேண்டிய சில விஷயங்கள் தவிர, பொதுஜனங்களால் செய்து முடிக்கவேண்டிய முக்கியமான விஷயங்களை இப்பொழுதே நாம்செய்து முடிக்காவிட்டால் பிறகு, இதே பொதுஜனங்கள் தயவாலே இருக்கவேண்டிய அரசாங்கத்தால் எப்படி அவைகள் செய்துமுடிக்கப்பட முடியும்?"

"இன்றைய தினமே, கண்டிப்பாய் மாற்றித் தீரவேண்டிய முக்கிய விஷயங்களை செய்யாமல் விட்டுவிட்டால், நமக்கு அதிகாரம் வந்தபிறகு அவற்றில் நமக்கு அலக்ஷியம் ஏற்பட்டுவிடும்."

"உதாரணமாக

1. ஒருவருக்கொருவர் மதங்களை மரியாதை செய்வது,

2. பெண்களை எல்லா விஷயங்களிலும் சமத்துவமாய் நடத்துவது,

3. தீண்டாமையை ஒழித்து விடுவது, ... ஆகியகாரியங்களைச் செய்ய இப்பொழுதே நம்மால் முடியாவிட்டால், சுயராஜ்யம்வந்தபிறகு சுயராஜ்ய அரசாங்கத்தாருக்கு மக்களை நிர்ப்பந்தப் படுத்தி மேற்கண்ட சீர்திருத்தங்களைச் செய்வதற்கு சக்தியில்லாமல் போய்விடுமென்றே நான் தீர்க்கதரிசனம் சொல்லுவேன். ஏனெனில் ஜன அபிப்பிராயங்களுக்கு விரோதமாக ஒருஜனசெல்வாக்குப் பெறவேண்டிய அரசாங்கமானது ஒரு நாளும் ஒரு காரியத்தையும் செய்யமுடியவேமுடியாது. அப்படி யேதாகிலும் செய்யமுடியுமேயானால், அந்த அரசாங்கம் உடனே அழிக்கப்பட்டுவிடும்."

"பகுத்தறிவு ஞானமும், கட்டுப்பாடுமுள்ள ஜனநாயகம்தான் சரியான ஜனநாயகமாகும். அப்படிக்கில்லாமல் லாபபட்சமும், பாமரத்தன்மையும், மூடநம்பிக்கையுமுள்ள மக்களின் ஜனநாயகமானது, எப்படியிருந்தாலும் முடிவில் வீண் குழப்பமேற்பட்டு தானாகவே அழிந்தே தீரும்"

"ஆகவே, தீண்டாமை யொழித்தல் முதலிய விஷயங்கள்கொண்ட ஜீவாதார உரிமைகளென்பது இப்பொழுதே செய்துதீர வேண்டியதேயொழிய, பின்னால் செய்யவேண்டியதென்றோ, செய்துவிடலாமென்றோ சொல்லக்கூடியவைகளல்ல. தேசம், உண்மையான சுயராஜ்யத்திற்கு தயாராயிருக்கின்றது என்று சொல்லுவதானது வாஸ்தவமானால், மேற்கண்ட வேலைகள் செய்வது சிறிதும் கஷ்டமானதல்ல. ஆதலால் ஆங்காங்குள்ள காங்கிரசுக்காரர்கள், ஆங்காங்குள்ள முக்கிய குறைகளென்று தங்களுக்குத் தோன்றும் காரியங்களை முன்னதாகத் திட்டங்கள் போட்டுக்கொண்டு அதற்காக வேலை செய்ய வேண்டும்."

என்று எழுதியிருக்கின்றார்.

இதே அபிப்பிராயங்களை நாம் இதற்குமுன் பலதடவைகளில் எடுத்து சொல்லி, பேசியும், எழுதியும் வந்திருக்கின்றோம். உதாரணமாக திருவாங்கூர் (கோட்டாறு) உபன்யாசத்தில்,

"முதலாவது திரு. காந்தியும், திரு. ஜவஹர்லாலும் கேட்கும் சுயராஜியம் ஜனநாயக சுயராஜியமா? ஏகநாயக சுயராஜியமா? என்பதை முதலில் விளக்கப் டுத்திக் கொள்ளுங்கள். ஜனநாயகமானால் தீண்டாதவர்களை "கோவிலுக்குள் விடமாட்டேன், குளத்தில் விடமாட்டேன்" என்று சொல்லுகின்றவர்கள் யார்? பிறகு அந்தகோவிலையும் சொத்தையும் பறிமுதல் செய்கின்றவர்கள்யார்? என்றுயோசித்துப்பாருங்கள்ஜனங்கள் விடமாட்டேன் என்றுசொன்னால் அந்த ஜனப்பிரதிநிதி சர்க்கார், யார் மனதையும் புண்படுத்தாத சர்க்கார், கோவிலை எப்படி பரிமுதல் செய்யமுடியும்? கோவிலுக்குள் பறையனைவிட இஷ்டப்படாத ஜனங்கள், இஷ்டப்படும் பிரதிநிதியை தெரிந்தெடுப்பார்களா? என்பதை யோசித்துப்பாருங்கள். ஜனங்கள் இஷ்டத்திற்கு விரோதமாய் நடக்கும் இராஜியபாரம் ஜனநாயக இராஜிய பாரமாகுமா? மற்றும் இந்திய ஜனங்கள் தங்களுக்குள் இருக்கும் ஜாதி வித்தியாசத்தையும், தீண்டாமையையும் ஒழிப்பதற்கு ஜனநாயக சுயராஜியம் வேண்டுமென்றால் இது பித்தலாட்டமா அல்லவா? என்று யோசித்துப்பாருங்கள். இன்றையதினம் தீண்டாமை ஒழிப்பதை யார் வேண்டாமென்கின்றார்கள்? இல்லாமானவர்கள் ஆக்ஷேபிக்கின்றார்களா? கிறிஸ்துவர்கள் ஆக்ஷேபிக்கின்றார்களா? அல்லது கிறிஸ்துவ அரசாங்கம் ஆக்ஷேபிக்கின்றதா? ஆரம்பத்திலேயே புரட்டு பேசும் சுயராஜிய அதிகாரம் வந்தால் கொடுமை செய்யுமா? நன்மை செய்யுமா? இன்று தீண்டாமை அனுசரிக்கும் ஜனங்களுக்கு சர்வ அதிகாரம் வந்தால் தீண்டாமையை பலப்படுத்துவார்களா? தளர்த்துவார்களா? எந்த அரசாங்கத்தில் தீண்டாமை இருந்தாலும் தீண்டாமையை அனுசரிக்கின்றவர்கள் இன்று சுயராஜியம் கேட்கும் இந்துக்களே யொழிய வேறல்ல.

ஆகவே, இந்தமாதிரி வார்த்தைகள், மக்களை ஏய்க்கும் தந்திர வார்த்தை அல்லவா என்பதை யோசித்துப்பாருங்கள்." என்றும் சொல்லியிருக்கின்றோம்.

ஆனால், அவற்றை நாம் சொல்லும்போது அவைகளைப்பார்த்த நமதுநாட்டு "தேசிய வீரர்"களும், "காங்கிரஸ் பக்தர்"களும் ஆத்திரங் கொண்டிருப்பார்கள். இப்பொழுதோ அவர்களுடைய "குருநாதர்" "மகாத்மா" "காங்கிரசின்—தேசிய சபையின் ஏகநாயகர்" "உலகம் போற்றும் உத்தமர்" "தேர்களிலும், இரதங்களிலும் கடவுளுக்குப் பக்கத்திலிருத்தி வைத்து, பூஜை, நைவேத்தியங்கள் செய்து கும்பிடவேண்டியவ" என்று சொல்லப்படுபவரான திரு. காந்தியவர்கள் 30-7-31ந் தேதி "யங் இந்தியாவில் இம்மாதிரி சொல்லியிருக்கின்றாரே இதற்கென்ன சமாதானம் சொல்லப்போகின்றீர்கள்? என்று தான் கேட்கின்றோம்.

அதோடு கூடவே மற்றொரு விஷயத்தையும்பொழுதே குறிப்பிட விரும்புகின்றோம். அதாவது, "திரு காந்திக்கு அடுத்தவ" ரென்றும், "தென்னாட்டு காந்தி" யென்றும் பல தேசபக்தர்களால் கொண்டாடும்படியான திரு. சி. இராஜகோபாலாச்சாரியாரவர்கள் தமது குழாத்துடன் ஈரோட்டிற்கு வந்து, காந்தி பிரசாரம் செய்த காலத்தில் ஈரோடு காங்கிரஸ்பக்தர்களான, நவஜவான் பாரத சபை வீர்களான சில நண்பர்கள் திரு. ஆச்சாரியாரை நடுக்கூட்டத்தில் "தீண்டாமை விஷயமாக நாங்கள் ஏன், எவ்வித பிரசாரமும் செய்வதில்லை? காங்கிரசிலும், வேலைத்திட்டமாக நடத்தவதில்லை? அதைப்பற்றி ஒரு வார்த்தைகூட ஏன் பேசுவதில்லை?" என்று கேட்டபொழுது, அதற்கு திரு. ஆச்சாரியாரவர்கள் சொன்னபதில என்னவென்றால்,

"எங்களுக்குத் தீண்டாமை பிரசாரம் செய்ய மகாத்மா காந்தியவர்கள் கட்டளையிடவில்லை. ஆதலால் நாங்களதைப்பற்றி ஒன்றும் செய்யவில்லை' யென்று தைரியமாய்ச்சொன்னார்.

ஆனால், திரு காந்தியவர்களின் இந்த மேற்கண்ட வாக்கியங்களிலோ, "சுயராஜ்யம் பெறுவதற்கு முன்பாகவே தீண்டாமை விலக்கு வேலை செய்தாகவேண்டும். அதைச்செய்ய முடியாத ஜனங்களால் சுயராஜ்யம் வந்தால் தீண்டாமை யொழிக்கப்பட முடியாமல் போவதோடு கிடைத்த சுயராஜ்யம் தானாகவே அழிந்து நாசமாய்ப் போய் விடும்" என்று அழுத்தந்திருத்தமாக சொல்லியிருப்பதுடன், "காங்கிரஸ்காரர்கள் ஒவ்வொருவரும் தங்கள் எல்லைகளுக்குள்ளிருக்கும் ஜீவாதார உரிமை விஷயங்களில் எதை முன்னால் செய்யவேண்டுமென்றுயோசித்துப் பார்த்து, திட்டம் போட்டுக்கொண்டு அவைகளை உடனே செய்ய புரப்படவேண்டு" மென்பதாக எழுதியிருக்கின்றார்.

(இவையெல்லாம் 4-8-31ந் தேதி "சுதேசமித்திரன்" 10ம்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

பக்கம், 5-வது கலத்திலிருக்கிறது). ஆகவே திரு. இராஜகோபாலாச்சாரியாரவர்களும், அவரைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராய்க்கொண்ட காங்கிரஸ் தலைவர்களும், தொண்டர்களென்று சொல்லிக்கொள்பவர்களும், மற்றும் சுயமரியாதையியக்கத்தை வைது வாழும் தேசிய வீரர்களும் இதற்கென்ன பதில் சொல்லுகின்றார்களென்று கேட்கின்றோம்.

ஜவுளிக்கடை மறியலினால், வெளிநாட்டுக்குப் போகும் செல்வம் நமது நாட்டில் நிற்கலாமென்றே வைத்துக்கொள்ளுவோம். அதனால்லட்சாதிபதியாயிருக்கும், மில் முதலாளிகள், கோடீஸ்வரர்களாகிவிடுவார்களென்றே வைத்துக் கொள்ளுவோம். அவர்களால் காங்கிரசுக்கும் லட்சம் லட்சமாய் பணம் கொடுக்கப்பட முடியுமென்றும் வைத்துக்கொள்ளுவோம். ஆனால் இன்றையதினம் இந்திய பொருளாதார நிலைமையில் எந்த க்கூட்டம் கஷ்டப்பட்டு காவல் பட்டினி, அரைப்பட்டினியாயிருக்கின்றதோ அவர்களுக்கு என்ன லாபம் என்பதை யோசித்தால் அதன் பயனற்ற தன்மையும் விளங்கும். வெளி நாட்டுத்துணி ஒரு அங்குலம்கூட இந்தியாவுக்குள் இரங்காமல் செய்தாலும் மற்பவர்களுக்கு தினம் 1க்கு 1 அணுவுக்கு மேல் கூலியில்லையென்பதை அதுவும் கட்டுகின்ற வண் ஒன்றுக்கு இரண்டாய், மூன்றாய் விலை கொடுத்தால்தான் என்பதையும் நினைத்துப்பாருங்கள்.

அதுபோலவே கள்ளுமறியலால் கள்ளுக்கடைகள் எல்லாம் எடுபட்டுப் போனதாகவே வைத்துக்கொள்ளுவோம், சர்க்காராருக்கு வரும் கள் இலாக்கா வரும் படியைக் குறைப்பதின் மூலம் சர்க்காராரை ஸ்தம்பிக்கச்செய்து விடலாமென்றே வைத்துக்கொள்ளுவோம். குடிகாரர்களும், பகிரங்கமாய்க் குடிக்கும் கள்ளுக் குடியை விட்டுவிடுவார்களென்றே வைத்துக்கொள்ளுவோம். இவைகளெல்லாம் கீழ்ஜாதிக்காரனென்றும், தீண்டாதவனென்றும் தெருவில், குளத்தில், பிரார்த்தனை ஸ்தலத்திலிருக்க, அருகில்வரமுடியாதவரென்று சொல்லப்படுகிற இழிவை ஒருநிமிஷநேரமாவது வைத்துக்கொண்டிருக்கும் அவமானத்தைவிட முக்கியமானதா? என்று கேட்கின்றோம்.

மற்றும், "திரு. காந்தியின் உண்மைத்தோற்றம்" என்னும் தலைப்பின் கீழ் மதுவிலக்கு விஷயமாய் திரு காந்தியவர்கள் எழுதிய விஷயத்தை எடுத்துப்போட்டிருந்தோம். அதாவது,

"கள்ளு, சாராயக்கடைகளை மூடுவது நம்முடையவேலையல்ல"

"குடிகாரர்கள் திருட்டுத்தனமாய் கள்ளு, சாராயம் உற்பத்தி செய்து எப்படியாவது குடித்துத்தான் தீருவார்கள்".

ஆதலால், கள்ளு, சாராயக் கடைகள் மூடப்பட்டாலும் இப்பொழுதிருப்பது போலவே கள்ளு, சாராயம் விற்பனையாகிக்கொண்டும். குடிக்கப்பட்டுக்கொண்டுந்தானிருக்கும்".

என்று திரு. காந்தியவர்கள் எழுதியிருந்ததை எடுத்துக்காட்டியிருந்தோம். அப்படியிருந்தும் மறியல்களென்பது ஒரு நாடகம் போல் நடத்தப்பட்டுக்கொண்டு வருகின்றது.

திரு காந்தியவர்கள் எழுதின விஷயத்தை காற்றில் பறக்கவிட்டுவிட்டு, "காந்திக்கு ஜே!" என்று கூப்பாடு போட்டுக்கொண்டே கள்ளுக்கடைகளிலும், ஏலம் விடப் படும் இடங்களிலும் தொண்டர்கள் மறியல் செய்து கொண்டு வருவதும். இம்மறியலால் குடி நின்று விடுமா? என்றால் "அரசியல் காரியத்திற்கு மறியல் செய்கின்றோம்" என்பதும், அரசியல் மறியல் செய்து கைவிடப்பட்டு விட்டதே என்றால் "ஒழுக்கத்துக்காக செய்கிறேன்" என்பதுமாய் சமயத்திற்குத் தகுந்தபடி பேசி மறியல் செய்யப்பட்டு வருகின்றது.

இதனால் கவர்ன்மெண்டுக்கு வரும்படி குறைந்து போகலாம். ஆனால் இந்தக்காரணத்தைக்கொண்டே கவர்ன்மெண்டார்செய்து தீரவேண்டிய அநேக நல்ல விஷயங்கள் கல்வி, சுகாதாரம், போக்கு வரவு முதலிய துறைகள் இந்தச்சாக்கைச் சொல்லிக்கொண்டு செய்யப்படாமல் நிறுத்தப்பட்டும் போக நேரிட்டுத்தீருமேயல்லாமல், எந்த உத்தியோகஸ்தருடைய சம்பளமாவது லஞ்சமாவது காலணு குறைந்து விடுமா என்று பாருங்கள்.

அன்றியும் இதனால் பொது ஜனங்களுக்கோ, குடிக்கின்றகூட்டத்தார்களுக்கோ ஒருவித இலாபமும் ஏற்படப்போவது கிடையாது. ஏனென்றால்,

இன்றையதினம் ஏலம் மறியலால் ஏலத்துகை மாத்திரம்குறையுமே யன்றி, ஏலத்தில் எடுத்தவர்களுடைய வியாபாரங்களொன்று பிரமாதமாய்க்குறைந்து விடப்போவதில்லை. அவர்கள் பதினாயிரம், லட்சம் என்ப தாகலாபம் அடைந்தமறியல்தொண்டர்களுடன் வியாபாரம் பேசி தாராளமாய் செல்வவான்களாகப் போகின்றார்கள். எப்படியும் மூன்னிலும்செல்வாக்காய் கௌர்ச்சியாய் வேடிக்கையாய் வியாபாரம்நடக்கத்தான் போகின்றது. குடிகாரர்களும் நன்றாய்க் குடிக்கப் போகிறார்கள். இந்தப்படியல்லாமல் ஒருசமயம் கொஞ்சநஞ்சம்மறியல் நடப்பதாயிருந்தாலும், சந்துக்கடைகள் மூலமும், தோட்ட விற்பனைகள் மூலமும், திருட்டுத்தனமாய் சாராய வகைகள் காய்ச்சியும், சாராயக்கடைகளிலிருந்தும் வீடுவிடாய் கொண்டுபோய் கொடுத்துக்கொண்டிருக்கின்ற காரியங்களால், குடியும், குடிவியாபாரக்காரர்களுடைய லாபமும் எப்பொழுதும் போலவேநடந்து கொண்டுதானிருக்கப் போகின்றது.

ஆகவே இன்றைய கள்ளுக்கடை, ஏலஸ்தலம்ஆகியவைகளின் மறியல், குத்தகைதாரர்களுக்குஇலாபத்தைக் கொடுக்கப்போகின்றதென்பதைத்தவிர, கலால்இலாக்கா சட்டங்களும், ஹத்தும்இயற்கையாகவே அமுலுக்கு வராதிருக்கும்படியாக செய்யப்படுவதைத்தவிர, வேறு ஒரு இலாபமும் ஏற்படப்போவதில்லை.

ஆகவே, இதுவரையில் நாம் காங்கிரசையும், காங்கிரஸ் நடவடிக்கைகளையும் குற்றம் சொல்லிக் கொண்டுவருகின்றோமென்று நினைத்துக்கொண்டிருந்த வஞ்சனை, சூட்சியறியாத பாமர மக்களும், மூடப்பழக்க வழக்கங்களிலடிமைப்பட்டு, பரத்தறிவையுபயோகிக்கத்தைரியம் பெறுத பொது ஜனங்களும் இவ்விஷயங்களை யெல்லாம் நன்றாய் ஆராய்ச்சி செய்து பார்த்த பிறகாவது, சுயபுத்தியுடன் ஒரு முடிவுக்கு வரமாட்டார்களாவென்று ஆசைப்படுகின்றோம்.

சம்பளக் குறைவு.

மதிய மாகாண அரசாங்க கல்வி மந்திரி உயர்தர வகுப்புப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளின் சம்பளங்களை அதாவது ஹைஸ்கூல் பிள்ளைகளுக்கு 8-ல் ஒரு பங்கும், கலாசாலை மாணவர்களுக்கு 3-ல் ஒருபங்குமே குறைத்திருக்கின்றார்கள். இதற்குக் காரணம் சொல்லும்போது "ஏழைக் குடியானவர்களுடையவும், தொழிலாளிகளுடையவும் பிள்ளைகள் படிப்பதற்கு இப்போதைய சம்பளம் மிகஅதிகமாயிருப்பதால் அதை குறைத்து அவர்களுக்குச் சௌகரியம் செய்ய வேண்டும் என்பதற்காகவே குறைக்கப்படுகின்றது" என்று சொல்லி இருக்கிறார். இதை அந்தச் சர்க்காரார் ஒப்புக்கொண்டு விட்டார்கள். அது இந்த ஆகஸ்டு 1-ந் தேதி முதலே அமுலுக்குவரப்படுமாம்.

அந்தப்படி இங்கும் நமது கல்வி மந்திரி பிள்ளைகள் சம்பளத்தை ஏன் குறைக்கப்படாது என்பதற்குக் காரணம் நமக்குத் தெரியவில்லை.

மலாய்நாடு

கோலாலம்பூர்.

குடி அரசு வாசகசாலையின் ஆண்டுவிழா திரு வி. எ. சந்திராசன் அவர்கள் தலைமையில் நடந்தது. திருவாளர்கள் திருச்சி கி.அ: பெ. விஸ்வநாதம், என்.வி. விஸ்வலிங்கம், பி. சுப்பையா ஈ.சு. கருப்பசாமி மண்டூர், மே. சு. ராஜகோபால் முதலியவர்களும் மற்றும் பலரும் நிரளாகூடி இருந்தார்கள். திரு கூ. மா. சி. மாரிமுத்து அவர்களால் சுயமரியாதைபாட்டு பாடியபின் திரு விஸ்வநாதம் 'கிழக்கும் மேற்கும்' என்பதுபற்றி பேசினார். பிறகு திருவாளர்கள் A. W. குப்புசாமி, சி. குப்புசாமி, சி.ரா. ஷண்முகம், எ. பி. பரமசிவம், கோ. ராஜகோபால், வி.சுப்பையா, கே. எம். எஸ். மாரிமுத்து ஆகியவர்கள் பேசினார்கள். கடைசியாக சுயமரியாதைப்பாட்டுகள் பாடி கூட்டம் முடிபெற்றது.

சுயமரியாதைப் பிரசாரம்.

திருமங்கலம் தாலூகா கட்டாரெட்டி பட்டியில் சென்ற 25-7-31மாலை 6-30மணிக்குபொதுசாவடிக்குமுன்பாக உயர்திரு: எ.பி எரமரெட்டியார் அவர்களின் தலைமையின் கீழ்ஓர் பொதுக்கூட்டம்நடைபெற்றது. ஆதிதிராவிட மக்கள் அபிரிமிதமாய்வந்துகூட்டத்திற்குவிஜயம்செய்தது போற்றத்தக்கது. தலைவர் முன்னுரைபேச, குண்ணத்தூர் ஆசிரியர் திரு. பி. எஸ். கந்தசுவாமி அவர்கள் "தற்கால கல்வி" என்பது பற்றியும், ஆசிரியர் திரு. பி. எஸ். சுவாமிதாஸ் அவர்கள் "ஆதிதிராவிடர் துயரம்" என்பது பற்றியும் மாஜி மதுவிலக்குப்பிரசாரகர் திரு. கா. சங்கரையா அவர்கள் "பார்ப்பனக்கொடுமை, மதப்புரட்டு, புராணமூடம்" என்பதுபற்றியும் மீண்டோர் சொற்பொழிவாற்ற தலைவர் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

(11ம் பக்கத் தொடர்ச்சி)

கையைச் சிரசிலும், பார்வதியைப் பக்கத்திலும் வைத்துக் கொள்ளவில்லையா? தசரதமகாராஜனுக்கு அறுபதினாயிரத்து மூன்று பெண்சாதிகள் இல்லையா? கிருஷ்ண பகவானுக்கு 8 பேருக்குப் பெண்ஜாதி பிரண்டாயிருப்பினும் ஊரிலுள்ள பெண்களையெல்லாம் தன் மனைவிகளாக நினைத்துக்கொள்ளவில்லையா? என்ற புராணக்குப்பைகளிலிருந்து ஆபாச உதாரணங்களைக்காட்டி விடுகின்றனர்.

இவர்களைக் கேழ்க்க வேண்டிய கேள்வி என்ன வென்றால், "கற்பு" என்பது நாயகிக்கு மாத்திரந்தானா? நாயகனுக்கு இல்லையா? "கற்பு இரண்டு பேருக்கும் பொதுவென்று" பாரதியார் கூறியதையும் "ஒத்தஅழனும், ஒத்தகுணமும் ஒத்தகல்வியுமுடைய ஒருவனும், ஒருத்தியும்" என்னும் பெரியோரின் பொன் மொழியை நினைவூட்டுகிறேன். நாயகி இறந்தால் என் செய்வது? என்பவருக்கு "நாயகன் இறந்தால் என் செய்வதென்று கேட்பாரில்லையோ? மறுமணம் வேண்டுமேல் அவ்வுரிமை இருபாலாருக்கும் இருத்தல் வேண்டும். 'இவளைக்கட்டினதினால்தான் பிள்ளையில்லை, வேறொருவளை மணந்திருந்தால் பிள்ளை பிறந்திருக்கும், என்று நினைப்பது போல் பெண் என் நினைத்தல் கூடாது? பிள்ளை பெறும் ஆசை ஆணைவிடப் பெண்ணுக்கு அதிகம் என்பது யாவருமறிந்த விஷயம். 'மனைவியின் சரீர அசௌக்கியத்தால் மறுதாரம் கட்டினேனென்று சொல்லுகிறவர் களைப் புருஷன் அசௌக்கியமாகி விட்டால், மனைவி இன்னொருவனை மணம்புரிந்து வாழ்தல் கூடாதா? என்று கேட்கிறேன். இம்மாதிரி பெண்கள் கேட்டுவிட்டால் உடனே அவர்களை அயோக்கியரென்றும் சமூகமே அழிந்து போய் விடுமென்றுஞ் சொல்ல ஆரம்பித்ததுவிடுகின்றனர். ஒரு பிறவிக்கு ஒரு நீதி என்கிற கற்பு அடிமைப்படுத்துவதில் ஆசைக் கொண்ட மூர்க்கத்தனமேயல்லாமல் அதில் கடுகளவாவது யோக்கியமும், பொறுப்பும் இல்லையென்று சொல்வேன். இல்லறவாழ்க்கையில் அன்புகலந்த இன்பசுகம் இருவருக்கும் பொது அல்லவா? என்று கேட்கிறேன். ஆனால் சகோதரிகளே! இப்படி சொல்வதினால் பெண் பிள்ளைகளும் ஆடவரைப்போல் சுயநலத்தாலோ, வேறு எந்த காரணத்தினாலோ, அயோக்கியத்தனமாக நடந்துகொள்வதல்ல. ஆனால் பெண் மக்கள் ஊக்கத்துடன் உறுதியாக உழைப்பாரானால் கண்டிப்பாய் இவ் விஷயங்களில் சட்டத்தை சீர்படுத்துவதல்லாமல் நமது சகோதரர்களை அதிகச்சிரத்தில் சீர்திருத்தி நல்ல நிலைமைக்கு கொண்டுவரமுடியும் மேற்கூறிய காரணங்களே, விவாகரத்து சட்டம் ஏற்படுத்த தூண்டுகிறது. விவாகரத்து சட்டம் வந்தால், இந்து சமூகமே அழிந்துவிடுமென்று சிலர் கருதுகிறார்கள். தாம் ஒழுங்கீனமாக நடந்துகொள்ள முடியாதென்று கருதும் ஆண்பிள்ளைகள்தான் அப்படி கருதுவார்கள். பெண் ஒழுங்கு தவறிநடந்தால், தன்னிலைப்பதற்கு ஆண் மனுஷனுக்கு எப்படி சட்டம் இருக்கிறதோ, அதேமாதிரி ஒழுங்கில்லாத கணவனை தன்னிலைவக்கபெண்ணுக்கு சட்டம் வேண்டும் என்கிறேன். அதுவே பெண்களுக்கு தற்காப்பாக இருக்கும் ஆண்பிள்ளைகளை ஒழுங்குக்கும் கொண்டுவரும்.

[e] விதவைத்தன்மை. அன்பர்களே! இப்பேரை நினைக்கும்போதே என்உடல்நடுங்குகிறதுநாவரளுகிறது உலகில் எற்பட்டிருக்கும் எல்லா தண்டனைகளைவிட, இந்த விதவைத் தன்மை என்னும் தண்டனைதான் கொடியது! கொடியது!! மரணம் ஆண், பெண் இருபாலருக்கும் பொது; மனைவியிறந்தால் புருஷன் விதவனாகிறான்; புருஷன் இறந்தால் மனைவி விதவையாகிறாள்; ஆனால், மரணம் பொதுவாயிருப்பினும் சட்டதிட்டங்கள் வேறுவேறாக இருப்பதுதான் ஆச்சரியமாக விருக்கிறது. பெண் விதவையை நாம் பார்ப்பதுபோல், ஆண் விதவனைக்காண்பதில்லை. காரணம், ஆணுக்கு மறு மணமுண்டு; பெண்ணுக்கு மறு மணமில்லாததுதான். ஓர் பெண் தன் பதியை பரிகொடுத்து பரிதவித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் (புண்ணில் கோலிடுவதுபோல்)

"ஆபரணங்களை எல்லாம் கழற்ற வேண்டும், ஆடை மாற்றவேண்டும், ஆகாரங் குறைக்கவேண்டும், மொட்டையடித்து அழகைக் குறைக்கவேண்டும் [இது சில வகுப்பாரில்தான் உண்டு] அத்தினத்திலிருந்து அவள் மூதேவியாகிவிட்டாள், நல்லவருடன் கலக்கக்கூடாது. சுபகாரியங்களுக்கு முன்வரக்கூடாது, வீட்டிலோர் மூலையிலிருந்து வீட்டு வேலை எல்லாம் செய்யவேண்டும்" என்ற நிபந்தனைகள் ஏற்படுத்தி விடுகின்றனர். பெண் மணிகள் தன் உடலில் பாதியாகவும், தன் உயிரினும் அதிகமாக நேசித்து வந்த, புருஷன் பிரிவாற்றாமல் ஏற்படுத்தப்படுகிற துக்கந்தான் அதிகமாக இருக்கிறது. அந்தோ! பரிதாபம்!

ஆணுக்கு இம்மாதிரிய ஏ தண்டனை ஏதாவதுண்டோ வெனில் ஒன்றுங்காணேன். இதிலிருந்து என்ன தெரிகிறது. புராணங்கள், இதிகாசங்கள், சட்டங்களெல்லாம் ஒருவரையொருவர் அடக்கியாள மனிதரால் ஏற்படுத்தப் பட்டனவே தவிர வேறல்ல.

விதவைப் பெண்கள் வீடுகளில் படுத்தியரம் சொல்லவும் வேண்டுமா? உற்றார் உறவினர் வெறுக்கின்றார்கள். மற்றவர்கள் குறை கூறுகின்றார்கள். இதைக்கண்டு எத்தனை சகோதரிகள் தற்கொலை புரிந்துகொள்ளுகிறார்கள், எத்தனை சகோதரிகள் வீட்டைவிட்டு ஓடியலைகின்றார்கள், எத்தனை சகோதரிகள் அற்பவேலை செய்து பிழைக்கின்றார்கள் இன்னும் எத்தனைபேர் மானத்தை விற்றும் பிழைக்கும்படி நேருகின்றது. இதற்கு விதவைத் தன்மையுடன் சொத்துரிமையும் இல்லாததுதான் காரணம்.

[f] பாலியவிதவைகள். இதில் இன்னுமொரு அநியாயத்தைப்பாருங்கள்! ஏழு. எட்டு, வயதில் மணமாகி ஒன்பது, பத்து, வயதில் புருஷனிறந்தாலும் அந்தப்பால்மணம் மாறாத குழந்தை, மூதேவி, என்னும் விதவையாகிவிடுகிறாள். அவளுக்கு 14, 15, வயதாகி [அதாவது மடந்தை பருவம்] அறிவும், அழகும், உலக அனுபவமும், எற்பட்டு புருஷனுடன் கூடி இல்லறவாழ்க்கை நடத்தி, நல்ல மக்களை பெற்று ஆனந்திக்க வேண்டுமென்கிற எண்ணம் உண்டாகிறபோது விதவை என்னும் திரை மூன்னால் இருக்கிறது.

60-வயது சென்ற கிழவன் மனைவியிறந்தால் உடனே 15-வயதுள்ள அழகிய கன்னிகையை மணம்புரிந்து ஆனந்திப்பதும், அவர் பெண் 15 வயதில் விதவையாகி அடுக்களத்தில் துன்பத்தினால் வருந்துவதும் என்னே! கீழ்வரும் புள்ளி விவரத்தால் நமது தேசத்திலிருக்கும் கைம்பெண்களின் கணக்கை கவனியுங்கள்

1921-ஆம் இந்தியாவில் எல்லோரும் இந்துக்கள் மட்டும்.

ஜனத்தொகை.	பெண்மக்கள்.
318942480	154946926
216734586	105728124

கைம்பெண்.

26834838	20218780

கைம்பெண் 1-வயது முதல் 15 வயது வரை

396556	329076

சகோதரிகளே! இது விஷயத்தில் ஆடவரை நிந்திப்பதைவிடத்தாய்மார்களாகவும், சகோதரிகளாகவும், இருக்கும்பெண்களை தான் குறைகூற வேண்டும். நீங்கள் உறுதியாக உங்கள் பெண்களை கிழவருக்கோ, அல்லது மறுதாரமாகவோ, கொடுக்காத பக்ஷத்தில் ஆடவர்கள் எப்படி மணம் புரிய முடியும்? என் விண்ணப்பம் என்னவென்றால் புருஷனுடன்கூடி இன்பவாழ்க்கை அறியாத கன்னிப் பெண்கள் விதவையானால் அவர்களுக்கு மறுமணம் அவசியம். சிறிது நாளாவது புருஷனுடன் கூடியிருந்து விதவையானால் அவர்கள் எதாவது தொழில்செய்து சன்மார்க்கத்தில் காலத்தைப்போக்குவது நலம், அல்லது மணம்புரிய பிரியப்பட்டால் உடனே மணஞ்செய்வித்தல் அவசியம்.

இவ்வாறாக பெண்ணுரிமை பலவிதத்திலும் தாக்கப்பட்டு வந்திருப்பதை ஆணுலகம் இனியாவது அறியுமா? ஒருபாதியாயுள்ளபெண்களின் சிறுமை மற்றொருபாதியாயுள்ள ஆண்களையுந்தாக்கி, முடிவில் வாழ்வையும் நாட்டையுப், குலைக்குமென்பதை ஆணுலகம் அறிந்து நடப்பதாக.

சகோதரிகளே! உரிமை எல்லோர்க்கும் பொதுவானது. வானத்தில் மேகம் தவழ்வதுபோலவும், கடலில் அலையெழுவது போலவும், பறவை தனது அழகிய சிறகை வீசி பறத்தல் போலவும், பெண்ணுக்குத்தனது உள்ளத்திலெழும் விருப்பப்படி நடக்கும் உரிமை இருத்தல் வேண்டும்.

(G) தேவதாசி:-இவ்வழக்கம் ஆரம்பத்தில் இஷ்டப்பட்டவர்கள் தேவர்களுக்கு அடியாராகவிருந்து கடவுளுக்கு தொண்டு புரிவதாக எண்ணி நல்ல நிலைமையிலிருந்து காலத்தைக் கழித்துவந்தார்கள். ஆனால் அது நாளடைவில் தேவரடிமை யென்பது மறைந்து தேவடியாள் என்றும் தேவதாசிகள் என்றும், காரியடிகள் சொன்னதுபோல் தேவாலயத்தை விபசாரவிடுதியாகச் செய்ததல்லாமல், தேவதாசிகள் ஓர் ஜாதியாயினரென்று சில பெண்மணிகளை ஒதுக்கி வைத்து, கோவிலில் பொட்டுக்கட்டிக் கொண்டு, ஆடவருடைய இச்சையைப்பூர்த்தி செய்வதற்காகவே பிறந்ததாகச் செய்து, பலரால் பரிகசிக்கும் படியான நிலைமையில் பெண்களை கொண்டுவந்து விட்டார்கள்.

சகோதரிகளே! ஓர் பெண்ணுக்கு நேர்ந்த அவமரியாதை பெண்ணினத்தையே சேருமென்பதை நினைவில் வைத்து அப்பெண்களை சீர் படுத்துவது உங்கள் கடமை. தேவதாசிப் பெண்களின் நிலைமையை சீர்திருத்தும்பொருட்டு, சீர்திருத்ததிலும், சமூகத்திலேறியும். பெண்மணிகளுக்காக இரவும் பகலும் அரும் பெரும் வேலை செய்துவரும் ஸ்ரீமதி டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாள் அவர்கள் சென்னை சட்டசபையில் உபத்தலைவராகவிருந்த காலத்தில் தேவதாசி மசோதா கொண்டுவந்தார்கள். அந்தசமயத்தில் உயர்ந்த ஜாதியாரென்று சொல்லிக்கொள்ளுபவரில் படித்த மேதாவிகளால் மசோதா தாக்கப்பட்டது. சிலர் தேவதாசித்தொழில் நிறைமேலான தொழிலென்றும் கோவில்களிலிருந்து தேவதாசிகளை எடுக்கக்கூடாதென்றும் சொன்னார்கள். இப்படிக்கு தக்க புத்தியுள்ளவர்கள் சிலரே. சமூகசீர்திருத்தத்தில் கருத்துடையவர்கள் அதிகமிருந்தபடியால் மசோதா நிறைவேறிவிட்டது. நிறைவேறியும் சரியான அமுலுக்கு வராதது வருந்தத்தக்கது.

திருவனந்தபுரத்தில் எல்லாகோவில்களிலும் பொட்டுக்கட்டுந்தொழிலை மகாராணியவர்கள்நிறுத்திவிட்டனர். திருவனந்தபுரம் பெண்ணரசியால் ஆளப்படுவதினால், தேவதாசி மசோதா அமுலுக்கு வந்து கோவில்களில் தேவதாசி பெண்களில்லாமலிருக்கின்றன. மகாராணி ரீஜெண்ட் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியறிதலான வணக்கத்தை இம் மகாநாட்டின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் பரோடா, மைசூர் கவாமென்னாடாரும் மசோதாவைச்சிக்கிரத்தில் அமுலுக்குக்கொண்டுவரப்போவதைகேட்டு சந்தோஷிக்கின்றோம். சுயமரியாதை வீரரும், டெல்லி சட்டசபையின் உபதலைவருமாகிய ஆர். கே. சண்முகம் அவர்கள், இந்து கோவில்களில பெண்கள் பொட்டுகட்டி அனுசரிக்கும் தேவதாசி முறையை எடுத்துவிட வேண்டுமென்று டெல்லி சட்டசபை

யில் மசோதா கொண்டுவந்திருப்ப தாக கேள்வி படுகின்றோம். அவரு டைய முயற்சியை பலப்படுத்தி அம் மசோதா நிறைவேறுவதற்கு நீங்கள் கவலை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்பெரியாருக்கு எங்களுடைய நன்றியறிதலை தெரிவிக்கிறோம்.

(H) சொத்துரிமை:-இந்துமத சட்டத்தை எழுதினவர்கள் சொத்துரிமை விஷயத்தில் பெண்கள் தலையில் கையைவைக்காமல் இல்லை. பெண்களுக்கு தகப்பன் சொத்தில் பங்கில்லையாம் இது என்ன நியாயம் என்று கேட்டால் பெண்ணை ஒரு சொத்தாக நினைத்திருக்கிறோம், அவர்களுக்கு பிரத்தியேகமாக தகப்பன் சொத்தில் பங்கு என்னத்திற்கு என்று சொல்லுகிறார்கள் அதாவது. தகப்பனுக்கு ஒரு ஆண்பிள்ளையும், பெண்பிள்ளையும் இருந்தால், அவன் இறந்த பிறகு எல்லாச் சொத்தும் மகனுக்குத்தான் சேருமாம். மகளுக்கு தபீபிமகடை கிடையாது. ஒரே வயிறதில் பிறந்த ஆண் மகனுக்கும், பெண் மகளுக்கும் வித்தியாசத்தைப் பாருங்கள். இந்த கர்பித்த வித்தியாசம் இருக்கும் வரையில் இந்துமதம், 'பெண்களை அடிமைக்கொண்ட' மதம் என்று சொல்லுவேன். சட்டத்தை சொரத்தில் இருததி நியாயமுறைப்படி பெண்களுக்கும் தகப்பன் சொத்தில் பங்கு உண்டு என்று சொல்லாவிட்டால், பெண்களை அடிமைகொண்ட பாழான இந்துமதம் அழிவதே மேல் மகம்மதியர்களோப் பார்த்தாவது இந்து சகோதரர்களுக்குப் புத்தி வராதா? மகம்மதிய சகோதரிகளுக்கு தகப்பன் சொத்தில் பங்கு உண்டு இந்த பெண்களை விட மகம்மதிய பெண்கள், சொத்துரிமை விஷயத்தில், மிகவும் மேலானவர்களாகவே இருக்கின்றனர். திருவிடையத்தில், டாக்டர் ஹரிஸிங் கவர், ஜெயக்கர் முதலானோர், டெல்லிசட்ட சபையில், பெண்களுக்கு சொத்துரிமை இருக்கவேண்டுமென்று முனைக்கும் பிரயாசை போற்றத்தக்கது.

(தொடரும்)

அறிவிப்பு.

விருதுநகர் சுயமரியாதை, மகாநாட்டு நிகழ்ச்சிகள் யாவும் அடுத்த வாரம் வெளிவரும்

ப—ர்

அறிக்கை.

9-8-31 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, மேலப்பாளையம் கனேஷபுரம் ஆதிதிராவிட எலிமெண்டரி பாடசாலையில் திரு. மர். பெ. கசங்காத்தார் (முனிசிபல் கவுன்சிலர்) அவர்களின் தலைமையின் கீழ் பாளையங்கோட்டை முனிசிபல்எல்லைக்குள் பட்ட தாழ்த்தப்பட்டவர்களின் பொதுகூட்ட மென்று கடை பெறும் என ஒரு நிருபர் எழுதுகிறார்.



சுதேசியமே சுயராச்சியம்.

வெளிநாட்டுச்சாமான்களில் வீணாதீர்கள்.

'நேரு' பற்பசையை உபயோகியுங்கள்.

(UseNehruTooth Paste)

பல் நோய்களை பறக்க அடிக்கும்.

மகிழ்ச்சிக்குரிய மணத்தைக்கொடுக்கும்

டஜன் டியூப் 4—8—0.

ஏஜெண்டுகள் தேவை

டாக்டர். S தருமாம்பாள்

சித்தானந்த டிஸ்பென்சரி ஹால், 35, அண்ணாபிள்ளைத்தெரு, சென்னை.

நாம் இன்சூரென்சு செய்யவேண்டுமா?

(T. D. கோபால்)

உலகத்தில் நாகரீகம் நாள் தோறும் பெருகிக்கொண்டே வருகின்றது. இதற்கேற்ப மனிதர்களின் வாழ்க்கையிலும் மாறுபாடுகள் அடிக்கடி தோன்றி, நாகரீக முன்னேற்றத்திற்கேற்ற வாறு மக்களும் தங்களுடைய வாழ்க்கையை சீர்படுத்திக்கொள்ளவேண்டியிருக்கின்றது. நாட்டினில் எல்லாடாகங்களிலும் பணக்கஷ்டமேற்பட்டிருக்கின்றதை மக்கள் உணர்ந்து கொள்ளாமல் வீண் செலவு செய்து கொண்டு வருவதால் தங்களுடைய கடமை இன்னதென உணர்ந்து கொள்ளாமல் கடைசி காலத்தில் தாங்கள் பலவித கஷ்டங்களுக்குபாளாவதுடனின்றி, தங்களை நம்பிக் கொண்டிருப்பவர்களையும் தங்களுக்கு பிறகு பலவித தன்பங்களையனுபவிக்கும்படி செய்து கொண்டு வருகின்றார்களென்பதை நாம் தினந்தோறும் பார்த்துக்கொண்டேதான் வருகின்றோம். தன்னைச்சார்ந்தவர்களுக்குப, தனது மனைவிக்கும், குழந்தைகளுக்கும் விருத்தாப்பிய திசையில் தனக்கும் உபயோகப்படுமாறு பொருள் சேர்த்து வைக்கவேண்டுமெனவும், அதுமிக்க அவசியந்தானெனவும் ஒவ்வொருவரும் யெண்ணிக்கொண்டுவந்த போதிலும்கூட, அவ்வாறு மீதி செய்து நிதி சேர்ப்பதற்கு' சுடர் விளக்காயினும் தூண்டுகோலொன்று வேண்டும்' என்னும் பழமொழி போல், பிறருடைய தூண்டுதலும், வற்புறுத்தலும் மிக இன்றியமையாத தாயிருக்கின்றதென்பது சகஜமேயாகும்.

ஆகையால் ஒவ்வொருவரும் பொருள் சேர்க்க வேண்டியது மிக அவசியந்தானெனவும் அவ்வாறுதான், தான் சம்பாதிக்கும் பொருளையும் மீதிசெய்து தானும் தனது மனைவியும், குழந்தைகளும் இன்னும் தன்னைச்சார்ந்தவர்களும், சுகப்படவேண்டுவது அதனினும் மிக்க அவசியந்தானெனவும்மேற்படுகின்றது. இவ்விதசெய்கைகளுக்கு ஓர் தூண்டுகோலாயிருப்பதும் ஜனசமூகத்திற்கே பேருதவியையளித்துக் கொண்டு வருவதுமாயிருப்பதும் இன்சூரன்ஸ் திட்டமேயாகும்.

பிறருடைய தூண்டுதலின்றி தங்களுடைய வருவாயிலிருந்து தாங்களே மீதி செய்யக்கூடியவர்களுமிருக்கின்றார்கள். ஆனால் அத்தகையோர்களின் எண்ணிக்கையோமிக மிக சொற்பமேயாகும். பொதுவாக மக்களுக்கு 'அவசியமாகொடுத்துத்தான் தீரவேண்டு' மென்கின்ற நிர்ப்பந்த மேற்பட்டாலொழிய, அவர்களுக்குக் கொடுக்கக்கூடாத நிலைமை ஏற்பட்டு விடுகின்றது இத்தகையோர்களுக்கு இம்மாதிரியான ஓர் நிர்ப்பந்தத்தையேற்படுத்தினால், அவர்கள் அவர்களுடையவருவாயிலிருந்து சிறிதாவது மீதிசெய்வதற்கான ஓர்சந்தர்ப்பத்தையளித்தவராவோம். முதலிலநிர்பந்தமெனமக்களுடையமனதில் தோன்றிய மாத்திரமும் கூட அவ்விதநிர்பந்தத்தால் பின்னிட்டேற்படக்கூடிய பாலபலன்களை ஒவ்வொருவரும் சுலபமாகவே அறிந்து கொள்ள முடியுமென்பதில் சந்தேகமேயில்லை. இவ்விதநிர்பந்தத்தை சுலுவாக்கவும் அந்நிர்பந்தத்தால் மக்கள் மீதி செய்து சுகப்படுவதற்கு மேற்பட்ட திட்டமே இன்சூரென்சு திட்டமாகும்.

நாட்டிலுள்ள இன்சூரென்சு கம்பெனிகள் மக்களுக்கு நன்மையையளித்துக் கொண்டுதான் வருகின்றதென்பதை மக்கள் உண்மையாகவே அறிவார்களானால், அப்பொழுது சற்காலமிருந்தவரும கம்பெனிகளைவிட இன்னும் பதின்மடங்குதிகமான ஸ்தாபனங்களேற்பட வேண்டுமென்பது மிக்க இன்றியமையாததென்பார்களுக்கும் புலப்படும். ஆனால் இவ்விதஇன்சூரன்சு திட்டமானது வடடிக்குப்போடுவதைப்போல் அவ்வளவு லாபகரமானதல்லவென்றும் நாம் இன்சூர் செய்யும் தொகைக்கு அதிகமாகவே நம்மிடமிருந்து பெற்றுக்கொண்டுதான், குறித்த ஓர் தவணையை நமக்குத்திரும்பவும் கொடுக்கின்றார்களெனவும், ஆகையினால் அதில் யாதொருவித லாபமோ, அல்லது நன்மையோ இடையாதெனவும் நாம் கருதிக்கொண்டி

ருப்பது நமது அறியாமையே யாகும்

எதிர்கால வாழ்க்கையை நாம் சிறிதும் உணர்ந்து கொள்ளாதிருப்பதினால்தான், நாம் முறைமைப்படி செய்ய வேண்டிய நமது கடமையை சிறிதும் சிந்தியாமல் திடகாத்திரர்களாயிருந்த செல்வ மீட்டுங்காலத்து, சிறிதும் சிக்கனமின்றி, நமது வருவாயை செலவு செய்துவிட்டு நமது விருத்தாப்பிராத்தில் பலவிததுன்பங்களை அனுபவித்துக்கொண்டு வருகின்றோமென்பது நாம்உரையாமலே யாவருக்கும் விளங்குமென கருதுகின்றோம். ஆகையால் நமது செல்வ நிலைமையையுத்தேசித்து இக்கொடியவழக்கமாகிய 'சிக்கனமின்மை' என்னும் வழக்கத்தில் அகப்படாது பாதுகாத்துக் கொள்ள வேண்டியது மக்களாய்ப்பிறந்த நம் ஒவ்வொருவர்களின் கடமையன்றோ? அம்மாதிரியாகவே ஜனசமூகமானது சிக்கனமுறையைக் கைபிடித்து தங்களுடைய வருவாயை மீதிபடுத்தி, அதை காளா வட்டத்தில் பெருக்கிக்கொளுவதுமவையமன்றோ? அவ்விதம் செய்ய வேண்டுமாலால், இன்றே இப்பொழுதே இன்சூரன்சு கம்பெனிகளில் சேர்ந்து கொள்ளுவதே சிறந்த மார்க்கமாகுமே?

இன்சூரன்சு கம்பெனிகள் ஏற்படுத்தபபட்டிருக்கும் நிபந்தனைகளை நாம் ஊன்றி கவனித்தோமானால், அப்பொழுது நாம் செலுத்தும் பணத்திற்கதிகமாக வேகடியாக நாமடைய பலவழிகளிருப்பதை சுலபமாகவே உணர்ந்து கொள்ளலாம். இன்சூரன்சுசெய்து கொண்டவர்கள் சிறிது காலத்திற்குள் திடீரென மரணமடைந்தால் அவர்களுடைய மனைவிமார்களும் குழந்தைகளும் இன்சூர் செய்யப்பட்டிருந்தபெருத்தகைகளை பெற்று எத்தகைய நன்மைகளையடைந்து கொண்டு வருகின்றார்களென்பதை சிறிது கவனித்தாலும் அல்லது ஒரு குறித்த வருஷங்களுக்கு மட்டும் சந்தாதுகையை செலுத்தி சம்பாத்யம் நின்றுபோன காலத்தில் அக்குறித்த தொகையை கிடைக்கப்பெற்று எத்தகைய இன்பமடைந்து கொண்டு வருகின்றார்களென்பதை நாம் சிறிது கவனித்தாலும் 'இன்சூர் செய்வதில்லாபமும், நன்மையுமில்லை' யெனக்கூறுபவர்களின் மொழி எவ்வளவு தூரம் உண்மையென்பது சிறிதாவது புலப்படாதிராது. ஆகையால் மக்களாய்ப்பிறந்த ஒவ்வொருவரும் தற்கால நாகரீகத்திலீடுபட்ட ஒவ்வொருவரும் எல்லாவித காரணங்களாலும் ஒவ்வோருவரும் உடனே இன்சூர்செய்து கொள்ள வேண்டியது மிக்க அவசியமெனவும் இன்றியமையாததெனவும் அது அவர்களுடைய கடமையெனவும் புலப்பட்டேதீரும்.

இன்சூர் செய்வதினவசியத்தை யுணர்ந்து கொண்டபிறகு, நாம் நமது தேசத்தில் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய ஸ்தாபனங்களையே ஆகரித்து அவற்றின் மூலம் நமது நாட்டில் பொருளாதாரத்துறையை முன்னேற்றமடையும்படியாகவும் செய்யவேண்டும். எந்த இன்சூரன்சு கம்பெனிகளில் இன்சூர் செய்துகொள்ளவேண்டுமென்பதை அறியவிரும்புகின்றவர்கள், எந்தக்கம்பெனியில் குறைந்த சந்தா கேகப்பட்டு, அதிகலாபம் கொடுக்கப்படுகின்றதென்பதை அறிந்து கொள்ள விரும்புவது சகஜமேயாகும். ஆனால் குறைந்த சந்தாவை மட்டுமே கவனிப்பதானது எப்பொழுதும் அதிகலாபம், அதிக நஷ்டம் என்னும் பழமொழியைப்போல், எபபோதும் ஆபத்தையே விளைவிக்கும். ஆகையால் நாம் குறைந்த சந்தாவை கவனிப்பதுடன் அக்கம்பெனியிலுள்ளவர்கள் பொறுப்புவாய்ந்தவர்களா வென்பதையும், கம்பெனியானது சிக்கன முறையில் செவ்வனே நடைபெற்றுவருகின்றதா வென்பதையும, அழிவின்றி, நீடித்து நிலைக்கக்கூடியதா வென்பதையும்நாமாராய்ந்து பார்த்து அவ்வித இன்சூரன்சு கம்பெனிகளில் இன்சூர் செய்துகொள்ளுவதே சாலவும் சிறந்த முறையாகும்.

'விதவைகளனுபவிக்கும் துன்பங்களையும், கஷ்டங்களையும் அறிவுள்ள மனைவிமார்கள் அறிவார்களேயாலால் உடனே தங்களுடைய கணவன்மார்களை இன்சூர்செய்து கொள்ளும்படியாக வற்புறுத்துவார்களன்றே!'

சுயமரியாதை இறுதிச்சடங்கு.

திருவிசனல்லூர் பிரபல தேங்காய் வியாபாரியும், சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்ட திரு. தி. பி. நாராயணசாமி அவர்கள் தகப்பனருமான காலஞ்சென்ற திரு. ஆர். பிசைக் கோனார் 7-6-31ந்தேதி காலை மரணமானார் அவர் இறுதிச் சடங்குகள் யாவும், பார்ப்பனப் புரோகிதத்தை ஒழித்து சுயமரியாதை முறையில் நடத்தப்பட்டதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஈஸ்ட் & வெஸ்ட் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

தலைமை ஆபீஸ் பம்பாய்.

1913-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

குறைந்த பிரீமியங்கள்! தாராளவிதிகள்!! உயர்ந்தலாபங்கள்!!! பிரிமியம் கட்டத்தவறினால் பாலிசிகள் பரிமுதல்செய்யப்படுவதில்லை. சாசுவதமாய் நோய்வாய் படுவோருக்கு பிரத்தியேக பிரீமியமில்லை.

உத்திரவாதமுள்ள போனசுடன் கூடியது.

சென்ற வருடத்திய ஆச்சரியமான முற்போக்கே பொதுஜனங்களின் நம்பிக்கைக்கு ஏதுவாகும்.

பாலியத்தில் சிரமப்பட்டு சம்பாதிக்கும் உங்கள் பணத்தை வீணாக்காது, இன்சூர் செய்து, உங்களுடைய தள்ளாத காலத்தில் உங்களுக்கும், உங்கள் குடும்பத்தாருக்கும் உபயோகப்படும்படி செய்வது உங்களுடைய கடமையல்லவா? தாமதியாது எங்களுடைய கம்பெனியில் இன்சூர் செய்து, அதிக லாபம் அடையுங்கள்.

சேலம், கோயமுத்தூர், திருச்சி, புதுக்கோட்டை முதலிய விடங்களுக்கு ஏஜன்சி வேண்டுவோர் விண்ணப்பித்துக்கொள்ளவும்.

என். எஸ். ராமன்,
சீப் ஏஜண்டு, ஈரோடு.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

மக்களுக்கு நேரக்கூடிய நோய்கள் பலவற்றிற்குக் காரணம், ஜீரணக்குறைவும், மலச்சிக்கலுமேயாகும். உணவு நன்றாக ஜீரணமாகி மலம் தினம் தாராளமாய் கழிந்தால் நோயற்ற வாழ்வும், நீடித்த ஆயுளும் பெற்று வாழலாம்.

ஜீரணி லேகியம்

உண்ட உணவை நன்றாக ஜீரணிக்கச்செய்து நாள்தோறும் மலத்தைக் கழித்து, பசியின்மை, பித்தவாயு, புளிஏப்பம், சூலை எரிச்சல், வயிற்று நோய், குன்மம், மார்புநோய், இடுப்புநோய், இருமல், மயக்கம், வாந்தி, நாவிற் சுவையின்மை முதலிய நோய்களை நீக்கும். அருந்தும்முறை கேட்டல்லாக்கில் காண்க.

விலை பெரியபாட்டில் ரூ. 2-0-0 சிறியபாட்டில் ரூ. 1-2-0

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தரின்
தமிழ் வைத்தியசாலை
221. தங்கசாலை வீதி, சென்னை.

தந்திவிலாசம்:—
"மருத்துவன்"
சென்னை.

டெலிபோன்
நெ. 2584

இலவம் கேட்டவர்களுக்கும், சுகவழி என்ன புத்தகமும் இலவம்.

பார்ப்பானும், படித்தவனும், பணக்காரனும்
பாமரமக்களின் பரம விரோதிகளேயாவார்கள்.
(ரஷிய ஞானி—லெனின்)

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், மாற்றுக்கட்டளை

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் சொல்லாம போது மற்றவர்கள் யாராவது அது போல் செய்தாலும், அந்தந்த தலைப்பின்கீழ்கான் வருமல்லவா? என்பதை யோசித்து நடக்கவேண்டியது மக்கள் கடமையாகும் என்று ஒவ்வொருவரும் நினைக்க வேண்டும்.

இப்படிப்பட்ட நாள்.

ஆகவே இப்படிப்பட்ட அருமையான காட்சியே மனிதன் மேன்மைக்கும் முற்போக்கிற்கும் ஒற்றுமைக்கும் அறிவுவிளக்கத்திற்கும் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்கின்ற எண்ணத்தின் மீதே-இங்குள்ள இந்து முஸ்லீம்களை சகோதரர்களாகக்கருதியே என் மனதில் பட்டதைச்சொன்னேன். மௌல்வி சாயபு அவர்கள் இருவரும் சொன்ன விஷயங்களிலும் பெரிதும் அறிவுக்கு விரோதமானதோ கேள்விக்கு இடமானதோ இல்லை என்பதை முக்கியமாய் முஸ்லீம்களும்மற்ற இந்துக்களும் கவனித்து ப்பார்த்து இது போலவே எல்லாக் கொள்கைகள் விஷயங்களிலும்பகுத்தறிவுடனிருக்க வேண்டுமென்றேகேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றுமான் சொன்ன விஷயங்களில் உங்கள் பகுத்தறிவுக்கும் ஆராயச்சிக்கும் ஒப்புக்கொள்ளாததைத் தள்ளி விடுங்கள். மற்றும் இம்மாதிரி நாட்களை வெறும் விருந்துக்கு உபயோகித்துக்கொள்ளாதீர்கள். இன்று சுமார் 500 ரூ. வசூல் செய்து பெரிய விருந்து சாப்பாடு செய்து சாப்பிட்டதாகத் தெரிகின்றது. இது பிரயோஜனமில்லை. பணங்கள் வசூல் செய்து பகுத்தறிவு பிரசாரம் செய்யவும் ஏழை மக்களுக்கு கல்விக்கும் கொள்கைகளின் உண்மை தத்துவத்தை பகுத்தறிவுக்குப் பொருத்திப் பார்த்து பயன் படுத்தும் தத்துவத்திற்கும் உபயோகிக்கச் செய்யவும் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன் என்று பேசினார்.

வந்தனோபசாரம்.

பிறகு வேலூர் மௌல்வி ஷர்புதீன் சாயபு அவர்கள் தலைவருக்கு நன்றி கூறுகையில் திரு. இராமசாமி சொன்னது முழுவதும் மிகவும் சரியானதென்றும இதைக்கேட்டு முஸ்லீம்கள் தங்கள் கொள்கைகளின் உண்மையை அறியவேண்டுமென்றும் மூடப்பழக்க வழக்கங்களை கையாளக் கூடாதென்றும், மக்கா யாத்திரையின் விஷயம் அவர்கள் சொன்னதற்கு மாத்திரம் ஒரு சமாதானம் சொல்லுவதாகவும், அதாவது மக்கா கையாத்திரை மனிதன் அறிவு வளர்ச்சியும் உலக முஸ்லீம்கள் தரிசனமும் கிடைக்கக்கூடிய தென்றும் தனது கெட்ட எண்ணங்களை நிவர்த்தித்துக் கொள்ள அந்த யாத்திரை பயன் படலாமே யொழிய அக்கிரமமான கொடுமையான பாப காரியங்களைப்பற்றிய மன்னிப்பு பெறல மென்பது அறிவீனமென்றும், ஒரு முஸ்லீம் ஒருவ ராமக்காவுக்குப் போக ஆசைப்பட்டு கொஞ்சம் பணம் சேர்த்து வைத்திருந்தாரென்றும் ஒரு நாள் அந்த முஸ்லீம் சாப்பாட்டிற்கு வகை இல்லாமல் கஷ்டப்பட்டும் அந்தப்பணத்தில் எடுக்கக்கூடாது என்று கருதி பக்கத்து வீட்டிற்குச் சோறு கேட்கப் போய் அங்கு ஒரு பெரியபானை அடுப்பில் ஏற்றி வேக வைத்திருப்பதைப் பார்த்து சந்தோஷப்பட்டு தன் பட்டினியைச்சொல்லி சோறு கேட்டதாகவும் அதற்கு அந்தப் பெரிய அம்மாள் தங்கள் வீட்டில் 10.20 உறப்படிகள் இரண்டு நாளாய் பட்டினி என்றும் குழந்தைகளின் இரை பொறுக்க மாட்டாமல் "சோறுவேகின்றது, சோறுவேகின்றது" என்று சொல்லி அழவைகளை ஏமாற்றிக் கொண்டிருக்கவே இப்படிச்செய்து கொண்டிருப்பதாகவும் சொல்லி அடுப்பின் மீதிருக்கும் 'வெரும்பானையை'க்காட்டினாள் என்றும் இதைப்பார்த்த அந்த முஸ்லீம் மகாயாத்திரையை அலக்ஷியமாய்க்கருதி தான் சேர்த்து வைத்திருந்த பணத்தை இந்த ஏழைக்குடும்பத்திற்கு கொடுத்து ஏதாவது ஒரு தொழில் செய்து பிழைக்கும்படி சொன்னதென்றும் ஒரு கதையைச்சொன்னதுடன் ஒரு "கழுதை மக்காவுக்குப்போனால் குதிரை ஆகிவிடாது" என்று ஒரு வாக்கியம் தங்கள் ஆகாரத்திலேயே இருக்கின்றது என்றும், ஆகையால் இதையும் இந்தச்சமயம் விளக்கினது முஸ்லீம்களுக்கு அனுகூலமென்றும், மற்றும் திரு. இராமசாமியவர்கள் முஸ்லீம்கள் விஷயத்திலும் தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயத்திலும் தனது காலத்தை செலவழிப்பது போற்றக்கூடியதென்றும், சொல்லி வந்தனோபசாரம் சொல்லிய பின்பு இரவு 10-30 மணிக்கு கூட்டம் முடிவு பெற்றது.

——

சிலகெங்கை எஸ்டேட் கலக்டரவர்களுக்கு ஓர் வேண்டு கோள்.

இவ்வூர் பெருமாள் கோவிலுக்கு (25-7-31) இரவு சுமார் 8 மணிக்கு அடியில்கண்ட நாங்கள் போயிருந்தோம். ஷேகோவிலில் தீபாராதனை முடிந்ததும் தீர்த்தம் முதலியன கொடுத்த பின் உணவுப்பொருள்கள் வாங்கும் சமயம் பார்ப்பனர்கள் என்பவர்கள்மண்டபத்தில்உட்கார்ந்தனர். அடியில் கையெழுத்திட்டுள்ள நாங்களும் சமமாக உட்கார்ந்தோம். அச்சமயம் அப்பார்ப்பனர்கள் தங்களுக்குச்சமமாக உட்காரக்கூடாதென்று மறுத்தனர். நமது வீட்டில் பல வேலைகளையும் பார்த்து சமபளம் வாங்கும் இப்பார்ப்பனர், நம வீட்டில்நம்மிடம் கைகட்டிக்கொண்டு நின்றுவேலை பார்க்கும் இப்பார்ப்பனருடன் கோவிலில் ஏனைய சகோதர சகோதரிகட்கு உள்ள உரிமையிலும் பார்ப்பனருக்கு என்ன அதிகமான உரிமை உண்டு?

மாமிச உணவைப்பற்றிய சில குறிப்புகள் என்பதற்கு மறுப்பு.

(எ. சுப்பையா)

21-6-31 ல் வெளியான "குடி அரசில்" திரு. மயிலேசினி. வெங்கிடசாமி என்பவர் மாமிச உணவைப்பற்றி சிலாகித்தும் புகழ்ந்தும் எழுதியிருப்பதை உண்மை வைத்தியஆராய்ச்சிநிபுணர்களும், ஜீவஹிம்சை செய்யக்கூடாது என்ற அன்புமதஸ்தர்களும், பல கண்டங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஜீவதயாசங்க சேயர்களும், ஆடு மாடுகளைக்காப்பாற்றி வேளாண்மை விவசாயத்தினால் மக்களை முன்னேற்றத்திற்கு கொண்டு வரவேண்டுமென்ற உண்மையானவர்களும இன்னும் பல அஹிம்சா சேயர்களும் திரு மயிலை. சீனி. வெங்கிடசாமி என்பவரின் வியாசத்தைக்கண்டு வெறுக்காமலிரார்கள்.

மற்றும் 'இந்துக்களுக்கு வீரமற்றுப்போனதும் ரோஷமற்றுப்போனதும் அன்னிய அரசாங்கத்திற்கு அடிமைப்பட்டு கிடப்பதும் மாக்கறி உணவினால் ஏற்பட்ட சாந்த குணத்தின் பயனாகும். பௌத்தம் ஜயினம் இந்த மதம் ஆகிய இம்மூன்று சமயங்களும் சேர்ந்து இந்தியா மாக்கறியுணவு சாப்பிடச்செய்ததின பயனாக இந்தியரை மீளா அடிமைக் குழியில் அமிழ்த்தி விட்டது' என்று எழுதியிருக்கிறார்.

நம் பூர்வீகக்குடிகளாகிய குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் முதலிய நில மக்கள் மாம்சவுணவு உபயோகித்து வந்ததாகத்தெரியவில்லை. அவர்கள் யாதொரு ஆதிக்கத்திற்கும் அஸாங்கத்திற்கும் அடிமைப்பட்டு கிடந்ததாகவுமில்லை வீரமற்ற ரோஷமற்று இருந்ததாகவுமில்லை. மத்திய ஆசியாவிலிருந்து வந்த மிலேச்சர்களாகிய ஆரியர்கள் அவர்களின் மத மாமிச உணவின் பழக்க வழக்கங்களை கம்மக் கண்டையே பரப்பிவிட்டு அவர்கள் அஹிம்சையைக் கொண்டார்கள். அதில் தங்களை (ஆரியர்) பிராமணர்களென்றும் மாமிசம் உபயோகித்துக் கொண்டாலும் அன்னியர்கள் வந்து தங்களை (ஆரியர்களை) இம்சை செய்து கஷ்டப்படுத்தாமல் காப்பாற்றியவர்களை க்ஷத்திரியரென்றும் ஆரியர்களின்சௌகரியத்திற்காக வியாபாரம்செய்தவர்களை வைசியரென்றும் மற்ற சில அடிமைத் தொழில் புரிந்தவர்களை சூத்திரர்களென்றும் சாதிகளைப்பிரித்தார்கள். ஒற்றுமையாய்இருந்த மக்களை பலசாதிகளாய்ப் பிரித்து வேற்றுமை செய்ததின் பயனும் இந்தியாவும் இந்தியா மக்களும் அன்னியருக்கு அடிமைப்பட்டிருக்கிறது என்பது மயிலை சீனி. வெங்கிடசாமி அவர்களுக்கு த்தெரியாதிருப்பது அவரின் ஆராச்சியின்பயனே போலும்! ஆரியர்கள் இன்னும் தங்கள் பூர்வபிறப்பின் வாசனைவிடாமல்சாதாரணமாகவும் யாகத்தின்போதும்மதமாமிசம் உண்டு வருகிறார்களென்பதை யாவரும்உணர்வார்கள்.

'சில டாக்டர்கள் ஆராய்ச்சி செய்த உண்மைகளை இங்கு எழுதுகிறேன்' என்று சொல்லி மக்களை மாமிச வெறி பிடித்து அலையும்படியான சமாச்சாரங்களை எழுதியிருக்கின்றார். என்னவெனில் 'வெண்ணெய், நெய், மீன் எண்ணெய் மாமிசங்களிலிருக்கும் கொழுப்பு ஆடு மாடு பறவை முதலிய எல்லப்பிராணிகளின் ஈரல், மூளை, மாமிசம் சாப்பிடுவதலால் இரும்புசத்தும், தாம்பிரசத்தும் ஜதஜிராகசத்தும் ஓர்வகை உப்பு சத்தும் தேகத்தில் சார்ந்து வீரமும் தைரியமும் கொடுக்கின்ற'தாம்.

என்று இவ்விதமெல்லாம் எழுதி பத்திரிகையில் பிரசரம் செய்வதானது தற்போது சாதாரணமா

கனம்பொருந்திய கலக்டரவர்கள் கவனித்து எஸ்டேட் கோவிலில் யாரும் சமமாயிருக்க வேண்டுமாய்ப்பணிவுடன் வேண்டுகிறோம்.

இங்கனம்
தங்கள் நம்பிக்கை உள்ள,
நாட்டரசன் கோட்டை
ஆ. சுப. சு. கரு. ஆவுடையப்பன்.
கண. சோமனாதன்.
கண. சுப்பிரமணியன்.
சிவ. லெட்சுமணன்.
ஞா. சோமனாதன்.
கண. ரெங்கனாதன்.

யும் கடவுள்களின் பேராலும் செய்துவரும் ஆடுகள், கோழிகளின் கொலைகளைக்காட்டிலும் இன்னும் அதிகப்படுத்தி மக்களை மாமிச வெறியர்களாய் செய்வது மன்றி மனிதர்களைக்கொன்று அவர்களின் மாமிசத்தைப்புசிப்பதால்தேகத்திற்கு இன்னும் அநேக நன்மைகள்ஏற்படும் என்று பிரசாரம் செய்து பத்திரிகைகளில் விளம்பரம் செய்வதாயிருந்தால் மாமிச வெறிபிடித்த வலியார்கள் எளியார்களை வாட்டி வதைத்து தின்று கூடிய சீக்கிரத்தில் இந்தியாவை முன்னேற்றத்திற்கு க்கொண்டு வந்து பழுக்கவைத்து விடுவார்கள். இதை திரு. சீனி வெங்கிடசாமி அவர்கள் எழுதாதுவிடுத்தது உயிர்களின் மேலுள்ள அன்பும் மக்களின் நன்மைக்கும் என்றே கருதவேண்டும்.

வாசகர்களே! மயிலைசீனி வெங்கிடசாமி அவர்களின் மாமிசவெறிபிடித்த வியாசத்தின் தன்மையையும் அடியில் வரும் அதிமேதாவிகளான வைத்திய ஆராய்ச்சி நிபுணர்களின் மேன்மையான உரைகளையும் நீங்களே ஆராய்ந்து பார்த்து உண்மையைக் கடைபிடிப்பீர்களென்று நம்புகிறேன்.

டாக்டர் யூடென் செய்ன் என்பவர் 'பருப்புத் தினுசுகளைக்கலந்த ஆகாரங்களையும் புதிதான பழுத்த பழ தினுசுகளையும் கீரை தினுசுகளையும் பால் முதலியவைகளையும்விசேஷமாய் உட்கொள்வோர்கள் அதிக பலசாலிகளாய் இருப்பார்கள்' என்று தெரிவிக்கிறார்.

டாக்டர் உப்டன் இங்கிலேயரும், டாக்டர் மைகேல் வில்லியம்ஸ் என்ற இரண்டு ஆங்கிலேய வைத்திய ஆராய்ச்சி நிபுணர்கள் 'The Art ofHealth' என்னும் புஸ்தகத்தில் எழுதியிருப்பதாவது 'மாமிசத்தைப் புசிப்பதனால் குணப் படுத்த முடியாத டிரிச்சினோஸிஸ் (Trichnisis) என்ற கொடிய வியாதி சம்பவிக்கிறது' என்றும 'அவைகள் கொல்லப்பட்ட ஒன்று அல்லது இரண்டும ணிநேரத்தில் கெட ஆரம்பிக்கிறது. அவ்வளவு சீக்கிரம் கெடுவதற்குக் காரணம் அவைகளின் உட்புரம், வெளிப்புரம் கேட்டை விளைக்கும் ஓர் வித சிறிய புழுக்கள் இருக்கின்றன. சாதாரணமாய்ச் சமைப்பதனால் அப்புழுக்கள் சாவதில்லை. சமைக்கக்கூடிய உஷ்ணத்தைத் தாங்குவதற்கான சக்தி அப்புழுக்களுக்குண்டு. உப்புப்பாடம்,புகைப்பாடம் மீன்களிலும், மாம்சங்களிலும் இப்புழுக்கள் எண்ணிக்கையில்லாமல்ஓட்டிக்கொண்டிருக்கும்' என்று சொல்லியிருக்கிறார்கள்.

டாக்டர் கெல்லோக் (Kolok) என்ற கிரீஸ்தேசத்து வைத்திய ஆராய்ச்சி நிபுணர் ஆராய்ச்சி செய்ததில் பின் வருமாறு சொல்லுகிறார். 'மார்க்கட்டிலிருந்து பல வித மாமிசங்களை வாங்கி சுத்தமான கடிதத்தில் சுற்றி ஆராய்ச்சிச்சாலைக்குக் கொண்டு போய் சில துண்டுகளைப்பச்சையாகவும் சில துண்டுகளை வேகவைத்து ம்பரிசோதித்துப் பார்த்ததில் பச்சைமாம்சத்தில் ஒரு கிராம் இடையுள்ளஒருதுண்டில்105000 எரோப் என்ற புழுக்களும் 90000அன் ரோப் என்ற புழுக்களும் காணப்பட்டன. வேகவைத்த துண்டில் மேல்பாப்பில் புழுக்கள் இல்லையாயினும் உட்புரத்தில் கிராம 1க்கு 8000 எரோப் புழுக்களும் 2000 அன்ரோப் புழுக்களும் காணப்பட்டன. மேலே சொன்ன இரண்டுவித புழுக்களிலும் அன்ரோப் என்ற புழுக்கள் தான் அதிக விஷத்தன்மையுடையது. கெட்டுப் போகாத புதிய பச்சை மீனில் ஒரு கிராம் எடையுள்ள விடத்தில் 83000000 அன்ரோப்என்றபுழுக்கள்காணப்பட்டன'என்றும்,'இந்தப்புழுக்கள்செத்த மீனில் அதிகதரிதமாய்ப் பரவுகின்றது'என்றும்சொல்லியிருக்கிறார்.

இவைகள் தவிர வைத்திய சாஸ்திர நிபுணர்களாகிய அநேக இந்தியர், அமெரிக்கர், ஐரோப்பியர் இன்னும் இவ்வித அபிப்பிராயத்தைக்கொண்டு கற்றுணர்ந்த அநேகர் 'புலால் உண்பதால் ஆயிரக்கணக்கான வியாதிகள் உற்பத்தி யாகின்றன'வென்றுமசொல்லியிருக்கிறார்கள். புலாலுண்ணலைவிடுத்து காய்கனிகளைப்புசித்து பலவான்களாகவும் நீண்ட ஆயுளுள்ளவர்களாகவும் இருந்தனர். இவ்விதமாக 'ஜேன்கினஸ் என்பவர் 169 வருடங்களும், வில்லியம் மீட் என்பவர் 148 வருடங்களும் தாமஸ்பார் என்பவர் 152 வருடங்களும், டெஸ்மண்ட் தேசத்து சீமாட்டியாகிய கெதரின் என்பவர் 158 வருடங்களும் சுகமே ஜீவித்திருந்தார்கள்' என்று சரித்திர பூர்வமாய் நாம் அறிகிறோம். இப்பொழுது இந்தியா, இங்கிலாந்து, ஐரோப்பா முதலிய கண்டங்களில்'ஜீவதயாசங்கங்களும்மாக்கறியுண்ணும் கட்டுப்பாடுளசங்கங்களும், ஜீவன்களை வைத்து வளர்க்கும் இடங்களும்' ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின்மூலமாய் அநேகங்கோடி உயர்ப்பிராணிகள் தினம்உயிர்தப்பி, உயகின்றன. இதனால் காய்கனிகளை புசித்துக்கொண்டே பலவான்களாயும், வீரபுருஷர்களாயும், ஆரோக்கியமாயும்இருக்கலாமென்பதும், புலாலுண்ணுதல் கெடுதியென்றும் நன்கு விளங்கும்.

(6ம் பக்கத் தொடர்ச்சி)

களால் ஒரு நாளும் எவ்வித சீர்திருத்தமும் கைகூடாது. ஆதலால் சீர்திருத்தக்காரருக்கு உரமும், தனது அறிவில் நம்பிக்கையும், பரீக்ஷிக்கும் தாராளதன்மையும் வேண்டும். இது சமயம் உலகமெல்லாம் சீர்திருத்த மடைந்துவிட்டது. நாம் மாத்திரம் யாரைத்தொடலாம்? யார்வீட்டில் சாப்பிடலாம்? எதைச்சாப்பிடலாம்? என்பதுபோன்றவைகளில் இப்பொழுது, இந்த இருபதாவது நூற்றாண்டில் கவனித்துவருகின்றோம்.

உலக மக்கள் ஆகாயத்தில் பறக்கின்றார்கள். நம்மகான்கள் பிணங்கள்போல் மக்கள் தோள்களின் மீது சுமந்து செல்லப்படுகின்றார்கள். மற்ற நாட்டு மக்கள் புதிய, புதிய இயந்திரங்களை உற்பத்தி செய்து சீர்திருத்தமடைகின்றார்கள். நமது நாட்டு மகான்கள் நம் பாட்டன் காலத்தில் இருந்த சாதனத்தை தேடிப் பிடித்து அட்டாலியில் இருந்து இறக்கி அழுவுக்குக் கொண்டுவருகின்றார்கள்.

முன்னேற்றம், சீர்திருத்தம் என்கின்ற துறையே நமது நாட்டு மக்களுக்குத்தடைப்படுத்தப் பட்டு விட்டது. அந்தப்பக்கம் திரும்புவதென்றால் "உயிரை விடுகின்றேன்" என்கின்றார்கள். ஏனெனில் இன்றைய இந்திய நிலைமை நமது பாட்டன் காலத்த நிலைமை. ஆகியஎல்லாம் சோம்பேரிகள் இயற்றுப்பிழைப்புக்கும் ஒருவர் பிழைக்க ஒருவர் உழைக்கும் முறைமைக்கும் அனுகூலமாய் கற்பிக்கப்பட்டிருப்பதால்அதிலிருந்து மாறுவதற்குசோம்பேரிகளும்,ஊரார்உழைப்பில்சாப்பிடுகின்றவர்களும்ஒருநாளும்ஒப்பமாட்டார்கள் ஆதலால்நம் நாட்டுமக்களே நம் முன்னேற்றத்திற்கு மூட்டுக்கட்டையாக இருக்கின்றார்கள். இந்தக்கூட்டம் ஒரு நாளும் இந்தியாவை—இந்து மக்களை முன்னேற விடவே விடாது. சுதந்திரமாய் வாழவும் சம்மதிக்கமாட்டார்கள். அதனாலேயேதான் அவர்கள் பாமர மக்கள் கல்வி இல்லாமல் இருக்கும்படிக்கும், அவர்களுக்கு செல்வம்சேராமல் இருக்கும் படிக்கும் பலதடைகளைமதத்தின் பெயரால், கடவுள் பெயரால், தேசியத்தின் பெயரால் ஏற்படுத்தி 100-க்கு 90-மக்களை 100-க்கு 10 மக்கள் ஏமாற்றி வருகின்றார்கள். இந்த சூழ்நிலை மாறுதலடையவேண்டுமானால் கடவுள், மதம், தெய்வீகம், தேசியம் முதலாகிய எல்லாப்புரட்டுகளையும் வெளியாக்கிஉடைத்தெரிய வேண்டும்.

அதற்கு மக்கள் சம்மதிப்பதென்பது மிக்க கஷ்டமான காரியமாகும். எனினும் இதை சம்பந்தமான மூடநம்பிக்கையும், பிடிவாதமும் நம் மக்களது இரத்தத்தில் ஊறிப்போய்விட்டது. அதுமாத்திரமல்லாமல் இந்த மூன்று துறைகளின்பிரசாரத்தையும், வயிற்றுப்பிழைப்பாய்க்கொண்ட மக்கள் நாளுக்கு நாள் வளர்த்து கொண்டுவருகின்றார்கள். அவர்களது தொல்லை அடியோடு ஒழிந்தாலல்லாது சீர்திருத்தமோ, முன்னேற்றமோ சுலபமான காரியமல்ல.

உதாரணமாக மதம் என்கின்ற சாக்கின் பெயரால் அரைக்காசு அரலும், ஒரு இட்டலியை 6 காசுக்கு விற்கும்ஒருபார்ப்பானிடம்சென்றுஜாதிவித்தியாசம்தப்பு, பழக்கம் வழக்கம் தப்பு என்றால் ஒப்புக்கொள்ளுவானா? என்று பாருங்கள். அன்றியும் அவனது மதம், ஜாதி, உயர்வு தாழ்வு பாகுபாடு ஒழிவதற்கு முட்டுக்கட்டையாக இருப்பானா? அல்லது இருக்கமாட்டானா? என்று பாருங்கள். அன்றியும் மதப் பிரசாரம் செய்யவும் வெளி இளம்பமாட்டானா? என்றும் பாருங்கள். இதுபோலவே கடவுள், தேசியம் என்பதின் பயனும் வயிறுவளர்க்கும் சோம்பேரிகள் அபரட்டை வெளியாக்க சம்பதிப்பார்களா? என்றும் பார்ப்பதோடு அவர்கள்கடவுள் பிரசாரம், தேசிய பிரசாரம் செய்யமாட்டார்களா? என்றும்யோசித்துப்பாருங்கள்.

இந்த முட்டுக்கட்டையும் எதிர்பிரசாரக்கூட்டமும் இயற்கையே யானாலும் அவை யொழிந்தாகவேண்டும். நமது மக்கள் படித்தவர்கள் என்றாலும், பாமர மக்கள் என்றாலும் இவ்விஷயங்களில் ஒரே மாதிரி மூடர்களாகவே இருக்கின்றார்கள்.

உதாரணமாக ஒரு 'வடகலை' ஒரு "கைக்கோளனை" "ஒரு செட்டியை", என்பவன் எவ்வளவு தான் சுத்தமாய் இருந்துகொண்டு ஒருபடி அரிசிக்கு 30 இட்டலி போட்டு இட்டலி 1-க்கு கால் அணுவுக்கு விற்றாலும் நமது அறிவாளிகள் என்பவர்கள் வாங்குவதில்லை. ஆனால் பார்ப்பனன் என்கின்ற ஒருவன் எவ்வளவு அழுக்குத்துணியுடனும்சொரிசிரங்குடனும், மேல்வை நாற்றத்துடனும், வெள்ளைப் படையுடனுமிருந்தாலும் ஒரு படிக்கு 60 இட்டலி வீதம் போட்டாலும்இட்டலி ஒன்று 0-0-6 பைவீதம் முன் பணம்கொடுத்து "சாமி, சாமி" என்று 'சொக்கவாசல் பிரசாதம்'போல் கேட்டு வாங்கிச் சாப்பிடத் தயாராயிருக்கின்றோம். இது பாமர மக்களிடம் மாத்திரம் இருப்பதாக நான் சொல்ல வரவில்லை. பண்டிதர்களிடமும், நாகரீக செல்வவான்களிடமுமே இந்த குணத்தை நான் பார்க்கின்றேன்.

ஆகவே சீர்திருத்தத்திற்கு யார் முட்டுக்கட்டை என்று பாருங்கள். இதுபோலவே கடவுள் விஷயத்திலும், கடவுள் என்பதை மனிதன் தனது அக்கிரமங்களுக்குபரிகாரம் என்று நினைத்துக்கொண்டு மற்றவர்களை இம்சித்துதப்பித்துக்கொள்வதற்கும் ஏமாற்றுவதற்கும்,தான் மற்றமக்களை

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

விட அதிக லாபம் சம்பாதிப்பதற்கும் பயன் படுத்தி அதலால் அடைந்த பய னை நிலை நிறுத்திக்கொள்ள கடவுளை ஒரு சாக்காய் வைத்து அதற்குக் கோ வில் கட்டவும், கும்பாபிஷேகம் செய் யவும், விளக்குப்போடவும், அதன் தலையில் பால், நெய், தயிர், பஞ்சா மிர்தம், தேன் ஆகிய வஸ்துக்களைக் கொட்டிப் பாழாக்கவும், அதை ஆதா ரமாய்க் கொண்டு இந்தக்காரியம் செ ய்து வயிர் பிழைப்பதையே ஒரு தொ ழிலாய்க் கொண்டு அநேக சோம்பேரி கள் பிழைக்கவுமான காரியத்தில் அமர்ந்திருக்கும் கூட்டத்தார், கட வுள் புரட்டை வெளியாக்க சம்மதிப் பார்களா? மேலும் மூட்டுக்கட்டை யாய் இருக்கமாட்டார்களா? மற்றும் கடவுள் பிரசாரமும் செய்யமாட்டார் களா? என்று யோசித்துப் பாருங்கள்.

இந்தப் புரட்டில் ஏமாறுகின்றவர் களும், இதற்கு அனுகூலமாய் இருப் பவர்களும் எல்லோரும் மூழு மூட மக்கள் என்றே சொல்லிவிடலாமா? என்றும் பாருங்கள்.

அப்படியும் இல்லையே. நல்ல சா மர்த்தியக்காரர்கள், லெகு தந்திரமாய்ப் பணம் சம்பாதிப் பவர்கள், ஜாலவித்தைபோல் கெட்டி க்காரத்தனம் செய்து மற்ற மக்களை ஏமாற்றிப் பணம் சம்பாதிக்கும் யுக்தி சாலிகள் ஆகிய மக்களே இவ்வளவு புத்திஜீவத்துடனும், தந்திரத்து ணும், கஷ்டத்துடனும் எத்தனைபோ மக்கள் வயிறெரிய—எரிய அதைக்கொஞ்சமும் சட்டை செய்யா மல் கல்மன்துடனும், பசியுடன் குழந் தைகளும், பெண்களும் மொண்டி மூ டங்களும் கிழடுகளும் பசியால் பதரப் பதர அதை சற்றும் லட்சியம் செய் யாத உலுத்த சிகாமணிகளும் ஆயி ரம் ஆயிரமாய், லட்சம் லட்சமாய் இம்மாதிரி கடவுள் புரட்டு காரியங் களில் செலவு செய்து பாழாக்குவதென்றால் இதைமுட்டாள்தனமென்றும் அறிவீனத்தனமென்றும்சுயபத்தில் அ ட்டூழித்தனம் என்றும் சொல்லிவிட முடியுமா? என்று யோசித்துப்பாருங் கள். ஆகவே இந்த மக்கள் கடவுள் புரட்டை வெளிபாக்கமுட்டுக்கட்டை யாயிருக்கமாட்டார்களா? என்று யோசித்துப்பாருங்கள்.

மற்றும் இந்த மாதிரி ஆட்களின் காரியங்களால் பிழைக்க விருக்கும் கோயிலக்காத்துப்பிழைக்கும் மக்கள் கடவுள் பிரசாரம் செய்யமாட்டார்க ளா? என்று யோசித்துப்பாருங்கள்.

இதுபோகவே தேசிய மென்பதும், ஏழைகளுக்குத் துன்பம் விளைவித்து வருவதும்குடியானவர்களுக்கு தொல் லைவிளைத்துவருவதும்,தொழிலாளி களுக்கும், சரீரத்தால் பாடுபடுகின்ற வர்களுக்கும் அரைபட்டினியையேஅ ளித்துவருவதும்சோம்பேறிகள் மூன் றுவேஷ்டியுடன் வாழவும் சரீரத்தில் வேர்வை ஏற்படாமல் மெலுக்காக வெள்ளைவேஷ்டியுடன் திரியவும், பதவி ஓட்டுக்கும், உத்தியோகத்தி ற்கும் அலையும் கூட்டத்தார் இத் தேசியத்தை நம்பியே முன்னுக்கு வர வேண்டுமென்று கருதியிருக்கும் கூட் டத்தார், கண்மூடித்தனமாய் வியாபா ரத்திற்கு முன்முதல் போடுவதுபோ ல் தேசிய அர்ச்சகர்களுக்கு-தரகர்களு க்கு அள்ளி அளித்துக்கொண்டிருக் கும் போது தேசியப்புரட்டை வெளி யாக்குவதுசுலபமா? அல்லதுசாத்திய மா? என்றும் யோசித்துப்பாருங்கள், இவர்கள் முட்டுக்கட்டையாயிருக்கமா ட்டார்களா?என்றும்யோசித்துப்பாரு ங்கள். அதுமாத்திரமல்லாமல்ஒருகூட் டம்சேர்திருத்தத்திற்கு எதிர்ப்பிரசார மும்செய்யமாட்டார்களா? என்றும் கருதிப்பாருங்கள்.

ஆகவே எந்தப்புரட்டை யெர்பிக்க வேண்டுமானாலும் அதனால் லாபம டைகின்றவர்கள்ஒருநாளும்சம்மதிக்க மாட்டார்கள். பேசிப்பேசி எழுதியே முதி இந்தக்கூட்டத்தார்களால் வச வும் தொல்லையும் பட்டுப்பட்டு பிறகு ஏதாவது சிறிது கண்விழிப்பை உண் டாக்க முடியுமே யொழிய மற்றபடி உண்மை சீர்திருத்தம்என்பதுதிடீரெ ன்றுகக்கூடியசுலபமான காரியமல்ல.

ஆனபோதிலும் விடாமுயற்சியு டன் சுயநலப்பற்றற்ற வாலிபர்களும், நம்பிக்கையுள்ள பெரியவர்களும்பாடு பட்டால் சீர்திருத்தம் சீக்கிரம் அடைய முடியும் என்பதில் சந்தேக மில்லை உலகம் சீர்திருத்தப்பக்கம் திரும்பி விட்டது. இந்தியாவைப் பார்த்து உலகத்தில் எல்லா நாடும் பரிகாசம் செய்கின்றது. ஆகலால் நாளுகவே சீர்திருத்தத்திற்கு பலநற் குறிகள் காணப்படுகின்றன. நான் உங்களைக் கேட்பதெல்லாம் அதைத் தடுக்கவாதீர்கள் என்பதேயாகும். சீர்திருத்தக்காரியங்களில் வேறு காரி யத்தைப் போட்டு குழப்பாதீர்கள். சீர்திருத்த வாதிகள் முதலில் ஜாதிப் பிரிவை அழிக்க முன்வாருங்கள். பெண்களுக்கும் ஆண்களுக்கும் சிறி தும் வித்தியாசமில்லாமல் ஒன்றுபோ லாக்குங்கள். பிறகு உங்களால்என்ன காரியமாகாது என்று நினைக்கிறீர் கள்? 'சுயராஜ்யம்' 'பரராஜ்யம்' என்ப தெல்லாம் உங்கள் காலடியில் தானு கவே வந்துவிடும். அதில்லாமல் வெ றும் கூப்பாடு உண்மைப்பயனளிக் காது. இந்த ஊரில் சுயராஜ்யக்கா ரர் 100க்கு 75 பேர்கள் இருப்பதாக க்கத்தலாம், கதர் கட்டலாம், கொடி பிடிக்கலாம், காந்திக்குல்லாய் போட லாம், தீண்டாமை விலக்குவதுதான் சுயராஜ்யத்தின்முதல் கொள்கைஎன் றுசொல்லலாம், மகாத்மாவுக்கு ஜே! என்றுகத்தலாம், 'சுயமரியாதை இயக் கம்தேசியத்திற்கு விரோதம்' என்றும் சொல்லலாம். ஆனால் இந்த ஊர் தண்ணீர் இணைந்தில் ஒரு பறையன் வெள்ளிப்பாத்திரத்தில்தண்ணீர்மொ ள்ளஒருநான்குபெயர்கள்சம்மதிப்பார் களா? தண்ணீர் மொண்டவனைஉதை க்காமல் இருப்பார்களா? பாருங்கள். சுயராஜ்யம் என்பது வந்தால் மாத்தி ரம் இந்த ஊர் ஜனங்களுக்குப்புத்தி மாறிவிடுமா? யோசித்துப்பாருங்கள்.

ஆகவேஒருவன் "கங்காதரா மாண் டாயோ" வென்றால் எல்லாரும் விப ரம் தெரியாமல் அழுதாதீர்கள். இந்த பலக்குறைவேதான் சீர்திருத்தத்தி ற்கு முட்டுக்கட்டை. ஆகையால் கவனித்து உங்களுக்குத்தோன்றுகி படி நடவுங்கள். நான்சொன்னதை யோசித்து ஆராய்ந்து பார்க்காமல் நம்பிவிடாதீர்கள் என்பதாகவும் மற் றும் பல விஷயங்களைப் 1-30 மணி நேரம் பேசினார்.

தலைவர் முடிவுரை.

பிறகு தலைவர் எழுந்து முடிவுரை யாகப் பேசியதாவது;—

இந்தப் பிரசங்கம் கேட்டபிறகு எனது புத்தி மாறிவிட்டது. எனது பக்தி யெல்லாம் என்ன ஆகுமோ தெரியவில்லை. இத்தப்பிரசங்கம் நான் இதுவரை கேட்காதது தப்பு என்றே கருதுகின்றேன். எத்தவிஷயத்திலா வது, எதாவது சந்தேகமிருந்தால் கேளுங்கள். எவ்வளவு தெளிவாகப் பேசியிருக்கின்றார் பாருங்கள். ஆகை யால்பெரியார்சொன்னபடிகவனித்து யோசித்துஉங்கள் நடவடிக்கைகளைத் திருத்திகொள்ளுங்கள் என்பதாகப் பேசினார்.

பிறகு திரு. குழந்தை தலைவருக்கு நன்றி செலுத்தினர். பிறகு திரு. ஈ. வெ. இராமசாமி முதலிய உபன் யாசகர்களுக்குநன்றிகூறப்பட்டுமாலை யிட்டுகூட்டம் முடிவுபெற்றது. பிறகு மதுவிலக்கு, கல்வி ஆகிய விஷய மாய் திரு. ஈ. வி சிங்காரவேலு அவர்களால் படக்காட்சி காட்டப்பட் டது. பிறகு திரு மாரியப்பன் அவர் கள் வீட்டில் பலமானஒருவிருந்துந டத்தது. பிறகு இரவு 11 மணிக்கு திருவாளர்கள் ஈ. வெ. இராமசாமி மொட்டையப்ப முதலியார் முதலிய வர்கள் ஈரோட்டிற்கு காரில் பிரயா ணமாகி விட்டார்கள்.

கடவுளும் ஏமாறுவாரா?

சென்ற மீ 15.உ தஞ்சாவூர் ஜில்லா திருக்காட்டு பள்ளிக்கு அருகாமையிலுள்ள அடஞ்சூருக் கும்வாகூருக்கும் பொதுவாயுள்ள பிரமணூர் (ஐயனூர்) கோவிலு க்கு அடஞ்சூர் பிரபல மிராசு தாரர்களில் ஒருவர்வழக்கம்போல் கடவுளுக்கு கோடைகால குளிர் ச்சி உண்டாக்கும் பொருட்டு 2-நாள் முன்னதாக கைநோக சந்தனம் இழைத்து மூன்றும் நாளாகிய வெள்ளியன்று அபி ஷேகசாமான்களில் ஒன்றுகூட குறையாமல் பகல் 12மணிக்கு க்கொண்டுபோய்வைத்து கோவி லில் பார்க்கும்பொழுது கடவு ளாகிய கல் கீழே சாய்ந்துகிடந் தது. இதிலிருந்து அடியில் இரு ந்த அக்ஷாதகட்டை யாரோ திருடிக்கொண்டு போய் விட்ட தாகத் தெரிகிறது.

பிறகு கொண்டு போன சாமா ன்களை அங்கு வந்திருந்த சுயமரி யாதைக்காரர் சொன்னபடி சா மான்களையெல்லாம் அங்குள்ள சிறு ஏழை குழந்தைகளுக்கு எடுத்துக்கொடுத்து விட்டு 'நான் இனி இப்பாழும் தெய்வத்திற்கு யாதொன்றும் செய்வதில்லை' யென்று சொல்லி சபமரியாதை யில் திரும்பிவிட்டார். என்னே ஆச்சரியம்! 'உள்ளிருந்த கடவுள் தான் ஏமார்ந்துவிட்டார், வெளி யிற்சுற்றிலும், சட்டி, அம்பு, அறிவாள், கத்தி முதலிய உயிர் கார்க்கும் ஆயுதங்கள் வைத்திரு ந்த காத்தான், கருப்பன், வீரன் கொண்டி, சங்கிலி முதலிய தெய் வங்களும்கூட ஏமார்ந்து விட் டதைப்பற்றி' மிகவும் ஆச்சரிய மாய் இருக்கிறதுஎன ஒரு மான வர் அறிவிக்கிறார்.

மூஸ்லீம்களுக்கு ஓர் வேண்டுகோள்.

அன்பு மிக்க சகோதர்களே!

இவ்விந்தியாவின்கண் வாழ்ந் துவரும் (இரண்டொரு சபாவை வாதிகளைத்தவிர) 8 கோடி முஸ் லீம்களுக்கும் இஃது பொழுது ஒரேஇராஜீயத்தலைவராக இருந்து வருபவர் காலஞ்சென்ற மௌ லானாமுஹமத் அலி (மர்ஹூம்) அவர்களுக்குப்பின் மௌலானா சௌகத்அலி அவர்களே யாவர் என்பது எந்த ஒரு சிறு குழந் தையும் அறிந்ததொன்று.

இத்தப்பிரதியக்ஷமான உண் மையை மறைக்க சமீபத்தில் கா ங்கிரசும், காந்தியும் 'மௌலானா சௌகத்அலி முஸ்லீம்களின்பிர திநிதியல்ல' வென்று பிரசாரம் செய்து வருவதுமல்லாமல் 'காந்தி யே இந்தியாவின் (இந்த முஸ் லீம்களின்) ஒரே பிரதிநிதி'யென் றும் கூறி முஸ்லீம்களின் கண் ணைபொத்தி விட்டுத்தனியே வட்டமேஜை மஹாநாட்டுக்கு ப்போய் ஹிந்துக்களின் ராஜ்ஜி யத்தை வாங்கி வருவதற்கு ஒரு புதிய வஞ்சக சூழ்ச்சியையும் புரி ந்து வருகிறார்கள்: எனவே இந் தியாவிலுள்ள எல்லா முஸ்லீம் களும், சங்கங்களும் காந்தி வட் டமேஜை மஹாநாட்டுக்கு செல் லுங்கால், கூட்டங்கள் கூடியும், ஒன்று சேர்ந்தும் "காந்தி முஸ் லீம்களின் பிரதிநிதியல்லர்: அவர் வர்ணச்சிரமதர்மிகளுக்கும் மேல் ஜாதி ஹிந்துக்களுக்கும், ஹிந்து முதலாளிகளுக்கும்தான் பிரதி நிதி" என்று வட்டமேஜை மஹா நாட்டுக்குத்தந்தி கொடுத்து இந் த ஹிந்துக்களின் பெரிய சூழ்ச்சி யினின்றும் முஸலீம்கள் தப்பிக் கொள்ளுமாறு மிக மிக வினய மாய்க்கேட்டுக் கொள்கிறேன் என நானுல்லாம் ஆசிரியர் ஜனப்K. M முஹம்மதுஸாலிஹ் அவர்கள் எழுதுகிறார்.

திருச்சிஞப்பள்ளி ஜில்லா முத்துராஜ வாலிபர் சங்கம்.

முதலாவது மகாநாடு.

மேற்படி மகாநாடானது திருச்சியில் திரு. எ. மாரிமுத்து பி ஏ. எல். டி. அவர்களின் தலைமையில் ஜூலை கடைசிவாரத்தில் கூடியது. அவ்வமயம் வரவேற்புக்கமிட்டித் தலைவரான திரு. எஸ். சின்னையா அவர்கள் தமது வரவேற்புப் பிரசங்கத்தில் 'கதர்த்தொழில்' என்னும் தலைப்பின் கீழ், பின் வருமாறு சொற்பொழிவாற்றியிருக்கின்றார்.

கதர்த்தொழில்.

'கைராட்டினத்தில் கையால் நூற்று நெய்தல் விவசாயிகளுக்கு உதவித் தொழிலெனவும், அது சும்மாவிருக்கும் ஒரு ஆறுமாதத்தில் வருவாய்க்குரிய பெருந்தொழிலென்றும், அதுவே தேசவிடுதலைக்கு சிறந்த ஆயுதமெனவும் காங்கிரசின் புத்தியிர்த் தலைவர் மகாத்மா காந்தியடிகளும், தொண்டர்களும் சொல்லி பெருமுயற்சியுடனுழைத்ததின்பயனாய் அன்னிய நாட்டுத்துணி விலக்குக்கும் பெரும் பயன் தந்து சர்வ வல்லமைகளும் நிறைந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தாரினைப் பணிய வைத்து நாம் எதிர் பாராத வண்ணம் அரசியல் சமாதானத்துக்கு டன்படும நிலைமைக்கும் ஓர்காரணமாயிலங்குவதனையும், ஏழை விவசாயிகள் வேறு தொழிலகப்படாதவிடங்களில் தினம் 12 மணியுழைப்பிற்கு பனிரண்டு பைசா ஊதியம் பெறுவதையும் அதுபோன்றே பெண்மக்களும் வயோதிகர்களும் வீட்டிலிருந்தே நூற்றுப் பயனடைவதையும் நான் மறக்கவேயில்லை. ஆனால் உலக முழுவதும் இக்காலத்தில் குறைந்த உழைப்பில் நிறைந்தவருவாய் எந்தத்தொழிலினுல் எப்படித் தேடலாம்? அதற்கு எவ்விதமான இயந்திர சாதனங்களமைக்கலாம்?மென ஆராய்ச்சி செய்தபயன் பெற்று மேன்மையடைவதைக் கேட்டும், கண்டும் வருகின்ற நாம், பின்னேக்கிய முறையில் ராட்டும் தக்ளியும் சுற்றிக் குறைந்த வருவாய்க்கு கிறைந்த நேசத்தையும் உழைப்பையும் வீணுக்கினுல் நாட்டினர் வருவாய் ஒரு அணு ஏழுபைசாவிலிருந்து மற்ற நாட்டவர்போல் இரண்டு ரூபாய் மூன்றுரூபாய் தேடும்நிலைமையை எப்படி அடைவது? என்பதனைமட்டும் உங்களது பகுத்தறிவைச் செலுத்திப்பார்க்குமபடி வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். இதுபோலவே ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப் பண்டங்களையும் பிறர் உதவியின்றி நானே தயாரித்துக் கொள்ளச் செய்வதே எனது சீரிய கொள்கையெனக் காந்தியடிகள் கூறும் தத்துவம் எப்படி முடிவுறும் என்பதையும் யோசித்துக்கொள்ளுங்கள். குறைந்த காலத்தில் அதிகமாக நூற்கும் இயந்திரம் கண்டுபிடிப்பவர்கட்கு (1,00,000) ஒரு லட்ச ரூபாய் பரிசு வைத்திருப்பதையும் நீங்கள் ஞாபகம் வைத்து அத்துறையில் கவனஞ் செலுத்தி அத்தகைய கருவியைக்கண்டு பிடித்து பெருந்தொகையையும் காந்தியடிகள் முதலான தேசத்தலைவர்கள் நன் மதிப்பையும் பெற முயற்சியுங்கள்"

நத்தம் முஸ்லீம் சங்கம் அபிராமம்.

1931வது ஜூலை மீ 28உ 'மீலாதே ஷரீப்' தினத்தன்று நத்தம் முஸ்லீம் சங்கஹாலில் மௌலித்ஷரீப் ஓதி முடிந்தவுடன் மாலை 4மணிக்கு பைத்து ஓதி ஊர்வலம் வந்து மாலை 5மணிக்கு ஜனுப் ப. கா. பீர்முகமது சாகிப் அவர்கள் தலைமையின் கீழ் நடந்த கூட்டத்தில் ஜனுப் து. கா. முகமதுகாஸீம் சாகிப் அவர்களால் அரபியிலும் ஜனுப் பெ அ. மு. முஹம்மது அபூபக்கர்சாகிப் அவர்களால் தமிழிலும் கடவுள் வாழ்த்துக்கள் கூறப்பட்டபின் ஜனுப் வ. செ. மு. அப்துல் மஜீது சாகிப் அவர்களால் 'உலக மதபோத உத்தமர்' என்னும் புத்தகமும், ஜனுப் பா. செ. அப்துல் காதர் சாகிப் அவர்களால் 'நபிகள் நாதரின் வாலாற்றுச்சுருக்க'மும் வாசித்துக்காண்பிக்கப்பட்டது. பின்னர் அக்கிராசனர் முடிவுரைக்குப்பின் 'உலக மதபோத உத்தமர்' என்னும் புத்தகமும், சிற்றுண்டியும் வழங்கப்பட்டு கூட்டம் 6.30 மணிக்கு இனிது கலைவுற்றது.

நத்தம் முஸ்லீம் சங்கத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி மேற்படி தினத்தன்று கடைகள் பூரவும் திறக்கப்படவில்லை என மேற்படி சங்க உபகாரியதரிசி அறிவிக்கிறார்.

சென்னையில் "குடி அரசு" பத்திரிகையும், புஸ்தகங்களும் கிடைக்குமிடம்.

T. சுப்ரமணியம்,
3, செங்கல்வராய முதலி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

சுயமரியாதைச் சங்கம். நாகபட்டணம்.

நாளது 13-8-31உ திங்கள்கிழமை மாலை 5 30 மணிக்கு நமது சங்கக்கட்டிடத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். அது சமயம் நாகைதாலூகா சுயமரியாதை மகாநாட்டிற்காக வரவேற்புக்கமிட்டித் தலைவர், காரியதரிசி முதலியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார் களாகையால் அனைவரும் தவறுதுவாவேணுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிறதென மேற்படி சங்கத்தின் பொதுக்காரியதரிசி எழுதுகிறார்.

ஜோதிமுத்து.

டாக்டர் B. A. எதியோப்பியாவில் தயாரித்து 31 ஆண்டுகளாக அனுபவித்து கைகண்ட, கோஷாயி மேக எண்ணை

(கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப்பெற்றது.)

சகோதர, சகோதரிகளே, வெட்டவாய்வு (அவ்ட) எட்டுவித க்ஷளாக, கர்ப்ப,—வித்து ஸ்தானங்களில் தங்கி, வெளியாகிக்கொண்டிருப்பதை அக்காலங்களில் கண்டித்து நீக்காமல் விட்டு நீடித்து நின்று மேகவாய்வு என்று பெயர் பெற்ற கோடியோன் சபாலத்தில் தங்கி, போல இடி, குத்தல் நேத்திரத்தில் பார்வை மங்கல், பல குற்றங்களும், நாசி, செவி, தந்தங்கள், கண்டம் இவைகளில் குற்றங்களும், நெஞ்சில் தங்கி, மாரடைப்பு, தமரகவாய்வு, தினவல், கொக்கிருமல், காசமாகவு , ஈல்களில் தங்கி, சூலைகளாகவும் நரம்புகளில் தங்கி முன்-பின் (வீச்சுகள்) பலவித இழுப்புகளாகவும் வயற்றில் தங்கி, சலவித குண்மங்கள் வாய்வு,குதகடட்டிகள், பக்கவிலா இழுப்பு குத்தல் கொப்ப குற்றகள் நித்திரை அற்ற நீர்தாரை ரோகங்கள், மூலங்கள், திமிர், மத மதப்பு, சகலவித மேகங்கள், சிட்டைகள் ரண குஷ்டங்களாகவும், மலப்போக்கு அல்லது சிக்கல் பட்டு ஜெனிக்கும் (விரியபிர்ப் பெருகும்) அனந்த வெட்டவாய்வு ரோகிகளும், 3 நேரம் ஈம், கோஷாயி மேக எண்ணை சாப்பிட்ட 7வது நாளே, எல்லா உபத்திரவத்திலிருந்து விலகி15வது நாள்பாலியதே ஜசுடன் விருத்தரும் பாலிய உணர்ச்சி பெற்றுவருவது பிரத்தியகூம்

யோகாப்பியாகிகளுக்கு சடலத்திலுள்ள துர்நீர்களை அகற்றி எல்லா அவயவங்களிலும் சுத்த இரத்தத்தை ஊட்டி, அறிவு இடத்தில் புத்தியை நிறுத்தி (ஜோதியாகிய) தன்னை தெரிசிக்க, காயத்தை இருகச்செய்து காக்கும் காயகர்ப்பம். 3 நேரம் உபயோகிக்கும் கோஷாயி மேக எண்ணை கொண்ட சீசா 1க்கு ரூ. 7—0—0. பத்திய விபரம் மருந்துடன். பாக்கிங்தபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் பணம அனுப்பவேண்டும்.

கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

ராஜசித்தாதி லேகியம்.

ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

இந்த லேகியத்தைச் சுண்டக்காய் பிரமாணம் காலை, மாலை இரு வேளையும் சாப்பிட்டு வந்தால் தாதுபுஷ்டி, ஜீரணசக்தி இவைகளைக் கொடுத்து நாம்புகளுக்குப் பலத்தைத் தரும். சீதக்கடிப்பு, நெஞ்சுக்கரிப்பு, வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி, வயிற்றில் கட்டி, மலச்சிக்கல், பாலியருக்குண்டாகும் சொர்ப்பன ஸ்கலிதம் இவைகளைக் குணப்படுத்தும்.

1-டெ. ஒரு சேர் ரூ. 4-0-0, அரை சேர் ரூ. 2-0-0
கால் சேர் ரூ 1-0-0, அரைக்கால் சேர் ரூ. 0-8-0.
2-டெ. ஒரு சேர் ரூ. 3-0-0, அரை சேர் ரூ. 1-8-0,
கால் சேர் ரூ. 0-12-0, அரைக்கால் சேர் ரூ. 0-6-0,

T. A. ருமலிங்க முதலியார், ஷண்முகாநந்த வைத்தியசாலை.
அக்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மலாய்நாடு பூரவுக்கும் சோல் ஏஜண்டு:—

P. M. வேள்ளைச்சாமி,
டெ. 616 டத்தோகிரமட் ரோடு, பினாங்கு. S. S.

நாடு நலம்பெற வேண்டுமானால் நாஸ்திகம் பரவ வேண்டும்.

(M. S. நாதன்.)

பிரிட்டிஷ் காரர்களின் ஆட்சி தழைப்பதற்குக் காரணம்ஒற்றர்களென்பதும் ஒற்றர்களின்றி வெள்ளைக்காரர் அரசாங்கம் ஒரு நிமிஷமேனும் நிலைத்திருக்க முடியாதென்பதும்,நமதுநாட்டு இராஜதந்திரிகளின் அபிப்பிராயமாகும். ஆனால் இமயம் முதல்குமரிவரை பல்லாயிரக்கணக்கான வருடங்களாய் தழைத்தோங்கியிருக்கும் பார்ப்பன ஆட்சியின் படுமோசங்களைப் பற்றி மட்டும் சொல்லுவதற்கு இந்த இராஜதந்திரிகளுக்கு மனம் வருவதேயில்லை. ஏனெனில் நாஸ்திக பட்டத்தையும், நரகத்தையும் அடையும்படியாய் விடுமேயென்ற பயம் இவர்களை வாட்டுகிறது. 'இராஜத்துரோகம் செய்து தண்டனை அடையலாம, உயிரையும் விடலாம், தேசபக்தனென்றபட்டமும், வீர சொர்க்கமும்கிடைக்கும்''. ஆனால் பார்ப்பனப்புரட்டை வெளியாக்கி நாஸ்திக பட்டத்தையும், நரகத்தையும்பெறப்படாது."எனெனில்அதுகடவுளுக்குவிரோதமான'' தென்றமுட்டாள்தனம்இவர்களை விட்டுப்போகவில்லை. இவ்விதமான்மையுள்ள இராஜரிஷிகளும், இராஜதந்திரிகளும்தேசபக்தர்களுந்தான்,நமதுநாடு நலம்பெற வேண்டுமென்றும், சுயராஜ்ய நாடாகஆக்கப்பட வேண்டுமென்றும்ராப்பியத்தினம்செய்துவருகிறார்கள்.அதாவது "இந்துமதம்காப்பாற்றப்படவேண்டுமானால்இராமராஜ்யமோ, கௌடில்யர் ராஜ்யமோ ஸ்தாபிக்கப்படவேண்டும் இல்லையேல் இன்னும் சில நாட்களில் பார்ப்பன ஆட்சி அழிந்துவிடு'' மென்பது அந்த மேதாவிகளுக்கு நன்றாய்த்தெரியும். ஒன்றும் தெரியாமல் பார்ப்பனர் சுயராஜியம், கதர்,இந்தி-என்ற மந்திரங்களை பிரசாரம் செய்யவில்லை, இந்த மூன்று மந்திரங்களையும் ஜனங்கள் சரியாகத்தெரிந்து கொண்டு விட்டால்தான் இடிந்து போனபார்ப்பனஆட்சிக்கு இரண்டாவது அஸ்திவாரம் போட்டதாகும் என்று தெரிந்தே செய்கிறார்கள். எப்படியெனில் பார்ப்பான், பார்ப்பாளுகவும் கூத்திரியன், கூத்திரியனுகவும், வைசியன் வைசியனுகவும், சூத்திரன்-சூத்திரனுகவும், தீண்டாதவன்-தீண்டாதவனுகவும்இருக்கமுடியும். பணம்படைத்தவன் முதலாளிபாகவும், கூலி, ஏழைபாகவுமிருக்க முடியும். பஞ்சாங்கப் பார்ப்பான், கோயில் மணி ஆட்டுகிற பார்ப்பான், கரண்டி ஆபீஸ்பார்ப்பான், கால் கேஷப பார்ப்பான் மாமாபார்ப்பான்வகைபறுக்களெல்லாம்காப்பாற்றப்பட முடியும். இந்த இராஜாக்களின் கிரீடம் காப்பாற்றப்பட முடியும். 'வைசிபர்' களின் விபாபாரக்கொள்ளை காப்பாற்றப்பட முடியும்; முதல் நம்பர் சூத்திரர்களின் புராணபக்தி காப்பாற்றப்பட முடியும். இந்தியாவையே ஆலய மயமாக்க முடியும். 'சொர்க்கத்தை' நிலை நாட்டமுடியும். ஆகவே அழிந்து போகக்கூடிய இத்தனை காரியங்களையும்புனருத்தாரணம்செய்யப்பு ராப்பட்டிருக்கும் இந்த தேசியவாதிகளை நாட்டின் நலன் கருதும் நண்பர்களென்பதா? அல்லது பார்ப்பன ஆட்சிக்குத்துணைபுரியும்பக்கா ஒற்றர்களென்பதா? நன்றாய் யோசித்துப் பார்க்கவேண்டும். மதம் காப்பாற்றப்படுவதற்காகவே இந்த ஒற்றர்களெல்லாம் கூடிக்கொண்டு சுயராஜயமென்ற சூட்சி வார்த்தையை உண்டுபண்ணி இவர்களுடைய அபிப்பிராயத்தை பிரிட்டிஷார் ஒப்புக்கொள்ளுகிற வரையில் தொந்திரவு கொடுப்பதென்பதாக முடிவு செய்து கொண்டு இந்த சர்க்காரின்மேல் ஜனங்கள் தப்பெண்ணம் கொள்ளும்படியாக அரக்க ஆட்சியென்றும் (Satanic government) பிசாசு அரசாங்கமென்றும், வரி அதிகம் வாங்குகிறார்களென்றும், கொள்ளைக் கூட்டத்தாரென்றும் சொல்லி பிரசாரம் செய்வதும், கள்ளுக்கடை,ஜவுளிக்கடைகளில் மறியல் செய்வதும் வரியை நிறுத்துவதும், உப்புக் காய்ச்சுவதுமான காரியங்களெல்லாம் செய்ததும் இனியும் செய்வோமென்று பூச்சாண்டி காட்டுவதும் எதற்காக? பழைய இந்துராஜாக்களை யெல்லாம் வசப்படுத்தி தாங்களே சர்வத்திற்கும் கர்த்தாவாயிருந்தது போல் இவர்களையும் (வெள்ளையர்களையும்) தங்கள் ஸ்வாதீனமாக்கிக் கொள்ளவேண்டு மென்பதற்காகவே இத்தனை ஆர்பாட்டங்களும் நடைபெறுகின்றன.

ஏனெனில், வெள்ளைக்காரர்கள் அதிகாரமிருந்தால் ஒவ்வொரு மதக்காரனுக்கும், ஒவ்வொரு சாதிக்காரனுக்கும் தனி உரிமை கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. அவர்கள் எல்லோருக்கும் கல்வி பிரிவுபாகவும் இருக்கவே ண்டியிருக்கிறது. மேலும் சுயமரியாதை இயக்கத்தால் மனுதிக்கும் மற்றும் இதாகட்டுப்பாடுகளுக்கும் ஆபத்து வந்துவிட்டது. ஆகவே அந்தப் பொதுவுடைமை கட்சியையும் தனி உரிமை கட்சிகளையும் அடக்கி ஒடுக்கி வைப்பதற்காகவே இராணுவ அதிகாரத்தையும் தேசீய வாதிகள் கைப்பற்றப் பார்க்கிறார்கள், நமது சகோதர விரோதிகளை இதையெல்லாம் கவனிப்பதில்லை. "இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன? தமக்கு ஆள்வார் பட்டம் கிடைத்தால் போது''மென்று நினைத்து, சுயமரியாதையற்று, செல்வாக்குள்ள பக்கம் ஜே! போட்டுக் கொண்டுமிருக்கிறார்கள். நமது "கருணையுள்ள" அரசாங்கமோ மதத்தில்தலையிடமாட்டோமென்கிறது. சட்ட சபைகளின் மூலமும், பார்லிமெண்டு மூலமும் பார்க்லாமென்றால் ஆங்கு பார்ப்பன ஆட்சியின் ஒற்றர்களும் அவர்களின் தாசர்களும் கூடிக் கொண்டு "மதச்சட்டங்களை மாற்றப்படாது. அது முன்னோர்கள் ஏற்பாடு'' என்று எதிர்த்து விடுகிறார்கள். இந்த வழியிலும் நாடு நலம்பெற முடியாதென்பது விளங்குகிறது. உண்மையில் நாடுநலம்பெற வேண்டுமானால் நம சுயமரியாதை இயக்கமாகிய நாஸ்திக இயக்கம் நாடெங்கனும் பரவவேண்டும். அப்படிப்பரப்பப்படவேண்டுமானால் நாம் உண்மைத்தொண்டு செய்யும் தீயர்களாயிருக்க வேண்டும். எனெனில் வரப்போவது இராமராஜ்யமாகும். தேசியவாதிகள் சொல்லுவதுபோல் பிரிட்டிஷார் கேட்கா விட்டால் பொதுவுடைமை வந்து விடுமென்று பூச்சாண்டி காட்டுவதால் அவர்களும் இவர்களுடன் சேர்ந்து கொள்ளக்கூடும். அப்பொழுது நாம் பெரும்பெரும்கஷ்டங்களை அனுபவிக்கத்தயாராயிருக்கவேண்டும். நாம் ஆஸ்திகர்களாயிருந்து அந்தரங்கப் பித்தலாட்டம் செய்வதைவிட நாஸ்திகர்களாயிருந்து நாட்டிற்கு கலப்புரிதல் வேண்டும். உயிர் விடவும் வேண்டும். அப்படியானால் நாஸ்திகம் பரவி நாடும நலம் பெறும்.

கோவை சுயமரியாதை வாலிபர் சங்கம்.

27-6-31உயில் சேசங்கத்தின் கூட்டமொன்று மாலை 6மணிக்கு திரு. எ. ஆர். சிவானந்தம் அவர்கள் தலைமையில் நடந்தது.அதசமயம் அடியில் கண்ட தீர்மானங்களை சமீபத்தில் விருதாசலத்தில் மாகாணசுயமரியாதை மகாநாட்டின் கொண்டுவரும்படி சேலம்காட்டின் காரியதரிசிக்கு அனுப்பவேண்டுமென்று திருவாளர்கள், வி. சௌப்பண்ணன், எச். எஸ். முனுசாமி, எஸ். எ. மாணிக்கம் ஆகியோர்களால் ஆமோதிக்கப்பட்டு சபையோர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

(தீர்மானங்கள்.)

தலைமைச்சங்கத்தை ரிஜிஸ்டர் செய்வதுடன் நமதியக்கக் கொள்கைகளைப் பரப்புவதற்கு மாதச் சம்பளத்தில் பொறுப்புள்ளபிரசாரர்களை நியமிக்கவேணுமாய்த்தலைவர்களைக்கேட்டுக்கொள்ளுகிறது.

2. நமதியக்கத்தை அகில இந்திய இயக்கமாக மாற்றுவதற்கும், நமதியக்கக் கொள்கைகளை அகில இந்தியமக்கள் தெரிந்து கொள்வான் வேண்டியும், ஓர் ஆங்கில வாரப் பத்திரிகையும், தமிழ் நாட்டில் நமதியக்க நடவடிக்கைகளும், தலைவர்களின் சொற்பொழிவுகளும், நமதியக்க எதிரிகளின் பொய்க்கூற்றுகளுக்கு மறுப்பும் அவ்வப்போது வெளிவரத் தமிழ் தினசரிப் பத்திரிகையை வீரவில் ஆரம்பிக்கும்படி தலைவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

3. சென்ற மகா நாட்டில் நிர்மானித்தபடி நியமிக்கப்பட்ட கமிட்டியானது காலதாமதமின்றி சத்தியாக்கிரகசம்பந்தமாய் யாதொரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாதது இளைஞர் உலகத்திடையேபெரிய ஏமாற்றத்தை உண்டுபண்ணியிருப்பதோடுமின்றி இயக்கத்தில் அதிதீவிரப்பற்றுடைய உண்மைத் தொண்டர்கள் பலரின் ஊக்கங்குன்றி வருவதால் உடனே சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கும்படி செய்து இளைஞர்களின் குன்றாத ஊக்கத்திற்கு ஆக்கமளிக்கும்படி தலைவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறது எனக் காரியதரிசி எழுதுகிறார்.

பஞ்சமா பாதகங்கள்

எவை?

என் நிகழ்கின்றன?

அவற்றை நிறுத்தச் சமூக, அரசாங்கச் சட்டங்கள் ஆதரவளிக்கின்றனவா?

இதைப்பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்தீர்களா? இன்றே தபாலில் இன்றே எழுதுங்கள் 52 பக்கங்கொண்ட புஸ்தகம் 0—2—6 அணா ஸ்டாம்புக்கு அனுப்பப்படும். விலாசம்:—

கோவை அ. அய்யாமுத்து

புஞ்சைப்புளியம்பட்டி,

(கோயமுத்தூர் ஜில்லா)

(3ம பக்கத் தொடர்ச்சி)

என்கிற ப்யத்தாலேயே சரஸ்வதியும், மகாத்மா காந்தியையும் குற்றம் சொல்ல வேண்டியிருக்கிறது. வை தீகர்களின் உள் எண்ணத்தில் அமர்ந்திருக்கும் காங்கிரஸ் பார்ப்பனர்களுக்கு மகாத்மா காந்தி ஏழைகளின் ராமராஜியத்திற்கும் எத்தகைய சாக்கியானம் செய்தாலும் பார்ப்பனரின் அடிப்படை அலசயும் ஒருநாளும் பேச்சு மகாத்மா சொல்லி விட்டால் பார்ப்பனர்கள் சமய கூட்டங்கண்டிக்கிறார்கள். வைதீகத்திற்கும் ஏழைகளுக்கும் எனுகூலத்தை பேச்சாலோ சுயமரியாதை இயக்கம் குற்றம் சொல்லுகிறது. இந்த இரண்டிற்குமத்தியில் மகாத்மா இருக்கிறார். அதற்கு அவர் என்னதான் செய்வார்? எதற்காள காரியத்தை நடத்த வேண்டாமா? தீண்டாமை விவகாரத்தை ஒழித்துப் பின் மதுவிலக்காரங்களைத் தீர்த்துக் கொள்ளப்படாதாயென்று சொல்லி விடுவது சுலபத்தான். உண்பது, உடுப்பது, நடப்பது படிப்பது, படிப்பது, பணி, புத்தி அறிவு, பிரயாணம், விவகாரம், இந்திரியங்கள் இவைகளும் கண்டு திருப்திப் படுவது இதுகளையும் மேல் நாட்டு சம்பந்தம் ஏழை நாட்டைக் கட்டிப் பிடித்துக்கொண்டிருக்கையில் பணிக்கட்டி வரை கந்து வரும் தண்ணீரான கங்காஜல த்தை சந்தியா வந்தனம் செய்வதற்கு மேலே தொண்டு செல்லும் மாளவியாகளை நம்பலாமா? மேலே சுற்றி மேலுட்டு நாகரீகங்கள் பழகி தன் பிள்ளைகளை மேலுட்டிலே கல்வி படிக்க வைத்து மேலுட்டிலே உண்டான குடித்தனம் ஊணில் உதிரத்தில் கலந்து அதேரூபமாகவிருக்கும், சர். சி. பி. ராமசாமி அய்யர் 'மேலுடுபோய் வந்தபாவம் இராமேஸ்வரம் மணலில் பிரண்டு எழுந்தால் தீரு'மென்று பிராயச்சித்தம் செய்து கொண்ட மிலேச்சர்களுடைய புத்தியை உடையவர்களை கம்பழுடியுமா? நமது நாட்டில் நடந்துவரும் வருணச்சிரமக்கொடுமையைப்பற்றி கண்டித்தெழுதாத ஐம்பது வருடப்பத்திரிகையும் அதில் அதிஜாக்ரதையுமாக வருணச்சிரமத்தை மறவாமலிருப்பதற்கு வேண்டிய புராணக்கலாக்ஷேபமும் பலவித தந்திரங்களால் எழுதிக்கொண்டு வரும் பத்திராதிபரான திருவாளர்களான ஏ. ரங்கசாமி அய்யங்காரும் மாளவியா சர். சி. பி. ராமசாமி அய்யருடன் சேர்ந்து சமயில் சேர்ந்திருக்கும் சமயம் இவர்கள் மனோபாவங்கள் கமால்பாஷா, முஸோலினி காதர்ஷா முதலிய தேசியவாதிகளின் மனோபாவத்திற்கு ஒத்திருக்குமா? அப்புபட்டர், குப்புதீக்ஷதர், அனந்த ஆசாரி முதலியவர்களைப் போன்ற வைதீகவாதிகளின் மனோபாவத்தை ஒத்திருக்குமா? என்பதை வாசகர்களே சொல்லுங்கள். இதில் இராமராஜியமும் செய்துகொண்டால் சுத்திர னைசிவநேசன் சைவப்பத்தண்ணவணவ பாகவத கோஷ்டிகள் இவர்கள் தலைவராளமான தூண்கள் வந்து குவிந்துவிட்டன. இவ்விரண்டு கோத்திரத்திலும் பிரதானமாக ஏற்பட்டதின் காரணமாக, விகோமவிவாகமும், தழுகாயும், நயமாயுமிருக்கக்கூடிய தூண்களை ஒவ்வொரு இந்தியனும் சுலபமாய் வாங்குவதற்கு சௌகரியமேற்பட்டது. அன்னியத்தூண்களை பகிஷ்காரிப்பதென்று ஆரம்பித்தாலோ, தூண்களை வாங்கக்கூடிய ஒவ்வொருவனும் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்பட்ட சுதேசிதூண்களையேதான் அகௌரவம் வாங்கியேதீரவேண்டும். அப்படி வாங்கும்படியான இந்த சுதேசிதூண்களோ எல்லாவிதத்திலும் அதாவது விலை, ரகம், அழகு, கீர்த்தநிலைப்பு ஆகிய விஷயங்களில் அதிருப்தியையுத்தான் விளக்கக்கூடியதாயிருக்கின்றதேயொழிய, ஒருவிதத்திலாவது சந்தோஷத்தையும், திருப்தியையும் உண்டாக்கக்கூடியதாயில்லை.

உதாரணமாக, ஐப்பானிலிருந்து வரும் தூண்களை எடுத்துக்கொள்ளுவோம். சுமார் 50 அங்குல அகலமுள்ள ஒரு கஜம் தூணியானது 0-5-0 (இதுவும் சரியல்ல. 0—4—0) ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. இதே அளவில் தேசியத்தில் நீளமான ஒரு கஜம் அளவுள்ள சதர் தூணி வாங்க வேண்டியதானால், 0-15-0 அணா கொடுக்கவேண்டும். (அதற்கும் அந்தமாதிரி கிடைக்காது) எப்படியிருந்தபோதிலும் தற்காலம் உபயோகத்திலிருந்துவரும் ஆயுதங்களை கொண்டு சைகினிலுல் நூல்நூற்போமானால் என்னதான் கஷ்டப்பட்டு நூற்ற போதிலும்கூட, இரண்டிடை இன்னும் அதை ந்த விலைக்கு கதர் தூணியானது விற்கப்படுமென்று நினைப்பதற்கு இடமேயில்லை. இன்னும் விளக்கமாக உலைக்க வேண்டுமானால், கதர் தூணியை உபயோகிக்கக்கூடிய ஒருவன் குறைந்தது 100க்கு 200 வீதமாவது அதிகமாகக்கொடுத்துத்தான் நேரவேண்டும். இந்திய ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் அதே ஒரு கஜம் தூணிக்கு நாம் 0-7-0 அணாவிலிருந்து 0-8-0 அணாவரையிலும் (இன்னும் அதை வாங்கலாம்) கொடுக்கவேண்டியிருக்கிறது. இவ்வாறு நாம் கொடுத்து வாங்குவதாகயிருந்தால், அப்பொழுது நாம் 100க்கு 50 தல்லது 60 வீதம் அதிகமாகக்கொடுக்கவேண்டியிருக்கின்றது. இமாதிரியாக அதிகப்படியான விலையைகொடுத்து இத்தூணிகளை வாங்கி உபயோகிக்கின்றவர்கள் பெரும்பாலான நமது ஏழை மக்கள் தானென்றால், அப்பொழுது அன்னியத்தூணிகளை பகிஷ்காரத்திலுல் அவர்களுக்கேற்படும் அளவற்ற துன்பங்களையும், கஷ்டங்களையும் எடுத்துரைப்பதென்றால் சாத்தியமான காரியமல்ல. ஆனால் ஏழைகளனுபவிக்கும் இத்தனைகய கஷ்டங்களாலும், துன்பங்களாலும் அதிகப்படியான இலாபத்தையடைய க்கூடியவர்கள் பம்பாயிலும், அமதாபாத்திலுமுள்ள ஆலைகளின் முதலாளிகளேயாவார்கள். அது அன்னியத்தூணியாயிருக்கின்றதென்கின்றதொரு காரணத்தைக்கொண்டு, அன்னியத்தூணிகளை நாம் ஆதரிப்பதாகவாவது அல்லது அதற்காகப் பரிந்து பேசுவதாகவாவது கீழ்கள் கருதிவிடவேண்டாம். நமது ஆலைகள் சரியாக இன்னும் தருந்நதிக், போதுமான ஜமான முல்திபுஷிஸ்லாதிருப்பதாலும், உலகத்துடன் போட்டிபோட சக்தியில்லாதிருப்பதாலுமான காரணங்களுக்காகவேண்டி தூணிகளையுபயோகிக்கும் ஏழை மக்கள் அதிகமாகத்தண்டிக்கப்படக்கூடாதென்பதற்காக வேண்டிதான் நான் இதை இவ்வளவு தூரம் வற்புறுத்தியுரைக்கின்றேன். இதர தேசங்களில் உற்பத்தி செய்யப்படும் நயமானதும், விலைமலிவாயுள்ளதுமான தூணிகளைப்போல நமது காட்டிலுள்ளவர்களும் உற்பத்தி செய்யுமாதிரியே, அத்தூணிகளைப்போலவே குறைந்த விலைக்கு விற்கக்கூடுமானும், தற்பொழுது வாங்குகின்றதனும் சந்தோஷமாகவே தேசி தூணிகளையே வாங்குவதற்குப்பிரியப்படுவார்கள். அப்பொழுதுதான் மற்றெல்லாவற்றைக்காட்டிலும் இந்திய-தேசிகாமான்களையே விரும்பினவர்களுமென்னாருக்கும்தோன்றியிருக்கும்.

(4ம பக்கத் தொடர்ச்சி)

ஆகையே இராம ராஜ்யத்தை ஒரு சம்பவமாகவான் அறிந்தும் கண்டிப்பதும் எது எனறால் அன்னிய நாட்டு வியாபாரம் அதாவது தூணிகளும் இதரசாமான்களும் சோர்த்து தடுக்கப்படுவதின் பயனை ஜனங்கள் தண்டனைக்குட்படாமல் இருக்க வேண்டும் என்பதற்கேயாகும்.

(தொடரும்)

இயற்கை மத சங்கம்.

28-7-31 ந தேதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு இச்சங்கம் மதுரை மஹால் 7 நெம்பர் தெருவில் ஆசிரியர் ஜனாப் கே. சையத்அப்துல் கபூர் சாஹப் அவர்களால் திறக்கப்பட்டு அனைவரின் தயவினால், இந்த இடம் சங்கம் கிடைபெற்றது. அவர் உயர்திரு ஜனாப் பாகூசாசாஹப் பி. ஏ. அவர்கள் "சங்கத்தின் அவசியம்" என்பதைப் பற்றி சுமார் 1½ மணி நேரம் வரை சொற்பொழிவாற்றினர். பிறகு சங்கத்திலிவர்களாவர்கள் "தூய மதமே தடையின்றி எல்லோரும் எவ்வழியிருப்பினும் இச்சங்கத்தின் அங்கத்தினர்களாகச்சேரலாம்" என்ற தருத்துடன் கூடியதமது பின்னுரையைக்கூறி முடித்தபின் அங்கு விறபிருந்த எல்லா ஹிந்து முஸலீம் ஜனங்களுக்கும் தாம்பூலம் வழங்கப்பட்டு சுமார் 1 மணிக்குகூட்டம் கலைந்தது.

குறிப்பு:—இச்சங்கத்தில் சேர விரும்பு வோர்கள் கீழ் கண்ட விலாசத்திற்கு மனு செய்து கொள்ளவும்.

கே. சையத்அப்துல் கபூர் சாஹப்
இயற்கை மத சங்கத்திலிவர்
மஹால் 7 வது தெரு,
மதுரை.

ஸ்பிரிங் மெரி பட்டுப் புடவை.

இது மேலே புயர்ந்த பட்டில் உடல் முழுவதும் 2,, 3,, தள்ளி தள்ளி சரிகைப் புட்டாக்கள் விறைந்ததும், கரை, முந்தலில் தங்கச் சரிகையினால் கொடி, செடி வேலைப்பாடுள்ளது. பல அழகிய விருப்பமுள்ள கலர்களில் செய்யப்பட்டது.

18 முழம் X 45" புடவை ஒன்றுக்கு விலை ரூ. 75, 85.

மற்றும் உடல் சாதர் சரை, முகதலை சரிகை வேலைப்பாடுள்ளதும், பட்டு வேஷ்டிகள், துப்பட்டாக்கள், பச்சாலக்கள். சில்க் ஷர்டிங் பீஸ், கோட்டிங் பீஸ் முதலானதுகள் விலை நயமாய்க் கிடைக்கும்.

ஆர்டர்களை கவனித்து வி. பி. மூலமாய் அனுப்பப்படும்.

எமது விலாசம்:—

V. Raja Ram & Co., Silk Merchants,
38|203 Ramapura, Benares City. (India.)

தயவு செய்து எமது விலாசத்தை ஆங்கிலத்தில் எழுதவும்.
வியாபாரிகளுக்கு விலை பிரத்தியேகமாய் கொடுக்கப்படும்.

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம். இத
கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி. ... 0—8—0
மனு நீதி மருமம் ... 0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ... 0—2—0
சயமரியாதைத் தாலாட்டு. ... 0—2—0
சோதிடப் புரட்டு. ... 0—2—0
திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு
சொற்பொழிவு (2-பதிப்பு) ... 0—2—0
சயமரியாதைப் பாடல் ... 0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம். ... 0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை ... 0—4—0
ஞானசூரியன் ... 0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம் 0—4—0
ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம் ... 0—8—0
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு) 0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி ... 0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? ... 0—2—0
*குறள் ... 0—8—0
* இயற்கைமதம் ... 0—8—0
* சிதம்பர ரகசியம் ... 0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை. 0—4—0
* சுயமரியாதைத்தத்துவகீதங்கள் ... 0—4—0
* பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா
இல்லை—[சித்ரப்படங்களுடன் 100 பக்கங்
களுக்கு மேல் கொண்டது] ... 0—6—0
* ஆராய்ச்சி அணிகலம் 0--12--0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட் ... 2—0—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிற்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

ஏனெனில் புதிய உத்திரவுப்படி வி. பி. கள் 3 நாள்களில் வாப்பீஸ் செய்யப்படுவதால் அநேக வி. பி, கள் வாப்பீசாகிவிடுகின்றன. ஆதலால்தான் ஆர்டருடன் பகுதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

"குடி அரசு" ஏஜண்டுகள்.

R. ராமலிங்கம், வியாபாரம்
கோட்டார்.
*ராஜாத்னம், தமிழன் ஆபீஸ்,
ஆண்டர்சன் பேட்டை.
*கான்மாபாலிட்டன் ஸ்டோர்ஸ்
விருதாசலம்.
*A. V. பாலசுப்ரமணியம்
23, எடயதெரு,
திருவாரூர்.
பி. சாமுவேல் பிள்ளை,
ஜெனரல் நியூஸ் ஏஜண்ட்
தூத்துக்குடி.
*எல். மாசிலாமணி பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்,
பாலக்கரை திருச்சி.
S. குற்றாலலிங்கம் பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்
மீனாக்ஷிபுரம் திருநெல்வேலி.
S. P. கிருஷ்ணசாமி,
நாகப்பட்டணம்.
P. பழனியாண்டி செட்டியார்,
நாகூர்.
T. சேதுராயடு
சித்திரக்காரத் தெரு,
மதுரை.
K. கணபதி, சாக்கோட்டை
கும்பகோணம்.
மானேஜர், 'புதுவைமுரசு'
புதுச்சேரி.
P. R. C. எல்லப்பன்,
மரக்கடை வியாபாரம்,
கொசததெரு, காஞ்சீபுரம்:
A. S. முருகேசம், பஜார்
திண்டுக்கல்.
*T. சுப்ரமணியபிள்ளை,
3, செங்கல்வராய முதலி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை.
A. R. M. சுந்தர பாண்டியன்
கடை வீதி,
அருப்புக்கோட்டை.
G. V. ராமசாமி
பெரிய கடைவீதி,
கரூர்.
*B. தங்கசாமி, டைலர்
பெரிய கடைவீதி,
கோயமுத்தூர்.
ஹாஜிமுகமது ஷேக்உசேன்,
57. சண்ணம்புக்காரத்தெரு,
காரைக்கால்.
*M. ரத்னம்,
கிரோசினாயில் டிபோ,
நெல்லிக்குப்பம்.
K. N. தங்கவேலு,
காரியதரிசி
சமூகசீர்திருத்த சங்கம்
கல்லிடைக்குறிச்சி.
C. S. ஜோசப்
159 கேல்ஸ் ரோடு,
பெல்லூர் Cant:
M. N. M. பாலன்,
நியூஸ் ஏஜண்ட், திருப்பூர்.
S. ராமசாமி
செங்குந்தர் தெரு,
நாமக்கல்.
முத்துசாமி
நாடார் ஸ்டோர்ஸ்,
பொள்ளாச்சி.
P. S. தீவாத்னம் பிள்ளை,
2. மளாய்வீதி, ஸ்லேவ்ஜலன்டி,
கொழும்பு.
A. S. பரமசிவம்
நியூஸ் ஏஜண்ட்,
பம்பலபிட்டியா,
கொழும்பு.
எட்வர்ட்பால்
திருமலாபுரம்
செல்வராய கவுண்டர்
திருப்பத்தூர்
S. அப்பாதுரை
மண்டி, ராயபுரம்.
M. N. M. பாவலர்
நியூஸ் ஏஜண்ட்,
திருப்பாபுலியூர்
S. C. கந்தசாமி,
26, குமாரசாமி செட்டி வீதி
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.
சிதம்பரம்.
எம். கலியாணசுந்தர முதலியார்
கதர்ஸ்டோர் மேனேஜர்
சாத்தான் குளம்.
பெரியசாமி நாடார்
ஷாப் வியாபாரம்
பட்டுக்கோட்டை.
கே. சாங்பானி
கொண்டப்பநாயடுபாளையம்
ஸ்ரீவில்லிப்புத்தூர்.
பி. ஞானதேசிகம்
மாயவரம். எம். கலியாணசுந்தர
முதலியார் கதர்ஸ்டோர்.

* இந்த புள்ளியுள்ள வியாபாரிகளிடம் குடி அரசு பதிப்பு புஸ்தகங்களும் கிடைக்கும்.

கீழ்க்கண்ட நகரங்களிலுள்ள ஹிகின்பாதம் புஸ்தகசாலைகளில் குடி அரசு பிரதிகள் கிடைக்கும்.

காட்பாடி.
திருநெல்வேலி.
அரக்கோணம்.
சென்ரல் ஸ்டேஷன்
மதுரை.
மாயவரம்.
நாகபட்டணம்,
சேலம்.
தஞ்சாவூர்.
பெளரிங்பேட்டை
எக்மூர்.
ஜோலார்பேட்டை
திருச்சி.
போத்தனூர்.
ஈரோடு.

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்.

Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.
India Novel depot
73, Serangoon Road.

கோலாலம்பூர்.

R. . Naidu,
86, Ampang St
O. M. Ali Saiboo & Co,
27, Java Stree
The Selanger Stamp Co.,
Market Street.
S. S. Abdulkadir,
South Indian Boookstore,
122, Pitty street, penang
Sorojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seraman N. S.
The Central stores
61, Jalan Ibrahim,
Johore Bharu
C. Kandiah,
85, Sultan street, Klang.
S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M S

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சோ. முருகப்பா.
விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0
ஆசிரியர்: கோ. சாரங்கபாணி
விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

'நாடார் குலமித்திரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு ,, 5—0—0
ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்
விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

'சண்டமாருதம்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: அ. போன்னம்பலம்
மானேஜர், "சண்டமாருதம்"
கோட்டையூர்,
ராமநாதபுரம் ஜில்லா

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.

"முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட்,
சிங்கப்பூர்

இங்கிலீஷ் 'சிசர் விட்சு' லாட்டரி.

குதிரைப் பந்தய

14-10-31-ல் சிலூவ் மார்க்கட்டில் 'மியூட்சுவல் இளப்பாரால் நடக்கும் பிரைசுக்கு கொடுப்பது 90,000 பவுன். டிக்கட் 1-க்கு ரூ. 4-8-0. 3-க்கு ரூ. 13. டிக்கட்டிற்கு முன் பணத்துடன் முந்துங்கள்!

அதிகாரம்பெற்ற ஏஜண்டு:—
S. K. வரதராஜலு,
ஆனந்தநிலயம், திருச்செங்கோடு S. I.

அநேக பரிசுகளும், தங்க மெடல்களும், ஏராளமான நற்சாட்சிகளும் பேற்று உலகமெங்கும் புகழ்பெற்று விளங்குவதோடு 25—8—23-ல் சென்னையிலும், 14—4—27-ல் மதுரையிலும் நடந்த வைத்திய மகாநாடுகளில் இவர் மருந்துகள் முதல்தர தேவ ஔஷதங்களென தங்க மெடல்களும், வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்.

பழநி, சி. எம்.சாமி.

குருதாம்பர டானிக்

இது சகல வியாதியையும் வேரற நீக்கும் சக்தியுடையது. முக்கியமாய் சூலை, கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெண்குஷ்டம் சொரிகுஷ்டம், பொரிகுஷ்டம், விரிகுஷ்டம், எரிகுஷ்டம், கபாலகுஷ்டம், குறைநோய், இல்லட்டைக்கடி, கடிவிஷங்கள் 8-ம், ஈராம்பல் பெருவயிறு, மகோதரம், நீர்க்கவுசை அண்டவாய்வு, ஆனைக்கால், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல்கள், திரேகம் அழுகி துர்நாற்றமுடையவர்கள், ஆணிப்புண்கள், கிராணி இன்னும் அநேக விதமானகொடிய கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். 100 வேளை பல்பம் அனுபானத்துடன் விலை ரூ. 50. 50-வேளை ரூ. 25. 25-வேளை ரூ. 12-8-0. எழைகளுக்குப் பாதிவிலை. பிரயுக்களுக்கு ரேட் வேறு.



இழந்த பலத்தை திரும்பப் பெறவேண்டுமா? மூளைக்கொதிப்பும், பலஹீனமும் நீங்க வேண்டுமா? எமது **மன்மத குளிகையை** உபயோகியுங்கள்

திடகாத்திரர்களாய், வீர புருஷர்களாய், நல்ல ஆரோக்கியமும் ஆயுள் விர்த்தியு மடைந்து உலக வாழ்க்கையில் இன்புற்று வாழ்வீர்கள்.

தாது புஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம். இழந்த ஆண்மையும பலமும் திரும்பி வரும். நல்ல ஜீரணம், ஏத்தவிர்தகி, இந்திரியக்கட்டு, போகசக்தி, தாது புஷ்டி, இவற்றைத் தரவல்லது. எவ்வித பலஹீனம், தாது நஷ்டம், துரித ஸ்கலிதம், இடுப்புவலி உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீக்ஷித்தவர்களுக்கே உண்மை விளங்கும் 60 குளிகை ரூ. 5, 30 குளிகை ரூ. 3, மாதிரிக்கு கு. 20 ரூ. 2.

தரு அப்ரேக் சேந்தூரம்—நீரழிவுக்குக் கைகண்டது புட்டி 1-க்கு ரூ. 15.

பிரமேக நிவாரணி:—பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர் எரிச்சல், குத்துதல் நிர்க்கும் புட்டி 1-க்கு ரூ. 2.

குறிப்பு:— பிளைங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் அட்வான்ஸ் ரூ. 5 உடன் ஆர்டரும் வி. பி. யில்லாத தேசவாசிகள் ரூ. 2 தபால் செலவும், மருந்துக் கிரயமும் சேர்த்து முன் பணத்துடன் ஆர்டரும் அனுப்பவேண்டும்.

ஏராளமான நற்சாட்சிகளையும், மற்ற அவிழ்த்தங்களையும் சியாட்லாக்கில் பார்க்கலாம்.

வைத்திய ஆசிரியர் சி. மலையப்பசாமி, நித்தியானந்த வைத்தியசாலை, பழநி S. I.

உண்மை விளக்கம் பதிப்பதால் அச்சிடப்பட்டதென்று நாகம்மாளால் வெளியிடப்பட்டது.